# வாலிப உலகம்



Dr. லில்லியன் ஸ்டான்லி

Dr. Mrs. **லில்லியன் ஸ்டான்லி**, M.B.B.S., D.C.H.,
*மருத்துவ மிஷனரி*

*வெளியிடுவோர்:*
**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**
8,சர்ச் காலனி வேலூர் 632 006
தொலைபேசி : 0416-2242943, 2248943
<hq@bym-india.org>
www.bym-india.org

**THE WORLD OF YOUTH** (TAMIL)

Copyright 1996 Dr. LILIAN STANLEY

| | | |
|---|---|---|
| First Edition | : | January 1996 |
| Second Edition | : | July 1996 |
| Third Edition | : | May 2000 |
| Fourth Edition | : | March 2004 |
| Fifth Edition | : | January 2006 |
| Sixth Edition | : | January 2009 |
| This Edition | : | October 2012 |

இப்புத்தகம் ஆங்கிலத்திலும்
மற்றும் பல இந்திய மொழிகளிலும் உண்டு.

Printed by
Bapuji Printers
5 Kurban Ali Street
Woods Road
Chennai 600 002.

## பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | வாலிப உலகம் | ... | 5 |
| 2. | கைகொடுக்கும் காரிய சமர்த்தம் | ... | 15 |
| 3. | பயில்வோம் பண்பு! | ... | 22 |
| 4. | வசந்த காலம் | ... | 30 |
| 5. | பெத்த மனம்... | ... | 36 |
| 6. | குதூகலம் நிறைந்த நன்னாள்! | ... | 41 |
| 7. | மணமகனைத் தெரிந்தெடுப்பது மணமகளா, பெற்றோரா? | ... | 45 |
| 8. | சற்றுப் பொறுத்திருங்களேன்! | ... | 52 |
| 9. | கேலி, கிண்டல், கலாட்டா! | ... | 60 |
| 10. | மகத்தான சிறு மந்தை | ... | 64 |

# 1. வாலிப உலகம்

குழந்தைப் பருவத்திற்கு முத்தமிட்டுவிட்டு முதிர்ச்சி நோக்கி ஓடும் இடைக்காலமே வாலிபப் பிராயம். அது ஓர் அலாதி உலகம். அதன் சட்டங்களும் முறைகளும் வேறுதான். எனவே முதியோருக்கும் வாலிப ருக்கும் அடிக்கடி மோதல் ஏற்படுகிறது. இந்தியன் ஒருவன் முதல்முறை அமெரிக்காவில் கால் வைக்கும்போது படும்பாடு போல்தான் வாலிப உலகிற்குள் நுழையும் ஒருவனும் படுகிறான். வாலிப முரட்டாட்டம் அலை யாய் எழும்பி இந்தியா மீது மோதி உடைய வேகமாய்ப் புரண்டு வந்து கொண்டிருக்கிறது. இந்தச் சந்ததி வாலிபருக்கு ஆபத்துகள் அநேகம். எனவே வாலிபரும் பெற்றோரும் இவ்வுலகைப் புரிந்து கொள்ளுவது அவசியம். இது ஐந்து சிறு உலகுகளைக் கொண்டது.

## 1. சுயம் எனும் உலகு

உங்கள் எண்ணங்களெல்லாம் உங்களையே சுற்றிச்சுற்றி வண்டுபோல் பறக்கின்றன. உங்களை மாவீரனாகக் கற்பனைசெய்து லயிக்கிறீர்கள். எல்லாரும் உங்களையே பார்ப்பதாகவும் நினைப்பதாகவும் எண்ணி சீவி சிங்காரிக்கிறீர்கள். மிக்க நன்று. அதில் தவறேதுமில்லை. ஒரு சிறு பருவை யும் பெரிதாக எண்ணி கண்ணாடி முன் நேரம் கிடைக்கும்போதெல்லாம் எட்டிப் பார்க்கிறீர்கள். உங்கள் உணவு, உங்கள் பொருட்கள், உங்கள் நேரம், உங்கள் நண்பர் என்று உங்கள் உலகிலேயே மூழ்கிப் போவதால் சிலவேளை பிறரை அறவே மறந்துவிடுகிறீர்கள். விடுதலைப்பறவை போல் பறக்கத் துடிக்கும் உங்களுக்கு வீடு சிறைவாசம் போலாகிறது. பெற்றோர் தடை செய்தால் தாண்டி ஓடத் தவிக்கிறீர்கள். எனவே பெற்றோரை வெறுத்துக் கறுப்புக் கண்ணாடி வழியே அவர்களை நோக்குகிறீர்கள். இது வளர்ந்து பிரியும் அனுபவம்.



இவ்வயதில் நீங்கள் செய்வதெல்லாம் உங்களுக்குச் சரியாகத் தெரியும். பெற்றோர் காட்டும் பாதையில் செல்வதைவிட உங்களுக்கு நன்மையாய்த் தோன்றும் வழியிலேயே செல்ல விரும்புகிறீர்கள். திருத்தம் செய்தால் வருத்தம். சுடுசுடுப்பான வயதல்லவா ? ஆனாலும், ''தன் இளம்பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனிதனுக்கு நல்லது'' என்று வேதம் கூறுகிறது (புல 3:27). நுகம் என்றால் வேறொருவர் காட்டும் வழியில் செல்வது. பெரியோர் காட்டின வழியில் செல்லாமல் தன் வழியே சென்று கொடிய வியாதியினால் பீடிக்கப்பட்டுக் கதறும் ஓர் வாலிபனின் குரலைக் கேளுங்கள்: ஐயோ, போதகத்தை நான் வெறுத்தேனே, கடிந்துகொள்ளு தலை என் மனம் அலட்சியம் பண்ணினதே! என் போதகரின் சொல்லை நான் கேளாமலும், எனக்கு உபதேசம் பண்ணினவர்களுக்கு என் செவியைச் சாயாமலும் போனேனே! சபைக்குள்ளும் சங்கத்துக்குள்ளும் கொஞ்சங் குறைய எல்லாத் தீமைக்குமுள்ளானேனே!'' (நீதி 5:11-14). இயேசுவின் நுகத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். அவரது நுகம் மெதுவாயும் அவரது சுமை இலகுவாயுமிருக்கிறது (மத் 11:29,30). பெரியோர் ஆலோசனைப்படி நடப்பதே உங்களுக்குப் பாதுகாவல்.

### *பெற்றோருக்கு...*

பெற்றோர் பலருக்கு வாலிபர், வீட்டில் புகையும் பச்சை விறகு போலிருக் கின்றனர். அவர்கள் கண்ணாடி முன் நேரம் செலவழிக்கும்போதும் அழகு சாதனங்களில் பணத்தைக் கொட்டும்போதும் நாம் அலறக்கூடாது. தன்னம் பிக்கையின்றி வாலிபர் இன்றைய உலகைச் சந்திக்க இயலாது. அவர்கள் தோற்றத்தைப் பாராட்டுங்கள். கைச்செலவுக்கு உங்கள் தகுதிக்கேற்ப கொடுங்கள். வீட்டில் உதவி செய்து சிறு தொகை சம்பாதிக்க ஊக்கு வியுங்கள். அழகாயும் அம்சமாயும் அவர்கள் உடுத்தட்டும். சிகை அலங்காரம் செய்துகொண்டான், க்யூடெக்ஸ் போடுகிறாள் என்று சீறாதீர்கள். நாம் வாலிபராயிருந்தபோது இருந்தபடியே நம் வாலிபரும் இருக்க நாம் எதிர்பார்க்கக்கூடாது. உலகம் எங்கோ சென்றுவிட்டது. சுகவீனமாய்ப் படுத்திருந்தால் விசாரிக்காமலும் செல்லலாம். உங்களைப் பெற்றோரென்று வெளியே காட்டிக்கொள்ள வெட்கமும் படலாம். பரவாயில்லை. பதறாதீர்கள். சிலவேளை பெற்றோருக்கு தங்கள் வாலிபருக்கே ஆலோசனை அளிப்பது கடினமாகும். அச்சமயங்களில் தேவபக்தியுள்ள ஒரு குடும்பத்திற்கு அவர்களை அறிமுகப்படுத்திவிட்டால் அன்னார் அவரை அன்புகாட்டி அணைத்து ஆலோசனை சொல்லலாம்.

## 2. பால் உலகு

கனவு காண்பதைக் குறித்து கவலைப்படுகிறீர்கள்தானே? பகற்கனவு பாலியப் பருவத்தின் தேவையான அல்லது தவிர்க்க முடியாத தொல்லை எனலாம். பாலுணர்வு பாவமல்ல. பசியைப் போல பாலுணர்வுகளும் தேவனால் கொடுக்கப்பட்டவை. சரியான வழியில் சரியான வேளையில் பயன்படுத்தப்படுமானால் இன்ப வாழ்விற்கு ஈவு அதுவே. பகலெல்லாம் பக்கத்தாத்துப் பரிமளாவின் நினைவு! இரவெல்லாம் எதிர்த்த வீட்டு ஏர்னெஸ்டின் கனவு! தவிர்க்க முடியாமல் தவிக்கிறீர்கள். என் பாலிய உணர்வுகளை எடுத்துப்போடும்படி என் தேவனை நோக்கி ஊக்கமாய் ஜெபித்ததை நினைவு கூறுகிறேன். நல்லவேளை தேவன் என் ஜெபத்தைக் கேட்கவில்லை! அந்த தவற்றைச் செய்யாதீர்கள். உங்கள் எண்ணங் களையும் கற்பனைகளையும் தேவ கரத்தில் அர்ப்பணித்துப் பரிசுத்தமாய்க் காத்துக்கொள்ளுங்கள். அசிங்கமான சினிமாக்களையும் அருவருப்பான கதைகளையும் படித்து அதைக் கறைப்படுத்தாதீர்கள்.

நான் நம்பர் ஒன் மிஷனரி ஒருவரை மணப்பது போல கற்பனை செய்தேன். கற்பனைகளில் பறந்து ஆப்பிரிக்கக் காடுகளூடே வாழும் ஆதிக் குடியினருக்கு ஊழியம் செய்வதாகக் கனாக் கண்டேன். குடிசையில் வாழ்ந்து சிங்கங்களோடு சண்டையிட்டோம். பயித்தியமாகத் தெரிகிறதா? ஆனால் கல்லூரியில் கிறிஸ்தவரல்லாத வாலிபர் என் கரத்தை நாடினதால் நான் பலமாய் சோதிக்கப்பட்டபோது அவர் கிறிஸ்தவராயிருந்தும் மிஷனரி தரிசனமற்ற வாலிபர் தேடிவந்தபோது—மலைப் பாம்பைப் பார்த்து மருண்டவுடன், மிஷனரி சம்பளத்தை வாங்கி முறுமுறுத்த மாத்திரத்தில் வேண்டாமென்று வெளியேற்றினேன்—என் கனவுலகை விட்டு! ஆனால் திருவாளர் மிஷனரி வந்த மாத்திரத்தில் நேரே என் இதயக் கதவுக்குள் நுழைந்துவிட்டார். என் கற்பனைக் கதாநாயகனைக் கண்டுகொள்வது கடினமாயில்லை. கற்பனைகள் உங்கள் எதிர்காலத்தைக் கட்டியெழுப்பப் பயன்படுகின்றன. இன்று மிஷனரி வாழ்க்கையின் கஷ்டங்கள் ஒன்றும் பெரிதாய்த் தெரியவில்லை. அவற்றைத்தான் கனாக்கண்டுவிட்டேனே!

இந்தியக் கலாச்சாரம் பொதுவாக வாலிபரும் கன்னியரும் கலப்பதைத் தடுக்கிறது. எனவேதான் வாலிபர் பலர் தங்கள் பக்கத்து வீட்டிலுள் ளோரையும் நெருங்கிய உறவினரையும் காதலிக்கின்றனர். கூட்டங்களிலும் விழாக்களிலும் மறுபாலரிடமும் “சுகம்தானா?” என்றாவது ஒரு சில வார்த்தைகள் பகிர்ந்துகொள்ளவேண்டும். அளவுக்கு மீறி வெட்கம் தேவையில்லை. இயற்கையாக நடந்துகொள்ளுங்கள். யாரோ போல நடிக்க



வேண்டாம். கவர்ச்சிகரமாயிருக்க முயற்சியாதலால் கவர்ச்சியாயிருங்கள்! அப்படியானால் தெரிந்தெடுத்த சிலரையே அறிவீர்கள். அத்து மீறி கவர்ச்சிகரமாவதால் ஈக்களும் வந்து உட்காரப்போய் அதிலொன்று உங்கள் தலையில் விடிந்துவிடக்கூடாது! எளிமையே என் அலங்காரமாயிருந்தது. சாதா வாயில் புடவைகளையே உடுத்துவேன். எனக்குத் தெரிந்த மேக்கப் எல்லாம் பாண்ட்ஸ் பவுடர்தான். அதுவும் காலை ஒருமுறை மாலை ஒருமுறைதான் (நீங்கள் தயவுசெய்து கொஞ்சம் கூட நன்றாக இருங்கள்!). ஆனால் சாயம் பூசின என் சிநேதிகளை வாலிபர் விரும்பாதது எனக்கு ஆச்சரியமளித்திருக்கிறது. எஸ்தரைப்போல அளவோடிருங்கள் (2:15). கையடித்துக்கொடுத்துவிட்டு, புகைப்படத்தையும் கொடுத்துவிட்டு, நீண்ட நீண்ட கருத்தற்றக் கடிதங்கள் எழுதிவிட்டு பின்பு லபோ லபோவென்று அடித்துக்கொள்ளாதீர்கள். இதெல்லாம் வேண்டாம். வருமுன் காப்பது மேல். அழைக்கும் வாலிபர் பிறகே போய்விடாதீர்கள். யாரும் ஏமாற்றி விட்டால் திரும்பி எழவும் தெரியவேண்டும். வானம் இடிந்து விழுந்து விடவில்லை. உலகில் இன்னும் மேன்மையானவர்கள் உண்டென்பதை மறந்துவிடாதீர்கள்.

மறுபாலருடன் தொட்டுப் பழகுவதைத் தவிர்க்கவேண்டும். இதனால் தான் வாலிபர் திறந்த இடங்களில் பிறர் பார்வையில் இருப்பது நல்லதென்பது. நெருக்கமான உறவைத் தவிர்க்க இதுவே வழி. காம வெறியுள்ள ஆண்கள், பெண்களை விட்டு விலகுங்கள். திருமணமான ஒருவரால் தவறாக அழைக்கப்பட்டு அழிக்கப்படுதலைப் போன்ற பயங்கரம் வேறெதுவும் உண்டோ? ஞானமாய் நடத்துகொள்ளாவிடில் உங்களுக்கும் இது நேரிடலாமே. மணமான மயக்குனர் உலகில் ஏராளம். எச்சரிக்கை! (நீதி 7:6-27).

### *பெற்றோருக்கு...*

உங்கள் பத்து வயதுப் பிள்ளை மறுபாலருடனே ஒட்டிக்கொள்ள விரும்பு வதைக் கண்டு ஆத்திரமடையாதீர்கள். ஒருவேளை காதுகூசும் கேள்வி களையும் கேட்கலாம். அணைத்துக்கொண்டு ஒரு கதை மூலமாகவோ சம்பவம் மூலமாகவோ விளக்கிப் பதில் உரையுங்கள். அவர்கள் வயதிற் கேற்ற பாலியத்திற்குரிய புத்தகங்களை படிக்கக் கொடுங்கள். Dr. James Dobson எழுதிய Preparing For Adolscence என்ற புத்தகம் பயனுள்ளது. இந்தப் பொல்லாத சந்ததியில் வளரும் பிள்ளைகளுக்கு இவ்வளவாவது தெரிந்திருக்க வேண்டும். அறியாமை ஞானமல்ல.

இளம்பிராயத்தில் நெருங்கிய மேற்பார்வை அவசியம். பிள்ளைகள் எங்கிருக்கிறார்கள், யாருடனிருக்கிறார்கள் என்று பெற்றோர் நிச்சயமாய்

அறிந்திருக்கவேண்டும். வளர வளர பெற்றோர் சற்றுத் தளர்த்திக்கொடுக்க வேண்டும். உங்கள் வாலிபப் பிள்ளைகள் மறுபாலருடன் பேச, பழக எடுக்கும் ஒவ்வொரு முயற்சியையும் அடித்து வீழ்த்திவிடக் கூடாது. மெதுவாய் தட்டிக்கொடுத்து ஆலோசனை கொடுத்து நடத்த வேண்டும். குடும்ப வைபவங்கள், விருந்துகள், பள்ளி அல்லது கல்லூரி விழாக்களில் அவர் கள் பழக இடமளிக்க வேண்டும். "கூடாது" என்று சொல்லவேண்டிய சந்தர்ப்பங்களில் அதைச் சொல்ல பெற்றோருக்கு இன்னும் உரிமையும் பொறுப்பும் உண்டு. உங்கள் பிள்ளைகள் பழகும் வாலிபர் எப்படிப்பட்டவர்கள் என்று தெரிந்திருக்கவேண்டும். பிள்ளைகள் எல்லாரும் ஒரே மாதிரியல்ல என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. சிலர் அதிக நாணமுள்ளவர்கள், சிலர் சற்று இடம் அளித்தால் வரம்பை மீறுகிறவர்கள். வாலிபப் பிள்ளை களை நமக்கு நெருக்கமாய் வைத்துக்கொள்ளவேண்டிய பொன்னான ஆண்டுகள் இவை. வெளியே குடும்பமாய்ச் செல்வது, இரவு உணவிற்குப் பின் கதை பேசிக்கொண்டிருப்பது, குடும்பப் பிக்னிக், விளையாட்டுகள், நீச்சல், இவையெல்லாம் வாலிபருக்கு விருப்பம். இவ்வேளைகளில்தான் பாலியத்தைக் குறித்த விலையேறப்பெற்ற அறிவைப் புகட்டி நன்மை யானதைத் தெரிந்துகொள்ளவும் தீமையை விலக்கவும் துணுக்குகளாகக் கற்பிக்கலாம்.

## 3. கல்வி உலகு

அடிப்படைக் கல்வி, வாழ்க்கையில் மதிப்பைத் தரும். வேலைவாய்ப்பைத் தேடாத பெண்களுக்கும் இன்று கல்லூரிப் படிப்புத் தேவையாகிவிட்டது. யாரோ கட்டாயப்படுத்தினார்கள் என்பதற்காக ஒரு பாடத்தை நாம் எடுக்கக் கூடாது. உங்களுக்கு விருப்பமான பிரிவைத் தெரிந்தெடுக்கவேண்டும். நீங்கள் படிப்பதை விரும்பிப் படிக்கவேண்டும். மட்டம் போடுவது, காப்பி அடிப்பது, ஆசிரியரைக் கிண்டல் பண்ணுவது போன்றவற்றில் உங்கள் வீரத்தைக் காட்டக் கூடாது. ஒழுக்கமான நடக்கையிலும், மரியாதையிலும், படிப்பிலும் உங்கள் ஆள்தத்துவத்தைக் காட்டுங்கள். நூலகத்திற்கு அடிக்கடி சென்று உங்கள் அறிவைப் பெருக்கிக்கொள்ளுங்கள் (நீதி 2:2).

முழுமுயற்சி எடுத்தும் படிப்பில் முன்னேற முடியாவிடில் குற்றவுணர் வடையவோ மனமடியவோ வேண்டாம். அது உங்கள் தவறல்ல. தேவன் ஒவ்வொருவருக்கும் ஒரே படியில் அளக்காவிடினும் ஒரு தாலந்தாவது கொடுத்திருக்கிறார் (மத் 25:15). உங்கள் தாலந்தை, திறமையைக் கண்டு பிடிக்கவேண்டியதே உங்கள் வேலை. உங்களால் முடியாத ஒன்றைப் பின் தொடருவதில் உங்கள் பலத்தையும் நேரத்தையும் வீணாக்கவேண்டாம். நீங்கள் திறம்படச் செய்யும் காரியங்களில் சிறந்ததைத் தெரிந்தெடுத்து



அதை விடாப்பிடியாய் கற்றுத் தேறித் திகழுங்கள். முழு மனதுடனும் முழு பலத்துடனும் தாலந்தில் முன்னேற ஆவன செய்யவேண்டும். அது ஒரு விளையாட்டு, இசை அல்லது கலையாகவோ, தச்சு, பயிரிடுதல், வியாபாரம் அல்லது பண்ணை போன்ற வேலையாகவோ இருக்கலாம். தரங்குறைந்த வேலை என்று ஒன்றும் கிடையாது. மிஷனரித் தந்தை வில்லியம் கேரி செருப்புத் தொழிலாளர் என்று அறிவீர்களா? பல வாலிபர் படிக்க முடிய வில்லை என்று வீட்டில் உட்கார்ந்துகொண்டு பொழுதைப் போக்கடிக் கின்றனர். இது தீயப் பழக்கங்களுக்கும் கெட்ட சிநேகிதருக்கும் உங்களை நடத்தும். சோம்பலாக இருக்கவே கூடாது. உங்களிடம் இருப்பதைக் கொண்டு என்ன செய்ய முடியுமோ அதை செய்யத் துரிதமாய்த் திட்ட மிடுங்கள். படிப்பில் தோல்வி வாழ்வில் தோல்வியல்ல!

விளையாட்டுப் பந்தயங்களில் பங்குகொள்ளுங்கள். பலவீனருக்கு உடற்பயிற்சி கட்டாயம் அவசியம். வாலிபரின் அலங்காரம் அவர்கள் பராக்கிரமம் (நீதி 20:29). N.C.C., Scouts, Girl Guides ஏதாவதொன்றில் அங்கமாகுங்கள். சுற்றுலா, முகாம்கள், சமூக சேவையில் பங்குபெறுங்கள். பெண்கள் சமைக்கவும், வீட்டை நடத்தவும் கற்றுக்கொள்வது அவசியம்.

### *பெற்றோருக்கு...*

பிள்ளைகள் படித்தப் புகழேந்திகளாக வேண்டுமென்று மிஞ்சிய கவலை வேண்டாம். உங்கள் பிள்ளைகள் நன்றாகப் படிப்பவர்களானால் நல்லது. படிக்கட்டும். ஆனால் அவர்களால் முடியாதவற்றில் அவர்களைப் பிடித்துத் தள்ளாதீர்கள். அவர்கள் விருப்பமானதைத் தெரிந்தெடுத்துத் தொடர ஊக்குவியுங்கள். அவர்களது ஆவி, ஆன்மா, உடல் மூன்றும் சேர்ந்து வளரவேண்டும்.

வாலிபரை அவரது தோல்விக்காக குறை கூறிக் குற்றஞ்சாட்டிக் கொண்டே இருக்கக்கூடாது. அது அவர்கள் ஆவியை அணைத்து கசப்படையச் செய்யும். ஏற்கனவே புத்தக மூட்டையைச் சுமக்க முடியாமல் தள்ளாடுகின்றனர். ட்யூஷன் என்றால் கூடுதல் பளு. ஒரு வாலிபன் எங்களுக்கு இப்படி கடிதம் எழுதினான்: "தற்கொலை பாவமா? பெற்றோர் என்னை உதவாக்கரை என்கின்றனர். ஆசிரியர் முட்டாள் என்கிறார். நான் ஏன் வாழவேண்டும்?" யாருக்குத் தெரியும்? இது உங்கள் மகனாக இருக்கலாமே! அவர்களுக்குச் சாக விருப்பமில்லை, ஆனால் வாழக் காரணம் தெரியவில்லை. அவர்களது வெற்றியைப் பாராட்டுங்கள். கிரிக்கெட்டைத் தவிர வேறொன்றும் அவன் தலைக்குள் போகவில்லையா?

ஊக்குவியுங்கள்! ஒரு நாள் அவன் ரவிசாஸ்திரி ஆகலாமே! ஏதோ ஒன்றில்—ஏதாவது ஒன்றில் வாலிபர் சிறப்பெய்தட்டும். அப்பொழுதுதான் அவன் தன்மதிப்பு, தன்னம்பிக்கையோடு உலகில் நடைபோடுவான். பெண் பிள்ளைகளுக்கு வீட்டு வேலையில் பயிற்சி கொடுக்கப்படவேண்டும். அவர் களுக்கு மனைவியாதல், தாய்மை அடைதலின் கண்ணியம் ஊட்டப்பட வேண்டும். இவை நவீனவுலகில் மறக்கப்பட்ட பாடங்கள்.

## 4. நண்பர் உலகு

உங்கள் நண்பர் யாரென்று சொல்லுங்கள், நீங்கள் யாரென்று சொல்லுவேன் என்றார் ஒரு ஞானி. உங்கள் இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொள்ள நண்பர் தேவைதான். ஆனால் வேதம் திருடர், கொலை காரர், பொருளாசைக்காரர் (நீதி 1:10-19), கோபக்காரர் (22:24,25), குடிகாரர், பெருந்தீனிக்காரர் (23:20) இவர்களுடன் நட்புறவு கொள்ளவேண்டாமென எச்சரிக்கிறது. “என் பெற்றோருக்கு என் நண்பரை நான் மகிழ்வுடன் அறிமுகப்படுத்திவிட முடியுமா?” என்று சிந்தித்துக்கொள்ளுங்கள். தீய கூட்டத்துடன் சேர்ந்து தொலைந்து போகாதீர்கள். தவறு செய்ய நண்பர் தூண்டிவிடும்பொழுது மறுப்புக் கூற மலைக்கவேண்டாம். சிகரெட், மதுபானம், போதை மருந்துகளை மறுப்பதால் அவர்கள் உங்களைப் பயந்தாங்கொள்ளி எனப் பகடி செய்யலாம். ஆனால் அதுவே உங்களை தேவனுக்காக வீராங்கனைகளாக்கும். எல்லாரும் செய்கிறார்கள் என்பதால் நீங்களும் செய்துவிட முடியாது. பெரும்பாலோர் நரகத்திற்குச் செல்லும் விசாலமான வழியையே தெரிந்துகொள்ளுகிறார்கள் என்பதை மறந்து விட வேண்டாம்.

உங்களுக்கு நண்பரே இல்லையா? அப்படியானால் நீங்கள் பாலம் கட்டாமல் உங்களைச் சுற்றிக் கோட்டை கட்டியிருக்கிறீர்கள் என்றுதான் பொருள். “சிநேகிதருள்ளவன் சிநேகம் பாராட்ட வேண்டும்” (நீதி 18:24). ஒரு சிறு அன்புச் செயல் செய்வதால் நட்புறவின் முதல் படியில் அடியெடுத்து வையுங்கள்.

## *பெற்றோருக்கு...*

டெலிபோனில் அட்டைபோல் ஒட்டிக்கொண்டிருக்கும் வாலிபப்பிள்ளை தொல்லைதான். எனினும் சிறுசிறு தொல்லைகளை நாம் சட்டை செய்யா திருக்கப் பழகவேண்டும். அவர்கள் பெரியவர்கள் போல் நடத்தப்படவேண்டு மென்று விரும்புகிறவர்கள். நண்பர் முன்பாக அவர்களை மட்டந்தட்டா தீர்கள். மரியாதையுடன் நடத்துங்கள். பிள்ளைகள், நண்பர் முன்னி லையில் பெருமிதம் கொள்ளும்படி உங்கள் நடை, உடை, பாவனை இருக்க வேண்டும். வாலிபர் தம் நண்பரை வீட்டிற்கழைத்துவரும்பொழுது தேனீர்ப்



பலகாரம் பரிமாறுவதை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளுங்கள். உங்கள் வாலிபப்பிள்ளை தன் அருமையான பொருளை எடுத்துத் தன் ஆருயிர்த் தோழிக்குக் கொடுப்பதைக் கண்டு நீங்கள் அதிர்ச்சி அடையலாம் (1 சாமு 18:3,4). நெற்றியைச் சுருக்காதீர்கள்.

இருப்பினும் பிள்ளைகளைக் குடிக்கும் கூட்டத்துடன் அனுப்ப முடியாது தான். உங்கள் மறுப்பை அவன் மீறினால்? இங்குதான் உங்கள் பொறுப்பு பருவம் எய்திய உங்கள் வாலிபருக்கு மாற்றப்படுகிறது. உங்கள் நிலையில் நீங்கள் உறுதியாயிருக்க வேண்டும். கோபப்படாமல் உறுதியாயிருங்கள். தேவபக்தியில் வளர்க்கப்பட்டிருந்தால் அவர்கள் மீறுவது கடினம். அவர்கள் கத்தலாம், முறுமுறுக்கலாம், அழலாம், பேச மறுக்கலாம். ஆனால் நீங்கள் பதிலுக்குக் கத்தாமல், திட்டாமல் அமைதியாக ஜெபித்துக்கொண்டிருந்து, அவர்களையே தீர்மானிக்க விட்டுவிட்டால் பொதுவாக அவர்கள் கீழ்ப்படியவே தீர்மானிப்பார்கள்.

## 5. குடும்ப உலகு

ஒருமுறை வாலிபருக்கும் பெற்றோருக்கும் பேசிக்கொண்டிருக்கும் பொழுது வாலிபர் தம் பெற்றோரை நம்பவேண்டுமென்றேன். வாலிபர் பக்கம் ஒரே சலசலப்பு. “அவர்கள் எங்களை நேசிக்கவில்லையே” எனக் குரலெழுப்பினர். துக்கமுற்றேன். இந்நிலைக்குக் காரணர் இருவருமே. சில ஆண்டுகளுக்கு முன்புதான் அம்மா புடவையைப் பற்றிக்கொண்டே திரிந்தீர்கள். பெற்றோரின் அன்பு அரவணைப்பிற்காக ஏங்கினீர்கள். திடீரென்று அவர்கள் உங்கள் விரோதிகளானது எப்படி? நீங்கள் வளர வளர உங்கள் விருப்பங்கள் வீட்டை விட்டு வெளியே பாய்ந்தன. ஆனாலும் வேர் வீட்டில்தான் உள்ளதென்பதை மறந்துவிடாதீர்கள். பெற்றோர், சகோதர சகோதரிகளின் பொறுப்பு உங்களுக்குண்டு. இவர்களே துன்பத்திலும் இன்பத்திலும் உங்களுடன் நிற்பவர்கள். இதுவே வேதம் கூறும் “சுபாவ அன்பு” (2 தீமோ 3:2). உடன் பிறந்தோரிடம் அன்புடனும் பரிவுடனும் நடந்துகொள்ளுங்கள். பாடம் சொல்லிக்கொடுப்பதிலோ வேறெவ்விதத் திலோ உங்களாலான உதவியைச் செய்யுங்கள்.

பெற்றோர் மேலுள்ள அன்பை உங்கள் கீழ்ப்படிதலினால் காட்டுங்கள். “உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கு” உன் தந்தையையும் தாயையும் கனம்பண்ணச் சொல்லுகிறது வேதம் (எபே 6:2,3). உனக்கு நிகழ்வதெல்லாம் தீமையாக இருக்கிறதா? வேத சூத்திரத்தை முயற்சி செய்து பார்க்கலாமே. பெற்றோரிடம் மரியாதையுடன் பேசுங்கள். பெற்றோரிடமோ பெற்றோரைப் பற்றியோ பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் குறித்து எச்சரிக்கை யாயிருங்கள். ஒரு சில அன்பு வார்த்தைகளால் உங்கள் நன்றியைக்

காண்பியுங்கள். யோசித்துத் தீர்மானித்து அதைச் சொல்லிவிடுங்கள். ஏதோ ஒன்றிற்காக நன்றி சொல்லலாம், அல்லது பாராட்டலாம், அல்லது உற்சாகமூட்டலாம். பழகுங்கள். "அம்மா சாம்பார் பேஷ்" அல்லது "அப்பா, கவலைப்படாதீர்கள், அதை நான் பார்த்துக்கொள்கிறேன்" அல்லது "நன்றாகக் தூங்கினீர்களா ?" என்றாலே போதுமே. அவர்களில் காணப் படும் மாறுதலைக் கவனியுங்கள். வீட்டில் உங்களாலியன்ற சிறு சிறு உதவிகளைச் செய்யுங்கள். வீட்டில் உங்கள் முறிந்த உறவு துளிர்க்க இதுவே துவக்கமாகும்.

இவ்வுலகத்தின் இன்னல்களைச் சந்திக்க இன்னும் வலுப்பெறாத, ஏன் பால்முகம்கூட மாறாத, வாலிபரைக்கூட வீட்டை விட்டு வெளியேறச் செய் கிறான் பிசாசு. உங்கள் காதுகளில் பொய்களை ஊதுவான். பிசாசின் பொய்களை நம்பி காரிருள் வாழ்விற்குக் கப்பலேறிவிடாதீர்கள். விடுதலை நாடி வீட்டை விட்டு வெளியேறியிருந்தாலும் வீட்டு நினைவு வாட்டினால், உங்கள் தவற்றை நீங்கள் உணர்ந்தால், திரும்பி வாருங்கள். தனி நபருக்கு உலகம் பாதுகாப்பான இடமல்ல. நம்மை நேசிப்பவர்களுக்குக் கீழ்ப் பட்டிருப்பதே உண்மையான விடுதலை.

### *பெற்றோருக்கு...*

உண்மை அன்பும் கரிசனையும் வாடிப்போய்விட்ட பாலைவன உலகில் இல்லம் என்பது சுபாவ அன்பும் புரிந்துகொள்ளுதலும் ததும்பி ஓடும் குளிர் நீரோடையாயிருக்கவேண்டும். ஓயாத குற்றச்சாட்டும், சச்சரவும், பரிவான கவனிப்பின்மையும் இருக்குமானால் திரி எரியும் அணுகுண்டு போன்ற வாலிபர் எந்த நிமிடமும் வெடிக்கலாம், வெளியேறவும் செய்யலாம். வேதம், "பிள்ளைகளைக் கோபப்படுத்தாதீர்கள்" என்கிறது (எபே 6:4). வேறொரு மொழிபெயர்ப்பு, பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள்" என்கிறது. "பிள்ளைகளை மிதமிஞ்சி திருத்தாதீர்கள்" என்கிறது இன் னொரு மொழியாக்கம். பெற்றோர் எரிமலையாகக் குமுறுவது, கெட்ட வார்த்தைகளை வீசுவது, அலறுவது, பயமுறுத்துவது போன்றவை அடியோடு நிற்கவேண்டும். கோபமும் ஆத்திரமுமற்ற உறுதி அவசியம். ஏளனமாகப் பேசுவது, செய்வதிலெல்லாம் குற்றம் கண்டுபிடிப்பது, இளம் பருவக் குற்றங்களைச் சொல்லிக்காட்டுவது, பிள்ளைகளுக்குள் பாரபட்சம் பண்ணுவது, பிறர் முன் அவர்களைக் குறைவாகப் பேசுவது, கேலி, அவர்கள் சக்திக்கு மிஞ்சினவற்றில் அவர்களைத் தள்ளுவது, அன்போடு மென்மை யாகப் பேசாமல் அதிகாரிபோல் நடந்துகொள்வது போன்றவை வாலிபரை மனநோகச் செய்யும்.

அர்த்தமற்று திட்டுவார்களானால் அமைதியாக இருங்கள். வாக்குவாதம் செய்தால் முதலில் உன்னிப்பாகக் கவனித்து பின்பு அமைதியாக அமரிக்கை



யாக பதில் கொடுங்கள். அவர்களது சோம்பல், சுத்தமின்மை, அதிகத் தூக்கம், நன்றியற்ற வார்த்தைகள், கப்பல் கவிழ்ந்தது போன்ற பாவனை, இவற்றை அடிக்கடி திருத்த முற்படுவதை நிறுத்துங்கள். இதைக்காட்டிலும் பெரிய காரியங்களில் அவர்களைக் கடினமாய் நடத்தவேண்டி வருமே.

அவர்கள் அருகில் இருக்கும்போது வேலையை ஒதுக்கிவிட்டு சற்று சும்மாயிருங்கள். அவர்களுக்கு விருப்பமானவற்றைச் சமைத்துக் கொடுங்கள். இக்காலப் பெற்றோர் வேலை, சம்பாத்தியம், விழாக்கள் என்று ஓடுவதால் தங்கள் பிள்ளைகளின் தேவைக்குக் குருடராயிருக் கிறார்கள். கிரிக்கெட் அல்லது அமிதாப்பச்சன் அல்லது அவர்களுக்கு சுவையான ஏதாவதொன்றைக் குறித்துப் பேசக் கற்றுக்கொள்ளுங்கள். உங்களோடு இருப்பது அவர்களுக்கு மகிழ்ச்சியளிக்கட்டும். அவர்கள் கூறும் சில ஆலோசனைகளையும் ஏற்றுக்கொள்ளுங்கள். வீட்டுக்கதவைப் பூட்டும் நேரம் உங்கள் உடையை மாற்றச் சொல்லலாம். நீங்கள் சலித்துக் கொள்ளாமல் அதைச் செய்வது அவர்களை மதிப்பதாகும். விரிப்புகள், பாத்திரங்கள் போன்ற சில வீட்டுப்பொருட்களை வாங்க அவர்களை அனுப்புவதனால் அவர்கள் தங்கள் முக்கியத்துவத்தை உணருகிறார்கள். அவர்களை நேசிக்கிறீர்கள், அவர்கள் உங்களுக்கு தேவை என்பதைக் கூறி உங்கள் செயலால் அதை நிரூபியுங்கள்.

இரவோடு இரவாக அற்புதம் நடந்துவிட எதிர்பாராதீர்கள். தேவன் இப்பொழுதுதான் வனைந்து கொண்டிருக்கிறார். இன்னும் வர்ணம் பூசித் தீரவில்லை. அதற்குள் அவசரப்படுகிறீர்களே!

# 2. கைகொடுக்கும் காரிய சமர்த்தம்

வாழ்க்கையில் முன்னேற பல வழிகளுண்டு. சில வாலிபர் பிறரிடம் பெயர் வாங்க கண்ணாடியே கதியாய் நிற்பர். அது நல்லதுதான். சிலர் காக்கா பிடிப்பர். கொஞ்சம் காக்கா பிடிப்பதும் அவசியம்தான். இன்னும் சிலர் பச்சை நோட்டுகளை லஞ்சத்திற்காக வீசுவர். ஆனால் விரல்விட்டு எண்ணக்கூடிய வாலிபரே வெற்றிப் பாதையின் இரகசியத்தைப் புரிந்து கொண்டுள்ளனர்— காரிய சமர்த்தமே அந்த இரகசியம்!

வேதத்திலே யெரொபெயாம் என்னும் வாலிபனைக் குறித்து வாசிக்கிறோம். ''யெரொபெயாம் என்பவன் பராக்கிரமசாலியாயிருந்தான்; அவன் காரிய சமர்த்தனான வாலிபன் என்று சாலொமோன் கண்டு, யோசேப்பு வம்சத்தாரின் காரியத்தையெல்லாம் அவன் விசாரிப்புக்கு ஒப்புவித்தான்'' (1 இரா 11:28). நல்ல வேலை தேடி கொடுக்க அவனுக்குத் தகப்பன் கிடையாது. ஆகவே சாலொமோனுக்கு வேலைக்காரனாயிருந்தான் (வச 26). அவனுக்கு அதிர்ஷ்டம் அடிக்கவுமில்லை, லஞ்சம் கொடுக்கப் பணக்கத்தையுமில்லை. ஆனால் கடின உழைப்பாளியும் சமர்த்துப் பிள்ளையுமாக இருந்தான். சாலொமோனுக்கு ஆயிரக்கணக்கான ஊழியரிருந்தும் இவனது கெட்டிக்காரத்தனம் மேலதிகாரிகளின் கண்களைக் கவர்ந்தது. சீக்கிரமாக சாலொமோன் அவனுக்குப் பதவியுயர்வளித்தான்.

இந்த சாலொமோனே, ''தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்'' என்று எழுதியவன் (நீதி 22:29). யெரொபெயாமின் பிரசித்தி அதோடு நின்றுவிடவில்லை. தேவனது கடைக்கண்பார்வை அவன்மேல் விழுந்தது. நாறிப்போன சாலொமோனுக்குப் பதிலாக தன் மக்களை ஆள தேவன் யெரொபெயாமைத் தெரிந்தெடுத்தார். தீர்க்கதரிசி அகியா தன் புதுச்சால்வையை பன்னிரண்டு துண்டுகளாகக் கிழித்து யெரொபெயாமைப் பத்து எடுத்துக்கொள்ளச் செய்தான். அரசாட்சியைக் கடவுள் சாலொமோனிடமிருந்து எடுத்து பத்து கோத்திரங்களை யெரொபெயாமுக்குத் தருவார் என்பதே அதன் பொருள் (1 இரா 11:26-40).



கடின உழைப்பாளிகள் சாலொமோன் காலத்திலும் குதிரைக் கொம்பு தான். எனவேதான் இவ்வாலிபன் யாவரது கவனத்தையும் ஈர்த்தான். இன்றும் அதே கதைதான். வாலிபர் குறுக்கு வளைந்து வேலை செய்யாமல் குறுக்கு வழியைத் தேடுகிறார்கள். மோசேயின் மகனல்ல, 5 மணிக்கு வீட்டிற்குப் போக தனது கைக்கடிகாரத்தைப் பார்க்காத யோசுவாவே மோசேயின் சால்வையைப் பெற்றுக்கொண்டான். மோசேயின் பணிவிடைக்காரனாகிய இவ்வாலிபன் ''ஆசாரிப்புக் கூடாரத்தை விட்டுப் பிரியாதிருந்தான்'' (யாத் 33:11). இத்தகைய அர்ப்பணிப்பே மகிமையான எதிர் காலத்திற்கு வழிவகுக்கும்.

''சோம்பற்கையால் வேலை செய்கிறவன் ஏழையாவான்; சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும்'' (நீதி 10:4). தாவீது படையில் சேர வயது போதவில்லையோ என்னவோ, ஆனால் படையில் சேருமுன்பே யுத்த வீரனாயிருந்தான். அவன் குத்துக்கல்லாகக் காத்திராமல் தன்னைப் பயிற்றுவித்துக்கொண்டிருந்தான் என அதிலிருந்து தெரிகிறது. இந்தச் சுயக்கட்டுப்பாடுதான் கோலியாத்தின் காரியத்தில் அவனைப் படையிலும் மிஞ்சச் செய்தது. படிப்படியாக அரியணை ஏறினான்.

''ஜாக்கிரதையுள்ளவர்களுடைய கை ஆளுகை செய்யும்; சோம்பேறியோ பகுதிகட்டுவான்'' (நீதி 12:24). பகுதிகட்டுவதென்பது விரட்டி வேலை வாங்கப்படுவது. ஆம், தானாகச் செய்யாத சோம்பேறி பகுதிகட்டத்தான் சரி. வெகுசில வாலிபரே தங்கள் எதிர்காலம் தங்கள் கையில்தான் உள்ளது; விதியை மதியால் வெல்லலாம் என அறிந்துள்ளனர்.

கதிரவன் உங்களைப் படுக்கையில் காணக்கூடாது. ஐந்து மணிக்கு எழுந்து எட்டு மணிக்கு டிப்டாப்பாக இருக்கவேண்டும். அதிகாலையில் எழாதவன் நாள் முழுவதும் நொண்டுவான். விடுமுறை நாட்களையும் வீணடிக்கக்கூடாது. விடுமுறை சோம்புவதற்கல்ல. வேலை மாற்றமே விளையாட்டு. ஆகவே, உட்கார்ந்து படிப்போர் உடலை வளைக்கும் வேலை பழக வேண்டும். வாய்ப்புகளைப் பயன்படுத்தி கூடுமானதையெல்லாம் பயிலுங்கள். எல்லாவற்றிலும் கொஞ்சம் தெரிந்திருப்பது எதிர்காலத்திற்கு உதவும். கட்டிட வேலை நடந்தால் கொஞ்சம் கைத்திறனைக் காட்டுங்கள். அச்சு வேலையில் உதவிசெய்து படியுங்கள். வீட்டு வேலைகளில் செய்யக்

கூடியதைச் செய்து பெற்றோருக்கு சற்று ஓய்வு கொடுங்கள். கூடுமானால் அப்பாவோடு அவரது வேலைத்தலத்திற்குச் சென்று வாருங்கள். கிராம ஊழியத்தில் கலந்துகொள்ளுங்கள். ஒருநாளில் செய்யக்கூடியதைக் காட்டிலும் சற்றுக் கூடுதலாக வேலை எடுத்தால் வேகமாக அசைவீர்கள். அதனால் சுறுசுறுப்பாகக் காணப்படுவீர்கள்.

கொடுக்கப்பட்ட வேலையை வேகமாகவும் குறைவின்றியும் நிறைவேற்றுங்கள். ஒருவர் ஒரு குறையை சுட்டிக்காட்டினாலும் அல்லது இன்னும் சிறப்பாகச் செய்யக் காட்டிக்கொடுத்தால் எரிச்சலடையாமல் அவ்வித்தையைக் கற்றுக்கொள்ளுங்கள். கவலையீனமான அரைகுறை வேலை குழியில் தள்ளும். காரியசமர்த்தமென்பது கடின உழைப்பு மட்டுமல்ல. அது நுணுக்கமாய்க் கவனித்து கருத்தாய் ஒரு வேலையை விடாப்பிடியாகச் செய்து தீர்ப்பது. வீட்டை சுத்தம் செய்யச் சொன்னால் அதைக் கூட்டி விட்டால் போதாது, ஒட்டடை அடிக்கவேண்டும். மேசை நாற்காலிகளைத் துடைத்து, ஜன்னல்களைத் துடைத்து, கழிவறை, குளியலறைகளைத் தேய்த்துக் கழுவிவிட்டு, தட்டுமுட்டுகளைக் கழுவித் துடைத்து, குடிக்கத் தண்ணீர் வைத்து, பூச்சாடியில் பூ வைத்து, வேறு எதுவும் செய்ய இருக்கிறதாவெனப் பார்க்கவேண்டும். அதையும் செய்து வேறு எதுவும் இல்லாதவரை செய்து முடிக்கவேண்டும். நன்றாகச் செய்ததை மேன்மையாகச் செய்யலாம். மேன்மையாகச் செய்ததைச் சிறப்பாகச் செய்யலாம். சிறப்பாகச் செய்ததை இன்னும் உசிதமாக்கலாம்.

தரத்தை எட்டும் ஓட்டத்திற்கு வரம்பு கிடையாது. நம் நாட்டில் முகப்பவுடர் டின்னைத் திறக்க ஆணியும் சுத்தியலும் வேண்டும். அடிகுறுகிய டம்ளர் கவிழ்ந்து கொட்டி கலாட்டாவாகாத விருந்து கிடையாது. பயணத்திற்கு எண்ணை பாட்டில் கொண்டுசென்றால் துணிகளெல்லாம் அபிஷேகிக்கப்படும். தீப்பெட்டியைத் திறக்க முடியாது; திறக்கும் போராட்டத்தில் பிய்த்துக் கொட்டி பொறுக்கவேண்டும். இப்படிப்பட்ட எண்ணிலடங்கா விபரீதங்களைக் குறித்துவையுங்கள். சற்று யோசித்து மேன்மையாகச் செய்ய ஆளில்லையோ? தரத்தை முன்னேற்றத் தாகம் வேண்டும். இன்னும் கொஞ்சம் முன்னேற்றக் கூடுமானால் அதற்குக் குறைவாக நிறுத்தாதீர்கள். புகழ் எதிர்பாராமல் செய்துகொண்டேயிருங்கள். தான் ஒருநாள் ஷேக்ஸ்பியராவாரென்று தெரியாமல்தான் ஷேக்ஸ்பியர் உழைத்தார்.

ஒரு விண்ணப்பப் படிவம்கூட உங்கள் புகழ்பாடும். சுத்தமான தாளில் பக்கக் கோடிட்டு தெளிவாக எழுதப்பட்டிருக்கும் விண்ணபம், விண்ணப்பித்தவர் எப்படிப்பட்டவரென்று கவிபாடும். கொஞ்சத்தில் உண்மையாயிருந்



தால் அநேகத்தின் மேல் தேவன் உன்னை அதிகாரியாக்குவார் (மத் 25:23). யெரொபெயாம் வேலைக்காரனாய் இருந்து பின்பு ஒரு கோத்திரத்தை மேற்பார்க்கிறவனானான். பின்பு தேவன் அவனை இராஜாவாக்கினார்.

தாழ்விலிருந்து வாழ்வின் உச்சத்திற்கு வந்த சிலரை நேர்முகம் கண்டு துருவிக் கேட்டுப்பாருங்கள். வெற்றிக்கு லிஃப்ட் கிடையாது; படிக்கட்டுதான் உண்டு என்பதைக் கண்டுபிடிப்பீர்கள். பட்டதாரியொருவனைக் கொஞ்சம் விறகு வெட்டித் தரச் சொன்னால் அவன் தன் ஜீன்சையும் டி-ஷர்ட்டையும் மாறிமாறிப் பார்க்கிறான். பின் கூலியாள் ஒருவனுக்குக் காசைக் கொடுத்து வேலையை முடிக்கிறான். சோபாவில் படுத்து TV பார்த்துக் கொண்டிருக்கும் மகளைத் தாய் அடுக்களையில் உதவிக்குக் கூப்பிட்டால், "ஏன், வேலைக்காரி இல்லையா?" என அசையாமல் கூவுகிறாள். நாளை உலகின் சோளக் காட்டுப் பொம்மைகள் இவர்கள். வாழ்வில் சிறப்புற விரும்புபவர்களுக்கு TV, கதைப்புத்தகங்கள், பிந்தித் தூங்குதல், பிந்தி எழுதல், தூக்கத்தை விரும்புதல், வீண்பேச்சு, பெருந்திண்டி இவை சிறு நரிகளாம். உங்கள் சாயலைக் கறைப்படுத்தி, எழுதப்படவிருக்கும் உங்கள் சுயசரிதையின் பொன்னேடுகளை கிழித்தெறிபவை இவை.

யோசேப்பு அடிமையாக விற்கப்பட்டான். எனது மாமா ஒருவர் சிறைச்சாலைகளுக்கு DIGயாக இருந்தபோது பிரம்மாண்டமான ஆசாமிகள் கழிவறைகளைக் கழுவிவிடுவதைக் கண்டு பரிதபித்திருக்கிறேன். யோசேப்பின் துவக்கமும் அப்படித்தானிருந்திருக்கும். கீழ்த்தரமாய்த் தோன்றும் வேலைகளையும் திறம்படச் செய்து தன் அதிகாரிகளை அதிரடிக்க முடிந்தது அவனால். ஒருவேளை தன் வேலையைச் சீக்கிரமாய் முடித்துப் பிறருக்கு உதவிசெய்து தன் மேலதிகாரிகளை வியப்பிலாழ்த்தியிருக்கலாம். எனவே போத்திபாரின் வேலைக்காரனும் பின் அவனது வீட்டு விசாரணைக்காரனுமானான் (ஆதி 39:4). சிறையிலடைக்கப்பட்ட இருண்ட சூழ்நிலையிலும் சிறைசாலைத் தலைவனின் நம்பிக்கைக்குரியவனானான். ஒருநாள் பார்வோனின் முன்னால் நின்று அவனது முத்திரை மோதிரத்தையும் பெற்றான் (ஆதி 41:42). அவனுக்கு லக்கடித்ததோ? இல்லை, 13 ஆண்டுகள் முக்கியடித்து முன்னுக்கு வந்தவன் (ஆதி 37:2; 41:46). பணக்காரத் தந்தையின் செல்ல மகன், சூழ்நிலை மாறியபோது பழக்கப்படாத கடின வேலைக்குத் தன் கழுத்தைக் கொடுத்தான். தம்பித் தங்கையரே, கடின வேலைக்கு உங்களைப் பழக்குவிக்க என்றுமே பிந்திப்போகவில்லை. மனமிருந்தால் போதும், மார்க்கம் இல்லாமல் போகாது. பலமென்பது உடலுறம் மட்டுமல்ல; உடைத்தெறிய முடியாத உள்ளத்தின் உறமும் கூட.

“சோம்பேறி தான் வேட்டையாடிப் பிடித்ததைச் சமைப்பதில்லை; ஜாக்கிரதையுள்ளவனுடைய பொருளோ அருமையானது” (நீதி 12:27). சோம்பேறி எப்படி வேட்டையாடுவான்? வாலிபர் தமக்கு விருப்பமானதைத் தலைகுப்புற நின்றாகிலும் செய்வர். விருப்பமில்லாததைச் செய்யச் சொன்னால் நெளிவர். வேட்டையாடுவது குதூகலமானது; சமைப்பதோ குதூகலமற்றது. “இது என் வேலையல்ல, நான் டாக்டர், எஞ்சினியர், M.A. அல்லது M.Phil., என்று வாலிபர் பாட்டுப் பாடக் கூடாது. “செய்ய விருப்பமில்லாத ஒரு வேலையை ஒவ்வொரு நாளும் கட்டாயமாய்ச் செய்யவேண்டும். கடமையைக் கஷ்டமின்றி செய்யும் பழக்கத்திற்கு அதுவே நன்னெறி” என்றார் மார்க் ட்வேயின். உன் வாழ்வின் வெற்றியையும் தோல்வியையும் இப்பழக்கமே தீர்மானிக்கலாம். “சோம்பேறியுடைய ஆத்துமா விரும்பியும் ஒன்றும் பெறாது; ஐக்கிரதையுள்ளவர்களுடைய ஆத்துமாவோ புஷ்டியாகும்” (நீதி 13:4). திருவள்ளுவரும் அதைத்தான்—

*முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை*
*இன்மை புகுத்தி விடும்.*

என்று சொல்லியிருக்கிறார்.

“ஜாக்கிரதையுள்ளவனுடைய நினைவுகள் செல்வத்திற்கும், பதறுகிறவனுடைய நினைவுகள் தரித்திரத்திற்கும் ஏதுவாகும்” என்று வேதம் சும்மா சொல்லவில்லை (நீதி 21:5). ஜாக்கிரதையாய்த் திட்டமிடத் தவறுகிறவன் தவறத் திட்டமிடுகிறான். நங்கையொருத்தி பதட்டத்தில் முக்கியமான சான்றிதழ் ஒன்றை விட்டுச்சென்றதால் வீட்டிற்கு விரைகிறாள். பஸ்ஸைத் தவறவிட்டு, நேர்முகத் தேர்வுக்குப் பிந்தியதால் வேலை வாய்ப்பை இழக்கிறாள். அதோடு பிரகாசமான எதிர்காலத்தையும் நழுவவிட்டு விட்டாள். முந்தின இரவே ஆயத்தம் செய்திருப்பாளானால்...! மறுதினத்தை மனதிலாவது திட்டமிட்டு ஓரிரு பெரிய வேலைகளை முடிக்க நிர்ணயம் செய்யுங்கள். படிவங்களைக் கவனமாய் நிரப்புவதும், வாயால், தொலைபேசியால், கடிதத்தால் கடத்தப்படும் செய்திகளைக் கவனமாய்க் குறிப்பதும் கற்கவேண்டிய ஓர் ஒழுங்கு. “அடடா, அப்படியா சொன்னீர்கள்? இப்படிச் சொன்னீர்களென்றல்லவா நினைத்தேன்” என அசடு வழியக்கூடாது. தமக்கு உதவி செய்து கொள்ளாதவர்களுக்கு தெய்வம் உதவுவதில்லை. ஒரு காரியத்தைச் செய்ய இரண்டுமுறை சொல்ல இடம் வைக்காதீர்கள். எதிர்ப்பார்க்கப்படுவதைவிட சற்றுக் கூடுதலாகவே செய்யுங்கள். “ஐயையோ மறந்துவிட்டேனே” என்ற வார்த்தைகளை தயவுசெய்து மறந்து விடுங்கள்.



பவுல் தன் ஊழியத் துவக்கத்திலிருந்தே தீத்துவை அறிந்திருந்தான் (கலா 2:1). பல வருடங்களாக அவனைக் கவனித்த பவுல், “அநேக காரியங்களில் ஜாக்கிரதையுள்ளவனென்று நாங்கள் பலமுறை கண்டறிந்தவன்...” என்று எழுதுகிறான் (2 கொரி 8:22,23). தன் கூட்டாளி, உடன் வேலையாள் என்று எழுதும் முன்பாக தலைவன் தன் பொறுப்பிலிருப்பவனை எத்தனை நுணுக்கமாய்க் கவனிக்கிறான் பாருங்கள். ஜாக்கிரதையான கூட்டாளியாயிராதவன் ஜாக்கிரதையான தலைவனாக முடியாது. ஆக, தான் ஜாக்கிரதையாகக் கவனித்துவந்த மக்கெதோனியருக்குப் பொறுப்பாக அமர்த்தப்பட்டான். (2 கொரி 8:16,17). அவன் தன் ஆடுகளின் நிலைமையை நன்றாய் அறிந்து தன் மந்தைகளின் மேல் கவனமாயிருந்தான் (நீதி 27:23). ஆகவே பட்டணங்கள்தோறும் மூப்பரை ஏற்படுத்தும் பெரும்பணிக்கு உயர்த்தப்பட்டான் (தீத் 1:5).

விரிப்பிற்கு அடியிலும் கூட்டுகிறவன் ஒருநாள் நிச்சயம் கம்பளம் விரிக்கப்பட்ட வீட்டிற்குச் சொந்தக்காரனாவான்!

## காரியசித்தி

காரியசித்தி என்பது தேவனால் வரும் ஆசி. தேவனை நம்பாதோர் கைராசி என்பார்களே அதுதான். காரியசித்தியில்லாத காரியசமர்த்தம் ஒன்றுமில்லாமல் போகும். யெரொபெயாமுக்கு நடந்தது அதுதான். தீர்க்கன் அகியா, இருவரும் தனித்திருக்கும்போதுதான் யெரொபெயாமுக்கு தேவவார்த்தையைச் சொன்னான் (1 இரா 11:29). பின் சாலொமோனுக்கு எப்படி அது தெரியவந்தது? (வச 40). யெரொபெயாம் அகந்தையாய்ப் பேசிக் கலகம் பண்ணியிருக்கலாம் (வச 26). தன் வேளைக்காய்ப் பொறுமையாய்க் காத்திராமல் அரியணையைக் கைப்பற்ற மாம்சீக முறைகளைக் கையாண்டான். சாலொமோன் அவனைக் கொல்லப்பார்த்தபோது எகிப்திற்கு ஓடிப்போனான். சாலொமோன் மரித்ததும் அவன் திரும்பி வந்தபோது தேவன் பத்துக் கோத்திரங்களை அவனுக்கு அளித்தார்.

தேவன் தமது கட்டளைகளை யெரொபெயாம் கைக்கொண்டு நடந்தால் அவனை ஆசீர்வதிப்பதாகத் தெளிவாகக் கூறியிருந்தார் (11:38). ஆனால் அவன் பத்துக் கோத்திரங்களுக்கு அரசனானபோது எங்கே மக்கள் எருசலேமுக்கு ஆராதிக்கப்போய் ரெகொபெயாமைப் பற்றிக்கொள்வார்களோவென உள்ளூரப் பயந்தான். ஆகவே இரண்டு பொன் கன்றுக்குட்டிகளை வார்த்து, ஒன்றைப் பெத்தேலிலும் மற்றொன்றைத் தாணிலும் வைத்து, “நீங்கள் எருசலேமுக்குப் போகவேண்டாம். இந்த தேவர்களையே வழிபடுங்கள்” என்று மக்களிடம் கூறினான் (12:28-29). தேவன் கோபமூண்டவராகி அவனை முற்றிலும் அழித்துப்போட்டார்.

காரியசமர்த்தனாகத் தெரிந்துகொள்ளப்பட்ட மனிதனது பரிதாப முடிவைப் பாருங்கள். நீங்கள் பலசாலியாகவும், உழைப்பாளியாகவும், சமுதாயத்தில் பெயர்பெற்றவராகவும், அறிவில் தேறினவராகவும் இருக்கலாம். ஆனால் ஆன்மீக சிந்தையில்லாவிடில் சித்திக்கமாட்டீர்கள். நாம் கையிட்டுச் செய்யும் காரியங்களைக் கர்த்தர் ஆசீர்வதிக்கவேண்டும். யோசேப்பும் தானியேலும் தாவீதும் காரியசமர்த்தராயிருந்தனர். ஆனால் தேவன் அவர்களோடிருந்து அவர்கள் செய்தவற்றை வாய்க்கப்பண்ணினதினாலேயே காரியசித்தியுள்ளவர்களானார்கள் (ஆதி 39:3,23; தானி 6:28; 1சாமு 17:37; 16:18). ஆராதனை வேளையில் கர்த்தர் உங்கள் உதடுகளில் அல்பாவும் ஒமேகாவுமாயிருக்கலாம். ஆனால் அவரே உங்கள் வாழ்வின் "அ" முதல் "ஃ" வரையானவராயிருக்கிறாரா? உங்கள் பாடப் புத்தகங்களைப் படிப்பது போல கர்த்தருடைய புத்தகத்தைக் கருத்தாய்ப் படித்து கவனமாய்க் கீழ்ப்படிகிறீர்களா?

தேனீக்களாய் உழைத்த பலர் தேவனுடைய வழியில் நடவாதபடியால் ஓட்டாண்டியாயினர். தேவபக்தியுள்ள பலர் சோம்பித் திரிவதால் ஒன்றும் சாதிக்காமல் விதியை நொந்து வாழ்கின்றனர். நமக்கு இரண்டுமே தேவை. நாம் பாடுபட்டு உழைக்க வேண்டும், பக்தியாயும் வாழவேண்டும். குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும் — அது நமது வேலை. ஜெயமோ கர்த்தரால் வரும் (நீதி 21:31). நாம் பிரயாசப்பட்டு வீடு கட்டவேண்டும். அப்பொழுது அதைக் கட்டி முடிக்க கர்த்தர் அருள் புரிவார். காவலாளி பாதுகாவலுக்காக ஜெபித்துவிட்டுத் தூங்கிவிடக்கூடாது. அவன் விழித்திருந்து காவல் காக்கவேண்டும். தான் விழித்திருந்து காவல் காத்தால் எல்லா ஆபத்தையும் தவிர்க்கலாம் என்றும் அவன் எண்ணிவிடக் கூடாது. தேவனிடம் பாதுகாவலுக்காய்க் கெஞ்சவேண்டும். அப்போது எல்லாம் நலமாகும் (சங் 127). "நீங்கள்" வேலை செய்யாவிட்டால் ஒன்றுமே நடக்காது என்பதுபோல வேலை செய்யவேண்டும். "கர்த்தர்" கிரியை செய்யாவிட்டால் காரியம் கைகூடாது என்பது போல ஜெபிக்கவேண்டும்.

பிறர் தடுக்கி விழும்போது நாம் தாவிச் செல்வது எப்படி? எளிய இரகசியம்தான் — காரியசமர்த்தமும் கர்த்தரது ஆசீர்வாதமுமே!



# 3. பயில்வோம் பண்பு

பண்பாடற்ற ஒருவரை பல்லில்லாத ஆணழகனுக்கோ வழுக்கையான சுந்தரிக்கோ ஒப்பிடலாம். விருந்திற்குப் போய் இடைவிடாமல் தொண தொணக்கும் ஒருவர் அருகில் மாட்டிக்கொண்டு ஏன்தான் போனோமோ என நொந்துகொள்கிறோம். நல்லதையெல்லாம் மறந்துபோய் இறுதியில் மனதில் நிற்பது பண்பாடற்றவர்தான். துக்ககரமாக, நம்மையும் நமது பண்பாடற்ற நடக்கை அவ்வப்போது குப்பைத் தொட்டியில் கொட்டினதுண்டுதானே? பிறர் விரும்பும் பண்பாடின்றி "மனிதர் தயவில்" இயேசுவைப் போல் வளர முடியாது. பணிவோடும் கனிவோடும் எப்போதும் நடந்து கொண்டால் நமது சில பண்பாடற்ற நடக்கைகளைப் பிறர் கண்டுகொள்ளமாட்டார். இருப்பினும் கண்ணியமற்ற பண்பாடுகளைக் களைந்து நற்பண்பாடுகளில் தேறும்போதுதான் புகழேணியில் படிப்படியாக ஏறுவோமென்பதில் ஐயமில்லை.

## தனிப் பழக்கங்கள்

அதிக வெட்கப்படுமொருவர் சுய நம்பிக்கையில்லாதவராகையால் பிறரோடு சரளமாகப் பழகார். யாரோடு பேசுகிறோமோ அவர்களது கண்களைப் பார்த்து தைரியமாகப் பேசப் பழகவேண்டும். தினமும் குளித்து சுத்தமான ஆடை மாற்றவேண்டும். ஆள் பாதி ஆடை பாதி என்பது மெய்தான். ஆண்கள் தினமும் முகச்சவரம் செய்வதவசியம். தலையைச் சொறிவதும், ஈர்பாய்ந்த கூந்தலும், அழுக்கு நகங்களும், மை படிந்த விரல்களும் காண்போருக்கு கண்வலி. மூக்கைச் சிந்தி சுவற்றில் துடைப்போரைப் பற்றி என்ன அபிப்பிராயம் கொள்வீர்கள்? கைக்குட்டையைப் பயன்படுத்துங்கள். பிறர் முன்னிலையில் மூக்கு, பல், காது குடைவது நல்லதல்ல. கொட்டாவி, இருமல், தும்மலை அடக்கமுடியாவிடில் கைக்குட்டையால் வாயைப் பொத்திக்கொள்வது நல்லது. இக்காலத்தில் யார் எங்கே வீடியோ காமிராவைத் திருப்புகிறார்கள் என்று சொல்ல இயலாது.

நடக்கும்போதும் உட்காரும்போதும் நிற்கும்போதும் உங்களது பாவனையைக் குறித்துக் கவனமாயிருங்கள். முதுகெலும்பு நேராக இருக்கட்டும். கால்களை அகல விரித்து உட்காருவதும், துணி பொம்மை போல் நிற்பதும் பிறரைத் திரும்பிக்கொள்ளச் செய்யும் காட்சிகள். அதற்காக சிப்பாய்போல் இருக்கவேண்டுமென்பதில்லை. உங்களையே நினைத்துக் கொண்டு செயற்கைப் புன்னகையோடு வெள்ளையர்போல் பேச முயற்சிக் காமல் உங்களுக்கே உரித்தான இயற்கையோடு இருப்பதே கவர்ச்சிகர மானது. அளவுக்கு மீறிய மேக்கப் அழகைக் கெடுக்கும். வீட்டை விட்டு வெளியேறும்போது மணப்பெண்ணைப் போலும் மணமகனைப் போலு மிருக்கவேண்டும். பணிவே இயல்பாகும்வரை பணிவை பயிற்சியுங்கள்.

**மனை**

வீட்டிற்கு வெளியே சீரிய பண்பாடுள்ளோர் பலர் வீட்டிற்குள் சீறி விழுவது சீரியஸ் பண்பாடின்மை. வீட்டில் விருந்தினர் இருந்தாலும் இல்லாவிடினும் பண்பாடு நடப்போரே கண்ணியமானவர். துயிலெழுந்ததும் முதல் வேலை யாகப் படுக்கையைச் சரிசெய்வது நாள் முழுவதும் துடிப்புடனிருக்கச் செய்யும். நாளையே செய்து பாருங்கள். காலைக்கடன்கள் முடிந்ததும் பரட்டையாகத் திரியாமல் தலைவாரி முடித்து, சீப்பிலுள்ள முடிகளை எடுத்து விரலில் சுற்றிக் குப்பைத் தொட்டியில் போடுங்கள். பின்புதான் மற்றக் காரியங்களைச் செய்யுங்கள். கழிவறையில் நன்கு தண்ணீர் ஊற்றி கறைகளைப் போக்கி சுத்தமாக வைக்கவேண்டும். பிள்ளைகளை ஒரு போதும் மலம், சிறுநீர் கழிக்க தெருவிற்கு அனுப்பவே அனுப்பாதீர்கள்.

ஈரத்துண்டை குளியலறை ஓரத்தில் எறிந்துவிட்டுப் போகாமல் கொடியில் விரித்துக் காயப் போடவேண்டும். அழுக்குத் துணிகளை அதற்குரிய இடத்தில் போடவேண்டும். குளியலறைத் தரையிலோ முகங்கழுவும் பேசினிலோ துப்பியிருந்தாலும் சீந்தியிருந்தாலும் அதைத் தேய்த்துக் கழுவிவிடாமல் செல்லக்கூடாது. இவ்வேலைகள் தாயோ, மனைவியோ, வேலைக்காரியோ செய்ய ஒதுக்கப்பட வேண்டியவையல்ல. ஒரேயொரு குளியலறைதான் உண்டென்றால் உள்ளே ஆடல் பாடலின்றி அவசரமாய் வெளியேறுங்கள்.

குடும்ப அங்கத்தினரை விருந்தினர் போலவும் விருந்தினரைக் குடும்ப அங்கத்தினர் போலவும் நடத்தவேண்டுமாம். வாக்குவாதங்கள் தவிர்க்க முடியாதவை. ஆனால் அவை நாகரீக வரம்பை மீறக்கூடாது. மனைவி, பிள்ளைகளை உணர்வுள்ளவர் போல் நடத்தாமல் உடமைகள் போல



பாவிப்பது கொடுமை. அப்படியே இல்லத் தலைவனை இளக்காரமாக நடத்தும் கீழ்ப்படியாத மனைவியும் பிள்ளைகளும் காட்டுமிராண்டிகள். ''மன்னித்துக்கொள்ளுங்கள்... தயவு செய்து... நன்றி'' போன்ற வார்த்தை களை வெட்கமின்றி தாராளமாகப் பயன்படுத்துங்கள்.

ஒவ்வொருவருடைய தனிமையும் மதிக்கப்படவேண்டும். அடுத்த வருடைய அறைக்குள் நுழையும்முன் கதவைத் தட்டி அழைப்பிற்குக் காத்திருங்கள். திறந்த கதவுகள், ஜன்னல்கள், திரைகள் வழியாகக் கண்ணோட்டமிடுவதும் ஒட்டுக் கேட்பதும் தவறு. பிறரது கடிதங்களைத் திறப்பதும், நாட்குறிப்பேடுகளை வாசிப்பதும் மனச்சாட்சிக்கு ஒவ்வாத காரியங்கள். குறுகுறுப்பை அடக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். ஒருவரது தனிப்பட்டப் பொருட்களை அன்னாரது உத்திரவின்றி பயன்படுத்தக் கூடாது. அம்மா, அப்பா, கூப்பிட்டால், ''ஆங்'' ''ஊம்'' என்று பதிலளிக் காமல், ''என்னம்மா ?'' ''என்னப்பா ?'' என்று பதில் கொடுக்கப் பழகுங்கள். எதற்கெடுத்தாலும் முனங்கவும் குறைகூறவும் பழகாமல் என்னிலையிலும் சமாளித்துக்கொள்ளப் பழகுங்கள்.

ஒருவரையொருவர் புண்படுத்தும்படியான கேலி, கிண்டலைத் தவிர்க்கவேண்டும். பிள்ளைகள் விருப்பம்போல பொருட்களை விசிறி விட்டு அம்மா வீட்டை ஒழுங்குசெய்ய எதிர்பார்ப்பது நியாயமல்ல. பிள்ளை கள் வளர வளர தங்கள் துணிகளைத் தாங்களே துவைக்கவும், தேய்க் கவும், வீட்டைச் சுத்தம் செய்யவும், சற்று சமைக்கவும், தங்கள் காரியங் களைத் தாங்களே பார்த்துக்கொள்ளவும் பழகாவிடில் தொல்லைதான்.

## சந்திப்பு

ஒருவர் உங்களை வேறொருவருக்கு அறிமுகப்படுத்திவிடும்போது ''ஹிஹி'' என்று நெளியாமல் சற்று கைகொடுத்து ''என்ன செய்கிறீர்கள் ? வீடு எங்கே ? பிள்ளைகள் படிக்கிறார்களா ? நான் இன்னது செய்கிறேன்'' என்று நாலு வார்த்தை கலகலப்பாகப் பேசவேண்டும். இந்தியாவில் எங்கும் புரிந்துகொள்ளப்படும் கைகூப்பி வணக்கம் செய்வது ஒழுங்கு. உங்க ளுக்குத் தெரிந்த ஒருவரைச் சந்திக்கும்போது உங்களுடன் இருக்கும் புதியவரை அவருக்கு அறிமுகப்படுத்தவேண்டும்.

**உரையாடல்**

இயற்கையாயிருங்கள். சத்தத்தை அடக்கி சரியான தொனியில் பேசப் பயிலுங்கள். டாம்பீகத் தோரணையோடு மூச்சு விடாமல் பேசாதீர்கள்.

மற்றவர்களும் உரையாடலில் கலந்துகொள்ளத் தருணமளியுங்கள். ஒருவர் மிகவும் வெட்கப்படுபவரானால் ஒரு கேள்வி கேட்டோ அல்லது அவரது கருத்தைக் கேட்டோ அவரையும் உரையாடலில் நயமாக இழுத்துவிடுங்கள். ஒருவர் பேசும்போது முகபாவனையோடு கேட்டுப் பதிலளியுங்கள். ஒருவரை மட்டந்தட்டுவதோ ஜம்பமடித்துக்கொள்வதோ அநாகரீகம். யோசிக்காமல் பேசியதால் ஒருவரைப் புண்படுத்திவிட்டால் ஒத்துப்போக முடியாவிட்டாலும் மனத்தாங்கலின்றி வேறுபடுவது சாத்தியமே. "அது எனக்குத் தெரிந்தது தானே, அதற்கு மேலேயே தெரியும்" என்பது போன்ற பாவனை நண்பன் முகத்தில் அறைவது போன்றது. வாக்கியத்திற்கும் வாக்கியத்திற்கும் இடையில் "அஅஅஅ" என்று இழுக்காமலிருக்கப் பாருங்கள்.

குற்றங்கண்டுபிடிப்பது உரையாடலை அணைத்துப் போடும். ஒரு குற்றத்தைக் கூற அதன் இரண்டு பக்கமும் பாராட்டு எனும் வெண்ணை தடவிக் கொடுக்கவேண்டுமாம். கெட்ட வார்த்தைகள் நமது அகராதியிலி ருந்தே கிழிந்தெறியப்பட வேண்டும். கிறிஸ்தவரும் சண்டைப்போட்டு அடித்துக்கொள்வது எத்தனை மானக்கேடு. தன்னடக்கம் பயிலுக. கையை ஓங்குவதும், ஆத்திரத்தில் காறி உமிழ்வதும், பொருட்களை எறிவதும் அறிவீனச் செயல்கள். பிள்ளைகள் கோபத்தில் கத்தாமல் ஏழை பணக்காரர் யாரிடமும் பணிவோடு பேசப் பயிற்றுவிக்கப்படவேண்டும். வாலிபரும் பெண்களும் நாணிக் கோணாமல் குழையாமல் சாதாரணமாகக் கண்சாடையின்றி பேசப் பழகவேண்டும்.

பேசப்படும் மொழி புரியாத ஒருவர் இருப்பின் பொதுவான மொழியில் பேசுவதே பண்பாடு. முடியாத பட்சத்தில் அவர் அருகிலிருப்பவர் உரையாடலின் சுருக்கத்தை அவ்வப்போது அவருக்கு எடுத்துக் கூறு வதவசியம். கூட்டத்தில் கிசுகிசுப்பது பிறருக்கு எரிச்சல் மூட்டும். கூட்டத்திலிருந்து எழுந்து போகவேண்டுமானாலும், பேசும் இருவருக்கு இடையே செல்ல வேண்டுமானாலும், இருவரது உரையாடலில் குறுக்கிட வேண்டுமானாலும், "மன்னித்துக்கொள்ளுங்கள்" அல்லது "Please excuse me" என்று சொல்வது பண்பாடு. அழைக்கப்படாவிட்டால் பிறரது உரையாடலில் நாம் கலந்துகொள்ளக் கூடாது. ஆனால் பொது அறிவினால் எப்போது அழைப்பின்றி கலந்துகொள்ளலாம் என உத்தேசிப்பது கடினமல்ல. சிறு காரியங்களுக்கும் மூஞ்சைத் தூக்கிக்கொள்வது முசுட்டுத்தனம். எல்லோரையும் அது பாதிக்கும். தேவ கிருபையினால் அதை மேற்கொள்ள வேண்டும். ஒருவரைப் பாதிக்கும் பேச்சை எடுப்பதையும், சிறியோரையோ பெரியோரையோ வெட்கப்படுத்துவதையும் தவிர்ப்பது உயர் பண்பு. பிறர் நம்மைக் குறித்து நல்லெண்ணங்கொள்ளச் செய்வது நமது கடன்.



**உணவு**

பரிமாறி முடியும் வரை காத்திருங்கள். காய்ந்த மாடு சோளக் காட்டில் பாய்வது போல் பாயாதீர். கைகட்டி கவனிப்பதைவிட கைநீட்டி பரிமாற உதவலாம். பதிபத்தினி பரிமாறி, பின் எஞ்சியதை உண்ணும் பழக்கம் போகக் காலமாயிற்று. உணவு நேரம் குடும்ப நேரமாகக் கருதப்பட வேண்டும். இவ்வியாபார உலகில் இரவு உணவாவது குடும்பத்தினர் அனைவரும் சேர்ந்துண்ணும் உணவாகட்டும். ஜெபிக்கும்வரை காத்திருந்து பின்பே உண்ணுங்கள். சாப்பிடும்போது சமையலைக் குற்றஞ்சாட்டுவது நற்பண்பல்ல. மெய்மறந்து சாப்பிடாமல் பிறருக்கு என்ன வேண்டுமென கவனித்து பதார்த்தங்களைத் தேவையானோருக்குக் கடத்துங்கள். வாயில் உணவை வைத்துக்கொண்டு பேசுவது, வேகமாய்ப் பெரிய உருண்டைகளை கடோத்கஜன் போல் அள்ளிப் போட்டுக்கொள்வது போன்றவை உங்கள் பண்பாட்டிற்குக் கரும்புள்ளி. சிலர் கரிவேப்பிலை, எலும்பு போன்றவற்றை மேசையிலோ தரையிலோ வைப்பர். அதைவிட சிறு தட்டு ஒன்று கேட்பதோ அல்லது இலையின் ஓரத்திலேயே வைப்பதோ நல்லது. தட்டிலேயே கை கழுவுவது சோம்பேறித்தனம். சாப்பிட்ட பின் ஹோட்டலில் சாப்பிட்டது போல் கையலம்பிச் செல்லாமல் சமைத்த கரங்களுக்கு நன்றி சொல்லிச் செல்லுதல் அழகு.

## வீடு சந்திப்பு

சாப்பாட்டு நேரம் கதவைத் தட்டுபவர் வேண்டாத விருந்தாளிகள். முன்னமே நேரம் அறிவித்து சந்திக்கச் செல்வதே நல்லது. அகஸ்மாத்தாக சென்று, வீட்டினர் ஒரு முக்கிய தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருப்பாரானால் வேறு விருந்தினர் இருப்பாரானால், அல்லது பிள்ளை கள் படித்துக்கொண்டிருப்பாரானால் மன்னிப்புக் கோரி திரும்பிவிடுங்கள். அவர்கள் சிலேடையாகச் சொல்லியும் உட்கார்ந்த இடத்திலேயே வேர் விடாதீர்கள். காரியமாய்ப் போனால் சுற்றிச் சுற்றி வராமல் காரியத்தை முடித்து உடனடியாய் வெளியேறுவது வீட்டினரை நன்றியால் நிரப்பும். உங்களைச் சந்திக்க ஒருவர் வந்தால் வரவேற்று உட்காரச் செய்யுங்கள். TVஐ அணைத்து விடுங்கள். ஒரு கண் அங்கும் ஒரு கண் இங்குமாகப் பேசுவது பண்பல்ல.

தேநீருக்கோ விருந்திற்கோ அழைக்கப்பட்டிருந்தால் நேரத்திற்குப் போய்ச் சேரவேண்டும். "காபி குடிக்கிறீர்களா?" என்று கேட்டால் "வேண்டாம், வேண்டாம், ஒன்றும் வேண்டாம்" என்று சொல்லிவிட்டு

பின்பு ஒன்றும் கிடைக்காவிட்டால் வீட்டாரைச் சபிக்காதீர்கள். உண்மையைச் சொல்லுங்கள். அப்படியே விருந்தினர் வேண்டாம் வேண்டாம் என்று சொல்லச் சொல்ல அவர்களை விருந்தோம்புபவர் கட்டாயப்படுத்துவதும் தவறான விருந்தோம்பலாகும். இப்படி எத்தனையோ பேரை சீக்கிரம் சமாதிக்கு அனுப்பிவைப்பவர் உண்டு. வாயூறவைக்கும் உணவைக் கண்டதும் இச்சையடக்கத்தை இழந்துவிடாதீர். விருந்தோம்புபவரைப் பாராட்டுங்கள். அவர்கள் பிள்ளைகளில் குற்றம் கண்டுபிடிக்காதீர். உங்கள் பிள்ளைகளை ஒரேடியாக அவிழ்த்து விட்டுவிடாதீர்கள். தட்டுகள் அருகே கத்தி கபடா வைத்திருந்தால் பயந்துவிடாதீர்கள். அது பழக்கமில்லை என்று சொல்லிவிட்டு விரல்களினால் சாப்பிடுவது தவறல்ல. ஆனால் கத்தி முட்கரண்டி கொண்டு வீட்டில் சாப்பிட்டுப் பழகுவது அவசரத்திற்குக் கைகொடுக்கும். விருந்துகளுக்குச் செல்லும்போது ஓர் அன்பளிப்பு கொண்டுச் செல்லலாம்; கட்டாயமல்ல. தட்டுகளை அலம்பி அடுப்படியைச் சுத்தம் செய்ய உதவி செய்யுங்கள். அதை அவர்கள் விரும்பாதது போல் தெரிந்தால் விட்டுவிடுங்கள். எல்லோரும் அதை விரும்புவதில்லை.

எந்நிலையிலும் சமாளித்துப் போவதும் சூழ்நிலைக்கேற்ப மாறிக் கொள்வதும் வேறொருவருடன் தங்குவதற்குத் தேவையான கலைகள். அவர்களது பழக்கவழக்கங்களுக்கும் நேரத்திற்கும் வளைந்து கொடுங்கள். சோப்பு, டவல் போன்ற சொந்த பொருட்களை எடுத்துச் செல்லுங்கள். அவர்களது அனுமதி பெற்றே அவர்களது தொலைபேசியைப் பயன்படுத்த வேண்டும். வீட்டில் கூடிய அளவு உதவி செய்யுங்கள்.

## தொலைபேசி

ஒருவரைக் கூப்பிடும்போது ''ஹலோ... இருக்கிறாரா ?'' எனக் கத்தாமல் ''ஹலோ, இது 242943ஆ ?'' (கூப்பிட்ட எண்) எனத் தேனொழுகக் கேளுங்கள். பதில் கிடைத்தவுடன் வேண்டியவரைக் கேளுங்கள். வீட்டில் அல்லது அலுவலகத்தில் தொலைபேசி மணி அடித்தால் எடுத்து, ''ஹலோ, பிளெஸ்ஸிங்'' (அல்லது உங்கள் எண்) என்று உங்கள் சத்தத்திலேயே ஒரு புன்னகையைப் புதைத்துக் கேளுங்கள். எடுத்தவுடன், ''யாரு வேணும் ?'' என்று கேட்பது பண்பல்ல. தொலைபேசியைப் பிடித்துக்கொண்டு மணிக்கணக்கில் பேசிச் சிரித்துக்கொண்டிருப்பது கட்டாயமாய் அதைக் கேட்டுக்கொண்டிருப்பவருக்குத் தலைவலி. தொலைபேசியில் கத்த வேண்டியதில்லை. நன்றி அல்லது bye, bye, சொல்லி முடிக்கலாம்.



## சமூக வாழ்வு

தெருக்களையும் பொதுவிடங்களையும் குப்பையாக்குவது மாபெரும் குற்றம். அழுக்கான இடம் என்பதற்காக நாம் கூடுதல் அழுக்காக்கத் தேவையில்லை. குப்பை மலிவல்ல. அதற்கு ஏராளமாகக் கிரயம் செலுத்தி விட்டோம். பொதுவிடங்களில் புகைபிடிப்பது உங்கள் புகையை சுவாசிப்பவரையும் பாதிக்கும். ஆண்கள் பெண்களுக்கும், சிறியோர் பெரியோருக்கும், பலமுள்ளோர் பலவீனருக்கும் பொது வாகனங்களில் இடத்தை விட்டுக்கொடுக்கும் நற்பண்பு கரைந்து மறைந்துகொண்டிருக்கிறது. பழங்கால நற்பண்புகளுக்கு உயிரூட்டுவோம். தேவைக்குமேல் இடம் பிடிக்காதீர்கள். பிறரும் உட்கார இடமளியுங்கள். பிறரது உருவத்தையோ அங்கவீனமுள்ளோரையோ எள்ளி நகையாடுவது மாபெரும் தவறு. தெருவில் விரல் சுட்டிப் பேசுவதையும் ஒருவர் பெயரை உரக்கச் சொல்லி அழைப்பதையும் தவிர்க்கவேண்டும்.

துப்புவது பயங்கரப் பழக்கம், நிறுத்துங்கள்; பிறரும் நிறுத்தப் போதியுங்கள். வரிசையில் நிற்க வேண்டிய இடத்தில் இடித்துமுடித்துக் கொண்டு முன்னே செல்வது சரியல்ல. கடன் வாங்கின பொருட்களை நல்ல நிலையில் கூடிய சீக்கிரம் திருப்பிக் கொடுங்கள். பணம் யாருக்குமே முக்கியம்தான். குறித்த காலத்தில் கொடுத்து விடுவது உறவைக் காக்கும். எச்சில் தொட்டு பக்கங்களைத் திருப்பும் அல்லது ரூபாய் நோட்டுகளை எண்ணும் காட்சி அன்சகிக்கபிள் !

## ஆலயம்

மாபெரும் தேவனை ஆராதிக்கும் தலமே ஆலயம். அங்கே விவேகமாய் உடையணிந்து செல்லுங்கள். ஆராதனை துவங்கினதும் பயபக்தியோடிருக்கவேண்டும். பிந்தி வருவோரை விசாரிப்பதும் சத்தமாய்ப் பேசுவதும் தவிர்க்கப்படவேண்டும். விடுதலையோடு ஆராதிக்கும் சபையில் ஒருவர் எல்லோருக்கும் மேலாக சத்தத்தை உயர்த்தி தன் வேத அறிவைக் கொட்டுவது பிறருக்குச் சலிப்பு. பாடல் சத்தத்திற்குமேல் வாத்தியங்கள் ஒலிக்கக் கூடாது. கீத வாத்திய சத்தத்தை அமிழ்த்துமளவு கைத் தட்டாமலிருந்தால் பாடல் அழகாக இருக்கும். காது கிழிய மைக்கை உயர்த்தத் தேவையில்லை. சத்தமாய் தீர்க்கதரிசனங்களைக் கத்துவதும், அடக்கமுடியாமல் அன்னிய பாஷையில் பேசுவதும், பக்கத்திலிருப்போர் அடிவாங்கும்படி கைகளை விசுறுவதும், அவர் கால் நையக் குதிப்பதும் ஆலய அமரிக்கையைக்

குலைக்கும். தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கி யிருக்கிறதே. தேவன் குழப்பத்திற்கு தேவனல்லவே. கீழே விழுவது, புரளுவது போன்ற காரியங்களையெல்லாம் கிறிஸ்தவ வாழ்வில் வளர வளர தவிர்க்க வேண்டும்.

ஆராதனைக்குப்பின் நண்பரற்றுத் தனித்திருப்போரைச் சந்தியுங்கள். உங்கள் அலுவலக மேலதிகாரி வந்திருந்தால், ''ஹலோ பிரதர்'' என்று தோளில் கைப்போடாதீர்கள். மரியாதையோடேயே நடந்துகொள்வது நல்லது.

### வாத்துக்குஞ்சா அன்னப்பறவையா ?

முடியாது என முடிவுகட்டிவிடாதீர்கள். நற்பண்புகள் பயில நாம் மிஞ்சிய பரிசுத்தவான்களாயிருக்கத் தேவையில்லை. சில சிறிய தீர்மானங்கள் எடுத்தால் போதும், நமது வாழ்வே மாறிவிடும். நான் சாப்பிட்டதும் விரல் களையும் தேக்கரண்டிகளையும் நக்காமலிருக்க முயற்சிக்கவும், என் கணவரை நாலு வீட்டிற்குக் கேட்பதுபோல் சவைக்காதீர்களென நினைப் பூட்டவும் தீர்மானித்துவிட்டேன். சற்று சுயக்கட்டுப்பாட்டைப் பயிற்சித்தால் போதும்; அழகற்ற வாத்துக் குஞ்சுகளாகிய நாம் அழகிய அன்னப் பறவைகளாக மாறி விடுவோம்.



# 4. வசந்த காலம்

காலங்களில் ஒருமுறைதான் வசந்தம்; வாழ்க்கையில் ஒருமுறைதான் வாலிபம்! பொறாமைப்படக்கூடிய இப்பருவத்திலிருந்தான் தாவீது. செம் மேனியும் அழகிய கண்களுமுடைய இக்காளையிடம் தன் உள்ளத்தைப் பறிகொடுத்தது யாரோ ? தேவன்! அப்படி அவனிடத்தில் என்னதான் இருந்தது ?

### உள்ளில் தூய்மையாயிருந்தான் !

பரிசுத்தத்தை சிநேகிக்கும் தேவன் (மல் 2:11) பரிசுத்தத்தை சிநேகிப் பவரின் சகவாசத்தை விரும்புவது இயல்புதானே. தாவீது தன் இதயத்தை எவ்வளவு கவனமாய்க் காத்துக்கொண்டான் என்பதை அவனது இசை எழுத்துக்களில் காணலாம். ''இதோ, **உள்ளத்தில்** உண்மையாயிருக்க விரும்புகிறீர்'' (சங் 51:6); ''**மனதாரச்** சத்தியத்தைப் பேசுகிறவன்'' (சங் 15:2). ''தேவனே என்னை ஆராய்ந்து, என் **இருதயத்தை** அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் **சிந்தனைகளை** அறிந்துகொள்ளும்; வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்'' என்று ஜெபிக்கையில், தேவன் தன்னை எவ்விதப் பாதையில் நடத்துவாரெனக் கனவிலும் எண்ணியிருக்கமாட்டான் தாவீது (சங் 139:23,24). வாலிபன் தாவீதை தேவன் கோபமும் பொறாமையும் பெருமையும் பகையும் நிறைந்த சூழல்களைக் கடந்து செல்ல அனுமதித்தார். இவையெல்லாம் தன் இதயத்தை நிரப்பாதபடி அவன் இடையறாது முயற்சி செய்யவேண்டியிருந்தது. தேவன் தன்னை அலசிப் பார்த்து சுத்திகரிக் கும்படி அவரைக் கேட்டுக்கொண்டேயிருந்தான். அதற்கு கிரயம் செலுத் தவும் அவன் தயங்கவில்லை.

அக்குடும்பத்தில் எட்டு வாலிபர் இருந்தாலும் தன் இதயத்தைக் காத்துக் கொண்டான் என்று ஒருவனைக் குறித்து மட்டுமே தேவன் சாட்சியிட

முடிந்தது. வெளித்தோற்றத்தைக் கண்டு சாமுவேல் அசந்துவிட்டான். தேவனோ **உள்ளத்தை** நோக்கினார் (1 சாமு 16:7). தீர்க்கதரிசியை சந்திக்க கடைக்குட்டி தாவீது அருகதையுள்ளவனாகக் கருதப்படவில்லை. சாமு வேல் கேட்டதாலேயே அவன் அழைப்பிக்கப்பட்டான். தேவனது ஓட்டோ அவனுக்கே விழுந்தது.

''மனிதனுடைய **இருதயத்தின்** நினைவுகள் அவன் சிறுவயது தொடங்கிப் பொல்லாததாயிருக்கிறது'' (ஆதி 8:21). எனவேதான் வேதம், ''எல்லாக் காவலோடும் உன் **இருதயத்தைக்** காத்துக்கொள்'' என்கிறது (நீதி 4:23). தொடர் வசனங்களைக் கவனியுங்கள்: ''வாய்... உதடு... கண்கள்... கால்.'' சிந்தனை சரியில்லையேல் நமது உள்ளுணர்வுகளையும் ஆசைகளையும் பின்பற்றி ஏமாற்றம் என்னும் சேற்றில் விழுந்து மாளுவோம்.

தேவ வசனத்தின் உதவியால் சரியாகச் சிந்திக்க உங்கள் இதயத்தைப் பழக்குவியுங்கள். இதயத்திலிருந்தே ஜீவ ஊற்று புறப்படுகிறது என்று நன்கறிந்த பிசாசு அதையே குறிவைக்கிறான். முடியுமா முடியாதா என்பது வேறு கேள்வி. எப்படியானாலும் கெட்ட சிந்தனைகளுக்கு எதிராகப் போராடிக்கொண்டேயிருக்கவேண்டும்.

தேவனது இதயத்திற்கு ஏற்றவனாகக் காணப்பட்டவனது ஜெபத்தை தினந்தோறும் ஏறெடுங்கள். ''கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் **இருதயத்தின்** தியானமும் உமது சமுகத்தில் பிரியமாயிருப்பதாக'' (சங் 19:14).

## காரிய சமர்த்தனாயிருந்தான்!

ஏழு மகன்கள் வீட்டிலிருந்தபோது தாவீது மட்டும் ஆடுகளை மேய்க்கச் சென்றிருந்தான் (1 சாமு 16:11). பெரியோர் யாவரும் போருக்குச் சென்று விட்டபொழுது சவுலின் அரண்மனையில் வேலையில்லை என்பதால் தாவீது சோம்பித் திரியாமல் தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்க்கச் சென்று விட்டான் (17:15). அவனுடைய தகப்பன் கெஞ்சிக் கூத்தாடத் தேவை யில்லை. இடையன் வேலையானாலும் சடைப்பின்றிச் செய்தான். ஆடுகளுக்காக தன் உயிரையும் விடத் துணிந்தான். ஒரு சிங்கத்தையும் ஒரு கரடியையும் கொன்று ஆட்டை அவற்றின் வாய்க்குத் தப்புவித்தான் (17:35,36). மேன்மை அவனை நிழலெனத் தொடர்ந்ததில் வியப்பேது முண்டோ? சீக்கிரம் இராஜாவின் முன்னிலைக்கு உயர்த்தப்பட்ட தோடல்லாது பின்பு தேவனது மந்தையை மேய்க்கும் அரச பதவியும்



அளிக்கப்பட்டது. ''தன் வேலையில் ஜாக்கி ரதையாயிருக்கிறவனை நீ கண்டால் அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், இராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்'' (நீதி 22:29).

கருமமே கண்ணாயினார் என்பதற்கேற்ப கொடுக்கப்பட்ட வேலையை கண்ணும் கருத்துமாகச் செய்யவேண்டும். செய்வன திருந்தச் செய். ஒரு கோடு போடவேண்டியிருந்தாலும் அடிக்கோல் வைத்து நேரே வரைய வேண்டும். எதையும் தெரிந்த அளவு முடிந்த அளவு சரியாய்ச் செய்ய வேண்டும். ஒழுங்கீன வாலிபர் வாழ்வில் முன்னேறுவது கடினம்.

''இயேசுவை ஏற்றுக்கொள்ளுமுன் பாயைச் சுற்றிக் கூட்டினேன்; இப்போது பாய்க்குக் கீழும் கூட்டுகிறேன்'' என்றாள் ஒரு சிறுமி. சிறு காரியங்களில் உண்மையுள்ளவர்களாயிருந்தால் தேவன் உங்களை பெரியவற்றிற்கு அதிகாரியாக்குவார். இப்போது தேவன் உங்களை ஒரு பெரிய பொறுப்பிற்காகப் பழக்குவித்துக்கொண்டிருக்கிறார். இன்று நீங்கள் செய்யும் அன்றாடக வேலைகளைப் பொறுத்தே உங்கள் உயர்வு. வாலிபரும் சோம்பலும் சிநேகம் பாராட்டக்கூடாது. சோம்பலும், கவலையீனமும், ஒழுங்கீனமுமான வாலிபனை யாருமே உடனடியாகக் கண்டுகொண்டு சீக்கிரம் சீட்டுக் கிழிப்பர். முன்னேற தினமும் முயற்சியுங்கள். முயற்சி யுடையார் இகழ்ச்சியடையார்.

## தன் தாலந்துகளைப் பயன்படுத்தினான்!

தாலந்தென்பது இயற்கையான வரம். அற்பமாய்க் காணப்படும் தாலந்தும் விலைமதிப்பானது. தாவீதின் சகோதரர் படை வீரராகத் திகழ்ந்தனர். இவனோ இன்னும் அரும்பு மீசையுமின்றி ஆடு மேய்த்துக் கொண்டிருந்தான். இருப்பினும் அவன் 'நான் இருந்தென்ன' என மன முடைந்து போகவில்லை. தன் இசைக்கருவியில் பழகினான்; கவட்டையால் குருவி அடிக்கப் பழகினான்; பாடினான். ஒரு வேளை பட்சிகள், பூக்கள், பரமனைப் பற்றி சிறு கவிதைகளும் புனைந்திருப்பான். ஆடு மேய்த்தலே அவன் உலகமாயில்லை, மற்றவைகளையும் கற்றறிந்தான்.

யாரும் அவனது தாலந்துகளைக் கண்டு அவனுக்குப் புகழ் பாடவில்லை. ஆயினும் காடுகளுக்குள் கண்மறைவில் தன்னை பயிற்சித்துக் கொண்டி ருந்தான். வேலை ஏவப்பட்டான் (17:17). சகோதரர் அவனை நசுக்கினர் (17:28). கோலியாத்து அசட்டை பண்ணினான் (17:42). சவுல் அவனைப் பொடியனாக எண்ணினான் (17:33 ஆங்கில வேதம்). ஆனால் யாரோ ஒருவன், ''அவன் வாசிப்பதில் தேறினவன், பராக்கிரமசாலி, யுத்தவீரன்,

காரியசமர்த்தன், சவுந்தரியமுள்ளவன்; கர்த்தர் அவனோடேகூட இருக்கிறார்'' என்று கவனித்திருந்தான் (16:18). காலம் வந்தபோது தேவன் அவனது தாலந்துகளைப் பயன்படுத்தத் துவங்கினார். முதலாவது சவுலிடமிருந்த ஆவியைத் துரத்த, பின்பு பெலிஸ்தியனைக் கொல்ல, அதன் பின்பு இஸ்ரவேலை நடத்த, இறுதியில் பார்புகழ் சங்கீதப் புத்தகத்தை எழுதி உலகிற்கே ஆசீர்வாதமாக!

வாழ்வில் ஒன்றைச் சாதிக்கவேண்டுமென்ற வாஞ்சையை வழியில் நழுவ விட்டுவிடாதீர்கள். உங்கள் தோல்விகளுக்குப் பிறரை பழிசாட்டும் பழக்கமும் வேண்டாம். உங்கள் வாழ்வு உங்கள் பொறுப்பு. அதைச் சரியாகக் கையாடுங்கள். உங்கள் தீர்மானங்களே உங்கள் எதிர்காலத்தை உருவாக்குபவை. கனாக் கண்டுகொண்டிருக்கவே தீர்மானிப்பீர்களானால் சொப்பனக்காரனாகவே இருப்பீர்கள். பாதியில் சலித்து விட்டுவிடத் தீர்மானிப்பீர்களானால் அதுவும் உங்கள் தெரிந்தெடுப்பே. ஆனால் வாழ்வில் முன்னேறத் தீர்மானிப்பீர்களானால் ஏணி உங்கள் எதிரில்தானே இருக்கிறது.

பாடுகிறீர்களா? பாடிக்கொண்டே இருங்கள். நன்றாக எழுதுகிறீர்களா? எழுதிக்கொண்டே இருங்கள். படிப்பில் துலங்குகிறீர்களா? நன்றாகப் படியுங்கள். வீட்டு வேலை செய்ய அம்மா எதிர்பார்க்கிறார்களா? முறுமுறுக்காமல் செய்யுங்கள். அதுவும் ஒரு கலையே. துன்புறுவோரைக் காணும்போது உள்ளம் உருகுகிறீர்களா? சேவை செய்துகொண்டே இருங்கள். தாலந்துகளுக்கு சிறகு முளைக்க நாட்களாகும். வளர்ச்சி, திரட்சி, முதிர்ச்சி என்பவை நத்தையென நகருபவை. ஆகவே, ''நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது'' (எபி 10:36).

## பால்வாழ்வில் கவனமாயிருந்தான்!

தாவீது சவுலின் அரண்மனைக்குச் சென்றுவந்துகொண்டிருந்தபோது ஒருவேளை மேராபின் மேல் ஆசைகொண்டிருப்பான் போலும். இராட்சதனைக் கொல்பவனுக்கு இராஜா அவளை கொடுப்பார் என்றறிந்தபோது துள்ள ஆரம்பித்தான். கொல்பவனுக்கு என்ன கிடைக்குமென்று திரும்பத் திரும்பக் கேட்டு அலைமோதினான் (17:25,26,30). ஆனால் அந்தக் கள்ளத்தனமான இராஜா அவளை வேறொருவனுக்குக் கொடுத்தபோது அவன் தலையில் இடி விழுந்தது போலிருந்திருக்கும். எவ்வளவாய் மேராபைக் குறித்து கனாக் கண்டிருப்பான்! எவ்வளவாய் உடைந்து



போயிருப்பான்! இஸ்ரவேலர் வெற்றியைக் கொண்டாடிக்கொண்டிருந்தபோது தாவீதோ கசந்த பானத்தைப் பருகிக்கொண்டிருந்தான். ஆனாலும் அவன் தேவனுக்கு விரோதமாக முறுமுறுக்கவோ அவரை கேள்வி கேட்கவோ இல்லை. தற்கொலைபற்றி சிந்திக்கக்கூட இல்லை. தனக்குச் சிறந்தது எது என்று தேவனுக்குத் தெரியும் என்று அமைதியாயிருந்தான்.

உங்கள் பால்வாழ்வு தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருக்கவேண்டும். தாவீது கண்மூடித்தனமாய் காதலில் விழவில்லை. தன் எண்ணங்களைத் தனக்குள்ளே அடக்கி வைத்திருந்தான். தேவனது பதில், ''இல்லை'' என்று கடுமையாக வந்தபோது தலைகுனிந்து அதை அங்கீகரித்துக்கொண்டான். கண்டவுடன் காதல் ஓர் வாலிப வியாதி. ஒருவரைக் கனாக் காணுவதினால் அன்னாரைக் காதலிக்கிறீர்களெனக் கருதலாகாது. பருவ உணர்வுகள் காற்றில் வரும், காற்றோடு போகும். உள்ளுணர்வுகளை அடக்கிக்கொள்ளப் பழகுங்கள். தேவனோடு அதுகுறித்து உறவாடுங்கள். அவரையே தீர்மானிக்க விட்டுவிடுங்கள்.

இன்றையச் சமுதாயத்தில் வாலிபர் நெருங்கிப் பழகும் சூழ்நிலைகள் அதிகரித்து வருகின்றன. இளம் வாலிபம் (Teenage) காதலிக்க தகுந்த பருவமல்ல. ஒருவரையும் காதலிக்காமல் எல்லாரோடும் நட்புறவுடன் நடந்துகொள்ள வேண்டிய வயது இது. கையடித்துக் கொடுப்பது, கடிதங்கள், தொடுதலில் நெருக்கம் போன்றவற்றினால் மாட்டிக்கொள்வதைத் தவிர்க்கவேண்டும். இப்படிப்பட்ட நட்புறவில் நீங்கள் அடைபடவில்லை. தேவன் உங்களை வேறுவிதமாய் நடத்துவாரானால் நீங்கள் எவ்விதக் குற்றவுணர்வுமின்றி பின்வாங்கிவிடலாம்.

எப்படியும் திருமணத்திற்கு முன் நெருங்கிப் பழகுவதைத் தவிர்க்க வேண்டும். ஒருவரது வாழ்க்கையோடு விளையாடக்கூடாது. இளம் வாழ்வுகள் பூ போன்றவை. ரோஜாவைப் பறித்துவிட்டு உடைக்குப் பொருத்தமில்லை என்று தூக்கி எறிவதுபோல ஒருவரது வாழ்வை கசக்கி எறியக்கூடாது. துணையைத் தெரிந்தெடுப்பது அதிக ஜெபத்துடன் செய்யப்படவேண்டிய ஒன்று. பெற்றோரைச் சார்ந்துகொள்ளுங்கள். நம்பிக்கைக்குரிய பெரியவர்களிடம் ஆலோசனை கேளுங்கள். பழைய பாவங்களைப் பறைசாற்றாதீர்கள். புதைத்துவிடுங்கள்.

அதே சமயம் ஒருவரால் கைவிடப்பட்டால் சிதறிய இதயத் துண்டுகளை சீக்கிரமாய் பொறுக்கி எடுத்துச் சேருங்கள். கப்பல் கவிழ்ந்ததுபோல் நடைபிணமாகாதீர்கள். உங்களுக்கு முன் ஓர் உலகமே இருக்கிறது. உங்களைச்

சட்டை செய்யாத ஒருவர் காலில் விழுந்து கதறாதீர்கள். மட்டுமல்ல வாலிபர், பழைய கடிதங்கள், புகைப்படங்களைப் பயன்படுத்தி ஒருவரை தங்களைத் திருமணம் செய்யாவிட்டால் பார் என்று சவால் விடுவது, பயமுறுத்துவது போன்றவை கூடாது.

பயமுறுத்தப்படுபவர் நீங்களானால் அப்படி ஈரமற்றவர்களுக்குப் பயந்து நடுங்கி ஒத்துக்கொள்ளாதீர்கள். உண்மை அன்பு உடும்புபோல் பிடித்துக் கொள்ளாது. அடுத்தவர் ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ சுதந்திர மளிக்கும். தைரியமாய் இருங்கள். மறுக்க உங்களுக்கு உரிமையுண்டு. பெற்றோர் உதவியை நாடுங்கள். தவறானவரைத் தெரிந்துகொண்டீர்கள் என்று உணர்ந்த மாத்திரத்தில் பிரிந்துவிடுவது நல்லது. தவறான அர்ப்பணிப்பை ரத்து செய்வது சரியே.

சுவாரஸ்யமானதோர் நிகழ்ச்சி நடந்தது. ''சவுலின் குமாரத்தியாகிய மீகாள் தாவீதை நேசித்தாள்'' (18:20). முதலில் இந்த இடையன் ஓர் இராஜக் குமாரத்தியைக் காதலித்தான். இப்பொழுதோ ஓர் இராஜக் குமாரத்தி இந்த இடையனைக் காதலிக்கிறாள். இது மேன்மையல்லவா ? அவனை நேசித்த ஒருவரை தேவன் அருளிய பின்பு கொலைகாரரிட மிருந்து அவனைக் காக்கவும் அவளைக் கருவியாக்கினார் (19:12). எப்படியும், தன் தகப்பனிடம் வாயைத் திறக்க முதுகெலும்பற்ற மேராபைக் காட்டிலும் அவனைத் தப்பித்துவிட்டு தகப்பனின் கோபாக்கினியைச் சந்தித்த மீகாளே மணக்கத் தகுந்தவள். நீங்கள் முழுமனதுடன் நம்பக் கூடுமானால் தேவனே ஜோடி சேர்ப்பதில் ஏ ஒன் !

வசந்தகாலத்தில் வாழும் வாலிபரே, வசந்தகால மலர்களென உங்கள் வாழ்வு நறுமணம் வீசட்டும் !



# 5. பெத்த மனம்

''சேகர்... சேகர்ர்ர்... எழுந்திரப்பா, மணி அஞ்சாயிடுச்சி.''

தலைவழியாய் இழுத்துப் போர்த்துப் படுத்திருந்த சேகர் சற்று அசைந்தான்.

''உடம்பெல்லாம் வலிக்குதம்மா, அரைமணி நேரம் கழித்து எழுப்புங்க.''

''சேகர்...... தம்பு...... எழுந்திரப்பா, மணி அஞ்சரை. பரீட்சை என்று சொன்னாயே.''

'அறுவை' என மனதில் முணுமுணுத்துக் கொண்டே எழுந்தான் சேகர்.

''இந்த வீட்டில் எல்லாம் மிலிடரி ரூல்தான்'' பல் துலக்கி வந்தவனுக்குச் சுடச்சுட காப்பி மேஜையில் காத்திருந்தது. குடித்தவாறே புத்தகத்தை எடுத்தான்.

''பைபிள் படித்துவிட்டு புத்தகத்தை எடு'' அம்மாவின் குரல் அடுப்படி யிலிருந்து அன்பாக வந்தது.

''அம்மா, இனிமேல் அதெல்லாம் லீவில்தான் ; இப்போ முடியாது.''

''சேகர்......''

அம்மா துவங்குமுன் அப்பா தலையிட்டார்— ''விடு அவனை... படிக்கட்டும்... இன்னுமா அவன் சின்னப்பிள்ளை ? அவனாக செய்வான் !''

தொடர்ந்ததோ மயான அமைதி !

வெள்ளியோடு பரீட்சை முடிந்துவிட்டது. நண்பன் ரவி சினிமாவுக்கு அழைத்தான்.

**"சனியன் விடாதுடா."**

"யாருடா ?"

"அதான் — ஜெயில் வார்டன், விடாதுடா."

"யாரடா சொல்ற — அம்மாவையா ?"

"ஆமாண்டா, ஒரு நாள் பிந்தி வந்தாலே பெனாத்துவாங்க; சினிமாவிற்கா விடுவாங்க ?"

லீவு நாட்கள் நகர மறுத்தன — வீடு நரகமாகத் தோன்றியது.

"சேகர்... அறையைக் கொஞ்சம் சுத்தம் பண்ணுப்பா; ஏன் இப்படி கிடக்குது ?... சரி சரி சீக்கிரம் வா. தோசை ஆறுது."

"என் ரூம் என் பாடு நீங்க ஏன் அநாவசியமா கவலைபடுறீங்க ?"

"என்னடா, உன்னுடைய காரியங்களையாவது நீ கவனிக்க வேண்டாமா ? உன் துணிகளை மடித்துவை. சைக்கிளைத் துடை."

"ஏம்மா சும்மா தொண தொணக்கிறீங்க ?... நீங்க எதுக்கு இருக்கிறீங்க ஒரு அம்மான்னு ?"

"நான் எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு பள்ளிக்குப் போக வேண்டாமா சேகர் ? என்னால் எவ்வளவுதான் முடியும் ?"

குடையை பிடித்துக்கொண்டு, முந்தானையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு அம்மா என்ற அந்த அமைதி உருவம் வேக நடைபோட்டது.

"ச்சே! சாவலாம் போலிருக்கு. ஹாஸ்டலுக்கு போனால் தேவலை; இந்தப் பிடுங்கல் எல்லாம் இருக்காது." சேகர் நினைத்தான்.



அம்மா வேலை செய்யாவிட்டால் தனக்கு சைக்கிளோ, ரேடியாவோ இருக்காது—ஏன் சாப்பாடு கூட கஷ்டம்தான். ஆனாலும் அதை அவனுக்கு எண்ணிப்பார்க்க மனமில்லை.

நண்பரோடு கால்பந்தாடிவிட்டு சேகர் திரும்பும்போது நேரம் ஆறு மணி. தன் கைப்பையைத் திறந்து இரண்டு கேக் துண்டுகளை அவனுக்கு கொடுத்தாள் அம்மா. பள்ளியில் யாருக்கோ பிறந்தநாளாம். சாப்பிட்டுக் காப்பியை குடித்ததும் ரேடியோவைத் திருப்பினான்.

"சேகர், பாத்ரூமில் லைட் எரிகிறதே, நீயா போட்டாய் ? அணைத்து விடுப்பா."

"அத நீங்க செய்யக்கூடாதாம்மா ? நான்தானா எழுந்து வரணும் ? காலையிலிருந்தே சிடுசிடுன்னு இருக்கீங்களே."

மறுநாள் காலை சேகர் எழுந்திருக்கும் போது மணி ஏழு—அம்மா இன்னும் படுக்கையில்! — சேகருக்கு ஒரே ஆச்சரியம்!! அப்பாவும் தங்கையுமாக சேர்ந்து களிபோல் உப்புமா கிண்டி வைத்திருந்தார்கள். கஷ்டத்தோடு சாப்பிட்டான்.

"சேகர், அம்மாவிற்கு சுகமில்லை. நான் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போறேன். நீ வீட்டைப் பார்த்துக்கோ." அப்பா விளக்கமேதும் சொல்ல வில்லை... "எதுக்கும்மா அழற ? ஒண்ணுமிருக்காது, பயப்படாதே." அப்பாவின் குரல் மெல்லியதாகக் கேட்டது.

"அம்மா, என்னம்மா பண்ணுது ? ஏம்மா அழறே ?" — கேட்கத் துடித்தான் சேகர். நான் எப்படிக் கேட்பது, எங்கிட்ட சொல்றதுல புண்ணியமில்லை என்று நினைத்தார்களோ ?... என்ற எண்ணம் அவனை வாயடைத்தது.

ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பிய இருவரின் முகவாடலும் சேகருக்குக் கேள்விக்குறியாயிருந்தது.

"அம்மாவிற்குக் கேன்சர்! கட்டாயம் ஆபரேஷன் பண்ணணுமாம்!" சேகருக்கு அடிவயிற்றில் என்னவோ செய்தது... அம்மாவிடம் மன்னிப்புக் கேட்கலாமா ? இல்லை எப்படியாவது அன்பு காட்டலாமா ?... அவசரம் வேண்டாம், ஆபரேஷன் முடிந்து அம்மா வீட்டிற்கு வரும்போது ஒரு புதிய சேகரைக் கண்டு அதிசயிக்கட்டுமே!...

அம்மாவை தியேட்டருக்குள் தள்ளிக்கொண்டு போனார்கள். சுமார் ஒரு மணி நேரம் ஆகியிருக்கும். அவசரச் செய்தி ஒன்று வெளியே வந்தது. அம்மாவிற்கு பாதி ஆபரேஷனில் இதயம் நின்றுவிட்டதாம்!

''ஐயோ! அம்மா, போயிட்டீங்களே! ஒரு தருணம் கொடுக்காம போயிட்டீங்களேம்மா!'' சேகர் அலறினான், தங்கை துடித்தாள், அப்பா கதறினார்.

அம்மாவின் படம் பெரிதாக ஏறியது சுவற்றில் — சேகரை அன்போடு நோக்கியது — சேகரோ அதை ஏறிட்டுப் பார்க்கவும் துணியவில்லை!

தன் மேஜையைத் தடவினான்... தூசி; மேற்கூறையைப் பார்த்தான்... ஒட்டடை — பதினாறு வருடங்களில் தான் பாத்திராத தூசி பதினாறே நாட்களில் படிந்துவிட்டது... இத்தனை ஆண்டுகளாக......?

தன் அழுக்குத் துணிகளை எடுத்துக்கொண்டு கிணற்றடிக்குச் சென்றான். ஆலயத்திற்குச் சென்று திரும்பி சமையலை முடித்து, அனைவரும் உண்ட திருப்தியில் உறங்கும்போது அம்மா மட்டும் துணிகளைத் துவைக்கும் சத்தம் அவன் செவிகளில் வேதனையாக எதிரொலித்தது.

''தம்பு... எழுந்திரப்பா''— அந்தக்குரல் ஓய்ந்து விட்டது. ''இனி யார் என்னை அப்படி எழுப்புவார்கள்?'' சேகரின் உள்ளம் குமுறியது. ''கடவுள் தவறு செய்யமாட்டார், இதுவும் நன்மைக்குத்தான், என்று யார் யாரோ தேற்றினார்களே; என் மனச்சாட்சியைத் தவிக்கவிட்டு என் தாயை எடுத்துக்கொண்டதில் என்ன நன்மை?'' வீடே வெறுமையாயிற்று. ''கேக்கை யாருக்கும் தெரியாமல் பையில் போட்டுக் கொண்டுவந்து கொடுப்பார்களே''— ஆணியில் தொங்கிக்கொண்டிருந்த அந்தக் கைப்பை காற்றில் ஆடியது. பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு என்பது உண்மைதான். யாரையாவது கட்டிப்பிடித்துக்கொண்டு கதறி அழலாம் போலிருந்தது சேகருக்கு.

சில நாட்களில் ஹாஸ்டலில் சேர்ந்தான். இப்பொழுது பரீட்சையானாலும் சரி, அவன் வேதம் வாசிக்காமல், ஜெபிக்காமல், படிப்பதில்லை; படுப்பது மில்லை. அவனுக்குச் சிநேகிதனானான் ரகு.

''என்னடா ரகு, பசங்களெல்லாம் சேர்ந்து எங்கோ போவதற்குத் திட்டந்தீட்டறாங்களே, நீ போகலியா?''



**''சனியன் விடாதுடா''**

யாரோ நெஞ்சில் உதைத்தது போலிருந்தது சேகருக்கு!

''என்னடா ரகு, என்ன சொன்ன? யார சொன்ன?'' பதறினான் சேகர்.

''ஆறு மணிக்கு மேலே வெளியே போகக் கூடாதுன்னு எங்க வீட்டில சட்டம்டா''

சேகர் தன் கைகளினால் ரகுவை அணைத்தான். இருவரும் காலேஜ் படிக்கட்டில் சென்று அமர்ந்தனர்.

என்னதான் பேசினானோ! ரகுவின் வாழ்க்கை மாறத் துவங்கியது.

ரகுவின் அம்மா ஜம்பமடித்துக்கொண்டாள். ''ரகு காலேஜ் போயிட்டா னுல்ல. இப்ப பொறுப்பு வந்திடுச்சு. ரொம்பவும் மாறிட்டான். எம்மேல தான் அவனுக்கு எவ்வளவு அன்பு.''

உள்ளங்கள் மாறின — வாழ்க்கைகள் மாறின — கடவுள் தவறு செய்யமாட்டார் — சேகரின் துன்பத்திலும் நன்மை பிறந்தது!

அன்பு காட்டத் தருணம் ஒன்றுதான்!

அது இன்றுதான்!

# 6. குதூகலம் நிறைந்த நன்னாள்!

நெடுநாளாக எதிர்பார்த்திருந்த குதூகலம் நிறைந்த நன்னாள் வந்து விட்டது! இதுவரை இருந்த துன்பமில்லை, இனி இரண்டு மாதங்கள் ஆனந்தந்தான்! நவீன வாழ்வெனும் பாலைவனப் பாதையில் விடுமுறை யெனும் குளிர் நீரோட்டத்தில் பருகி இளைப்பாருங்கள்.

முடிந்த பரீட்சையை எண்ணி எண்ணி பொன்னான விடுமுறை நாட்களை வீணடிக்கக்கூடாது. கடந்ததை மாற்றமுடியாது. ஆனால் வருங்காலத்தை எண்ணிக் கவலையுற்று அருமையான நிகழ்காலத்தைப் பாழடித்துவிடலாம். தேறுவோமா என்று சந்தேகிப்போர் சிலர் தங்கள் விடைத்தாள்களைப் பின்தொடர்ந்து சென்று விடுமுறையை விரய மாக்குகின்றனர். வேண்டாம் தம்பி, வேண்டாம். இவ்விதத் தவறான பழக்கங்களை தவிர்த்து, கவலை எழும்பொழுதெல்லாம் தேவனைத் துதித்து சோர்பெனும் சேற்றிலிருந்து குதித்தெழுந்து வாருங்கள்.

இப்பொழுதெல்லாம் கல்வி என்பது மூளைக்கு மட்டுமே உணவளிப் பதாகிவிட்டது. விடுமுறையில் உடல், மனது, ஆன்மா, சமூக வாழ்வு ஆகிய அத்தனைக்கும் விருந்தளியுங்கள். நுழைவுத் தேர்வுகளுக்காக ஆயத்தப்பட வேண்டியதிருக்கலாம். எப்படியும் புத்தகங்களில் புதைந்துவிடாதீர்கள்.

உடற்பயிற்சி நிறைந்த திறந்தவெளி விளையாட்டைத் தெரிந்து கொண்டு தினமும் விளையாடுங்கள். கிடைத்த இடத்தில் நாலு கோடு வரைந்து பந்தடியுங்கள். நாங்கள் சிறுவராயிருந்தபோது பழைய பந்துகள், நெட்டுகளைக் குறைந்த விலையில் வாங்கி, அக்கம்பக்கத்தவரைக் கூட்டி விம்டோ பந்தயங்கள் ஆடுவோம். தோற்றவர் வென்றவருக்கு *விம்டோ* (இப்பொழுது தம்ஸ் அப்) வாங்கித் தரவேண்டும். உற்சாகத்தில் உயிரையே விடுவோம். இது அவ்வட்டாரத்தையே சிநேகமென்னும் பிணைப்பினால் இணைத்துவிடும். ஒவ்வொருவரும் அவரவர் புற்றுக்குள் முடங்கிக் கொள்ளாமல் கலந்துறவாட இதுவே வழி.



வயலோ, பட்டறையோ, அச்சகமோ, கட்டிடமோ அப்பா போகும் இடம் சென்று கூடமாட உதவி செய்யலாம். அனுபவம் வீணாகாது.

படிப்பு மிகுதியினால் இதுவரை அடக்கி வைத்திருந்த ஆசைகளுக்கு உயிர்கொடுங்கள். நண்பர்களாகச் சேர்ந்து அடுத்த ஊருக்கு சைக்கிள் பயணம் செய்யலாம், மலை ஏறலாம், நீச்சல் பழகலாம். பெண்பிள்ளைகள் இவற்றிற்கெல்லாம் விதிவிலக்கல்ல. சல்வார் கமிஸ் ஒன்றைப் போட்டுக் கொண்டு புறப்பட்டுவிடுங்கள். இரை விழுங்கிய மலைப்பாம்புபோல் நாள் முழுவதும் நாவலும் கையுமாக படுக்கையே கதியாகிவிடக்கூடாது. அண்மை யிலுள்ள வாலிபப் பிள்ளைகளெல்லாம் இரவு உணவை நிலவொளியில் உண்டு கதைபேசி மகிழலாம். வீட்டு வேலைகளிலும் சற்று கைவைத்துப் பாருங்களேன். சமையற்கலை பெண்களுக்கு வேண்டுமா வேண்டாமா என்ற கேள்வியே கிடையாது. கூட்டுவது, துவைப்பது போன்ற ஏதாவது ஒரு தினசரி கடமையைச் செய்து அம்மாவிற்கு ஆதரவாயிருங்கள். விடுமுறை துவங்கியதும் நாங்கள் "விடுமுறை வாழ்க!" என்று பேயாட்டம் ஆடுவோம். நரகமே மடை திறந்தது போலிருக்கும். பள்ளி திறந்து நீண்ட முகத்தோடு நாங்கள் செல்கையில் பெற்றோர் "பள்ளி வாழ்க!" என்று சிரிப்பர். புரிந்ததா? பழைய கால முறைப்படி விறகு அடுப்பு வைத்து அண்மையிலுள்ள தோட்டம் ஒன்றிற்குச் சென்று சேர்ந்து சமைத்து விருந்துண்ணலாமே. தோட்டம் போடுதல் நல்ல பொழுதுபோக்கு. உங்கள் தோட்டத்தை அழகுபடுத்துங்கள். தேவனுக்கும் ஒரு தோட்டம் இருந்தது (ஆதி 13:10; ஏசா 51:3).

தேவனும் தனது வேலையின் நடுவில் ஓய்வெடுத்தார். ஆறு நாட்களில் வானம் பூமி படைத்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் (ஆதி 2:2,3). விடு முறையை அவர் மதிக்கிறாரென்பது இதிலிருந்து தெரிகிறது. மனிதனும் ஓய்வெடுப்பதை வற்புறுத்துகிறார். ஆறாண்டு பயிரிடப்பட்ட நிலம் ஓராண்டு ஓய்ந்திருக்க வேண்டுமென நிலத்திற்கும் ஓய்வு அளித்தார் (லேவி 25:1-4). இயேசுவும் தம் சீடர்களைத் தனித்து இளைப்பாறும்படி அழைத்துச் சென்றார் (மாற் 6:31). எனவே விடுமுறை விளையாட்டுகளைக் குறித்து குற்ற வுணர்வடையத் தேவையில்லை.

இசை, சித்திரந் தீட்டுதல், தபால் தலை சேகரிப்பு, பட்டம் விடுதல் போன்றவை நல்ல பொழுதுபோக்குகள். The World This Week, தினசரிச் செய்தி போன்ற நல்ல TV நிகழ்ச்சிகளைப் பாருங்கள். ஆனால் மணிக் கணக்காக TV முன் உட்கார்ந்திருப்பது கண்களுக்கோ மனதிற்கோ நல்லதல்ல.

பகற்கனா காணுதலும் வாழ்வின் ஓர் அம்சம்தான். உங்கள் எதிர் காலத்தைக் குறித்து கோட்டை கட்டுங்கள். நெடுந்தூரம் இயற்கையை

ரசித்துக்கொண்டே நடந்து பாருங்கள். இயேசு கடலோரங்களிலும், ஏரிக்கரைகளிலும், மலைப்பாதைகளிலும் கால்கடுக்க நடந்தார். அவர் இயற்கையோடு ஒன்றியிருந்ததால் பேசுகையில் பறவைகள், பூக்கள், மீன், மிருகங்கள், மரங்கள், மழை, புயல், ஆடு, மேய்ப்பன், காற்றில் அசையும் நாணல் போன்றவைகளைக் குறித்த உவமைகளைச் சரளமாக மொழிந்தார். புது ரசம் பழைய துருத்திகளைக் கிழிப்பதைக் கண்டிருந்தார். அம்மா புளித்த மாவெடுத்து மாபிசைவதையும் அது மூடியைத் தூக்கிக்கொண்டு எழும்பி வருவதையும் பார்த்திருந்தார். அவரது பொது அறிவு பிரமாதம்!

வேனிற்கால வானத்தினடியில் படுத்துக்கொண்டு நட்சத்திரக் கூட்டங்களைக் கண்டுகளித்து தேவனைக் குறித்தும் மோட்சத்தைக் குறித்தும் கனாக் காணுங்கள். அது படைப்பின் ஆண்டவரோடு உங்கள் உறவை நெருக்கி அவர் மீதுள்ள உங்கள் அன்பை அனல் மூட்டிவிடும். ஒன்றுமே செய்யாமல் சும்மாயிருக்கவும் நேரம் வேண்டும். யோசேப்பு சொப்பனக்காரன். அவனது சொப்பனங்கள் பலித்தனவே! கனாக்காண பவுலுக்கு மூன்றாண்டு தேவையாயிருந்தது. முடிவில் அடங்காத் துடிப்புடனும் பிரஷர் குக்கர் ஆவியுடனும் திரும்பி வந்தான்!

பள்ளி, கல்லூரி நாட்களில் அனுதின வேதப் பகுதியை அவசரமவசரமாக ஒருவேளை முடித்திருப்பீர்கள். இப்பொழுது வாசித்துத் தியானித்து வேத நோட்டுப் புத்தகத்தில் எழுதலாம். சற்று கூடுதலாக ஜெபியுங்கள். ஒன்றிரண்டு மிஷனரி சரிதைகளை வாசிக்கலாம். சபை ஊழியங்களில் ஈடுபடுங்கள். விடுமுறை வேதாகமப் பள்ளி நடந்தால் அதில் மாணவராகவோ ஆசிரியராகவோ சேர்ந்துகொள்ளுங்கள். வேனிற்கால மிஷனரிக் குழு ஒன்றுடன் இணைந்து சென்று சொல்லொணா அனுபவங்களைப் பெறுங்கள். பயணம், நெடுநடை, சமையல், கிணற்றிலும் ஓடைகளிலும் குளிப்பு, தரையில் தூக்கம், பாம்பு தேள் அடித்தல், மலையேறுதல், சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் போன்றவை அரசருக்கும் கிட்டாத அனுபவங்கள்! நமது குழு ஒன்று ஓர் காட்டைக் கடக்கையில் யானைக் கூட்டம் ஒன்றைக் கண்டது!

இவ்விடுமுறையில், குடும்பத்தில் கலியாணமோ அல்லது வேறு கொண்டாட்டமோ நடக்கலாம். ஒளிந்துகொள்ளாதீர்கள். குஷியாயிருக்க ஒரு காலமுண்டு, குறும்பு பண்ணவும் ஒரு காலமுண்டு. பழைய நண்பருக்கு எழுதுங்கள். சில உறவினர், நண்பரைச் சந்தியுங்கள். ஈரமற்ற இவ்வுலகில் ஆசாபாச உறவுகளை கட்டுங்கள், காட்டுங்கள்.

பார்வையற்றோர், அநாதை அல்லது முதியோர் இல்லம் ஒன்றிற்குச் சென்று வரலாம். அவர்களைத் தொட்டு அணைத்து உங்கள் அன்பைக் காட்டுங்கள். அது அவர்கள் காரிருளைப் போக்கும் தீபமாகும். ஒருநாள்



அவர்களுக்கென ஒரு உற்சாக நிகழ்ச்சி நடத்தலாம். அகதிகள் காலனி ஒன்றிற்குச் சென்று அவர்கள் கண்ணீர்க் கதையைக் கேட்கலாம். போகுமிடமெல்லாம் ஏழ்மையையும் சமூக கொடுமைகளையும் காணத் தவறாதீர்கள். இவ்வனுபவங்கள் உங்கள் வாழ்க்கைச் சுக்கானைத் திசை திருப்பிவிடும்.

சமயம் வாய்த்தால் சங்கீதக் கச்சேரி அல்லது கிரிக்கெட் பந்தயத்திற்குச் செல்லலாம். சர்க்கஸ் அல்லது கண்காட்சி நடக்குமானால் விட்டுவிடாதீர்கள்! விடுமுறை ஏன் போரடிக்க வேண்டும்?

தனக்கு அரைமணிநேரம் ஓய்வு கிடைக்கட்டுமே என்று அப்பா எங்களை வலுக்கட்டாயமாக மதியம் படுக்கச்செய்வார்கள். அவர்களது முதல் குரட்டை கேட்டவுடனே எழுந்து கட்டிலுக்கடியாக நாலு கால்களில் ஊர்ந்து வாசலெய்துவோம். மரங்களில் ஏறி நீலநிறக் காக்கா முட்டைகளை எடுப்போம். அவை பாய்ந்து வந்து சிறகுகளால் அடிக்கும். முட்டையின் இருபுறமும் துவாரமிட்டு கருவை ஊதி எடுத்துவிட அப்பா சொல்லிக்கொடுத்தார்கள். விதவிதமான முட்டைகளை அடுக்க ஒரு கண்ணாடிப்பெட்டி செய்து கொடுத்தார்கள். தலை பிரட்டைகளைப் பிடித்து வந்து வீட்டில் வளர்ப்போம். கரும்பின் நுனியில் துவங்கி போட்டாபோட்டியாய் ஆறடியும் ஒரே மூச்சில் தின்னுத் தீர்ப்போம். அம்மா எங்களோடு சைக்கிள் ஓட்டவும், நீச்சலடிக்கவும், மழையில் குளிக்கவும் வருவார்கள்.

பக்கத்து வீட்டு பாட்டியிடம் வம்பிழுத்து ஓடிவிடுவோம். தாவீது பெத்லகேமின் தண்ணீருக்குத் தவித்ததுபோல அந்நாட்களை நினைத்து ஏங்குகிறேன். இப்பொழுது நானே ஒரு தாய். மகளோடு அமோக விடுமுறை நாட்களை அனுபவித்திருக்கிறேன்.

அருமையான பெற்றோரே, பிள்ளைகளோடு விடுமுறை அனுபவிக்க தலைதெறிக்கும் தினசரி வேலைகளிலிருந்து உங்களைச் சற்று விடுவித்துக் கொள்ளுங்கள். வயதாகிவிட்டதாக எண்ணாதீர்கள். வெளியே வயதானவர்களாக நடந்துகொண்டாலும் உள்ளே நாமெல்லாருமே சிரிக்கும் குழந்தைகள்தான். நாமும் இளைஞர்தான். பகற்கனாக் காணும் வாலிபர்தான். வயதாகாமல் வளர்வதில்தான் கெட்டிக்காரத்தனம் இருக்கிறது. பழைய பாதைகளில் நடந்து உங்கள் பழங்கதைகளைப் பிள்ளைகளுக்குச் சொல்லுங்கள். “கெட்ட கோபம் வருகிறது” என்கிறீர்களே. அதற்கு இது தான் நல்ல மருந்து மட்டுமல்ல, பிள்ளைகள் மனதைத் திறந்து உள்ளத்தை கொட்டும் மனோகரமான வேளையும் அதுவே!

**விடுமுறை வாழ்த்துக்கள்!**

# 7. மணமகனைத் தெரிந்தெடுப்பது மணமகளா, பெற்றோரா?

*(1993இல் நடந்த நங்கையர் முகாம் ஒன்றின் பட்டிமன்றத்தில் இக்கருப் பொருள் தீப்பறக்க விவாதிக்கப்பட்டது. இரு கட்சிகளின் கூற்றுகளும் கூறு போடப்பட்டு, சமநிலைக் கருத்து பலருக்கும் பயனளிக்கும்படியாக இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ளது. தென்னிந்தியராகிய நம்மில் சிலருக்கு இக்கட்டுரை பிள்ளைகளுக்கு அதிகச் சுயாதீனம் கொடுப்பதுபோல் தெரியலாம். எனவே செய்தியின் பொருளைப் புரிந்துகொள்ள கட்டுரை முழுமையையும் பொறுமை யுடன் வாசியுங்கள். கட்டுரையைச் சின்னாபின்னமாக்கித் துண்டுகளை உங்கள் கருத்தை உறுதிப்படுத்தவோ எதிர்க்கவோ தயவுசெய்து பயன்படுத்த வேண்டாம்).*

பாரதத்தின் பழங்காலத்தில் குழந்தைத் திருமணமே வழக்கமாயிருந்தது. கல்வியறிவு வளர வளர பெற்றோர் தங்கள் பிற்போக்கை உணர்ந்தனர். எனினும் வாலிபப் பெண்களைப் பள்ளிக்கு அனுப்பப் பயந்து, வயது வந்தவுடன் மணமுடித்தனர். நாட்கள் செல்லச் செல்ல தங்கள் குமாரத்திகள் படிக்க, பயிற்சிபெற, ஒரு வேலையும் செய்யவேண்டியதின் அவசியத்தை உணர்ந்தனர். இதனால் தங்கள் மகள்கள் பரந்தவுலகில் பறந்துசெல்ல அனுமதி கொடுக்கவேண்டியதாயிற்று. இப்பொழுது தம் மகள்கள் ஐ.ஏ.எஸ். ஆபீசர்களாகலாம், விமானம் கூட ஓட்டலாம் என்ற நம்பிக்கையுள்ள பெற்றோருக்கு அன்னார் தம் துணைவரைத் தெரிந்தெடுக்க முடியும் என்ற நம்பிக்கையில்லை. தனக்குத் தன் பெற்றோர் தெரிந்தெடுத்திருக்க தன் மகள் தானே தெரிந்தெடுப்பதா என மகளைக் குதறிவிடுகின்றனர். ஆனால் தமது வளர்ந்த பெண்களின் கருத்துக்களை மதிக்கும் பெற்றோர் பலரும் உண்டு என்பதை நாம் மறுக்க முடியாது.

சரி, பெற்றோர் மணமகனைத் தெரிந்தெடுப்பதால் வரக்கூடிய நன்மை தீமை என்ன? முதலாவதாக இப்படிப்பட்ட அநேக திருமணங்களில் மைய நபராகிய பெண் கலந்தாலோசிக்கப்படுவதில்லை. அவளைக் கேட்பதுகூட கிடையாது. பெற்றோர் பையனைப் பார்த்துப் பிடித்திருக்கிறது என்று ஒழுங்கு



செய்து, கட்டு தாலியை என்றால் கட்டிவிடவேண்டும். மணநாளில்தான் மணமகனை முதல் முறையாகத் தரிசிக்கும் பெண்கள் எத்தனை தெரியுமா? வாழப்போகிறவள் அவளல்லவா? பெற்றோர் சிலவேளை பெண்ணுக்குப் பையன் பொருத்தமா என்று பார்க்கின்றனர். அல்லது பணம், இனம், நிறம், மற்றும் ஜாதகத்தை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்றனர். இது சரியா? பாட்டியோ தாத்தாவோ சொல்லிவிட்டு செத்துவிட்டால் பெண் செத்தாள்! குடும்பச் சொத்து வெளியே போகக்கூடாதென்றும் உறவினரையே கட்டிவைப்பர். பெண்ணுக்கு ஒரு குறையோ, வியாதியோ, கெட்ட குணமோ இருந்தால் ஜோடித்து பூச்சா காட்டி கட்டிக்கொடுத்து விடுவர். அதற்குபின் வருவதை அவளல்லவா கட்டிக்கொள்ளவேண்டும். அல்லது பெண் வேறு திட்டமிடுகிறாள். எடுத்துக்காட்டாக, திருமணம் செய்யாதிருக்கவோ, மிஷனரியாகவோ, வேறு இனப் பையனை மணக் கவோ விரும்புகிறாள் என்று தெரிந்துவிட்டால் அவ்வளவுதான். ஒருவனைப் பிடித்து மூன்று முடிச்சு போட்டுவிடுவர். பையனது பெற்றோரின் திரு விளையாடல்கள் வேறு. மணமுடித்தபின் மாப்பிள்ளை சொல்லுகிறான், நான் இன்னொருத்தியைக் காதலித்து கொண்டிருந்தேன்; பெற்றோரோ கட்டாயமாகக் கட்டிவைத்துவிட்டார்கள் என்று! "குடித்துக்கொண்டு ஊதாரியாகத் திரிந்தான், காலுக்கு ஒரு கட்டுபோட்டால் சரியாகிவிடு வானென்று பார்த்தோம்" என்று! அதற்கு ஒரு பெண்ணா போக்காடு? இனி அவள் வாழ்வெல்லாம் கண்ணீர்தான். பையன்களுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் முதுகெலும்பில்லாத குறை. சிலர் தம் மகள்களை ரொக்கம் கொடுக்க வழியின்றி வயதானவருக்கும் இரண்டாந்தரமாகவும் இரண்டாவது மனைவியாகவும்கூடக் கொடுத்துவிடுகின்றனர்.

விசுவாசிகளல்லாத பெற்றோர் தங்கள் விசுவாசிகளான குமாரத்திகளை மேற்கண்ட காரணங்களுக்காக அவிசுவாசிகளை மணக்க வற்புறுத்து கின்றனர். மகள் ஒழுங்காவாள் என்று சில விசுவாசிகளான பெற்றோர் அவிசுவாசியான மகளுக்கு விசுவாசியைத் தேடுகின்றனர். தீர்க்கதரி சியம்மாள் சொல்லிவிட்டால் போதும்; பெற்றோருக்கு உதறல் எடுத்துவிடும். "கர்த்தரைக் கோபப்படுத்தாதே, கட்டிக்கொள்" எனக் கெஞ்சுவர்.

பெற்றோர் பார்ப்பதே சரி என்று அடித்து கூறாமல் கொஞ்சம் நடுநிலையாகப் பேசினால் என் நிலை என்னாகும் என உணர்ந்துதான் எழுதுகிறேன். வேதத்தின் எந்தப் பாவப் பட்டியலிலும் இல்லாத காதலெனும் குற்றத்திற்காக உதைக்கப்பட்ட உள்ளங்கள், அடிக்கப்பட்டோர், கொல்லப் பட்டோர், அவமானப்படுத்தப்பட்டோர், வெறுக்கப்பட்டோர், ஒதுக்கப்பட் டோர், சித்திரவதை செய்யப்பட்டோர், வீட்டைவிட்டே விரட்டப்பட்டோர், தற்கொலைக்குத் துரத்தப்பட்டோர் சார்பாக தலைச்சீரா அணிந்துகொண்

டாவது பேச ஒருவர் தேவை. பெற்றோரால் ரொக்கம் கொடுக்க முடியாது, காதலித்து தங்கள் சாட்சியைக் கெடுத்துக்கொள்ளவும் முடியாது என்று மணமாகாமலேயே காலத்தை ஒட்டும் பெண்களைச் சிந்தித்துப் பாருங்கள். பிற மதத்திலிருந்து மனந்திருப்பினவர்கள் ஒரு கிறிஸ்தவனைக் காதலிக்கவும் விடமாட்டோம், பெற்றோர் பார்க்கும் கிறிஸ்தவனல்லாதவனைக் கட்டவும் விடமாட்டோம். நம்மைப் போல் பரிசேயர் உண்டோ ? உறவினர் அக்கறை காட்டாத அநாதைகள் என் செய்வர் ? சமுதாயமே, நீ சிந்திக்கமாட்டாயா ?

பெற்றோர் இனியும் தங்கள் பெண்களை நசுக்கி ஆளக்கூடாது. இக்காலப் பெண்கள் முட்டாள்களல்ல, சிந்திப்பவர்கள். கற்ற தொழிற்கலையோடு சுயாதீனமாக வாழவும் தெரிந்தவர்கள். சுயாதீன உலகை TVயில் தினமும் பார்க்கிறார்கள். இன்னும் அவர்களோடு கண்ணாம்பூச்சி ஆடமுடியாது. பெண்கள் பலர் தம் திருமணக் காரியத்தை தம் கையில் எடுக்கத் துவங்கிவிட்டனர். பெற்றோர் சிந்தித்துச் செயல்படுவது நலம். நமது மனச்சாட்சி பூர்வீகப் பழக்கங்களினாலே பாவமான ஆசைகளினாலே குழம்பிப்போகலாம், மழுங்கிப்போகலாம் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

காதலிப்பது தவறா என்று கேட்பது கத்தி அபாயகரமானதா என்று கேட்பது போன்றது. கத்தி கத்தரிக்காயையும் வெட்டும், கொலையும் செய்யும். கத்தி அபாயகரமானது; அதைத் தொடவே கூடாது எனக் கற்பித்தால் காலமெல்லாம் கத்தரிக்காயை கையால் பிய்த்துக் குழம்பில் போட்டுக் கஷ்டப்படுவோம். வைத்தியர் கத்தியைத் தொட மறுத்தால் பல உயிர்கள் பலியாகலாம். அதே சமயம் கத்தியில் ஆபத்தேதுமில்லை என்று சொல்லிவிட்டால், சிறுவரும் எடுத்து விளையாடி பேராபத்திற்குள்ளாவர். இக்கேள்விக்குப் பதில் கத்தியைக் கையாடக் கற்றுக்கொடுத்து, 'கவனம்' என்று ஒரு வார்த்தை சொல்லி அனுப்புவதேயாகும்.

மறுபக்கத்தையும் பார்ப்போம். பெற்றோரின் கட்டுப்பாடு இல்லையேல் என்ன நடக்குமென்று சிந்திக்கவே இயலாது. காதல் கலாச்சாரமுள்ள நாடுகளில் பன்னிரெண்டு வயதிலேயே பெண்களுக்கு காதலெனும் மோதல். அதில் தலை உடைந்தால் அடுத்தது ; பின் அடுத்தது. தன் மணமகனைத் தெரிந்தெடுப்பதற்குள் அவள் காதலில் பலமுறை விழுந்து எழுந்து காயப்பட்டு... அதை ஏன் கேட்கிறீர்கள் ? உடலையும் உள்ளத்தையும் ஒருவருக்கே கொடுக்கும் புனிதம் புளித்துப்போகிறது. நமது நாடும் இப்படி ஆகிவிடுமோ ? காதல், காதல் என்று கருத்தரித்துவிடும் பெண்கள் எண்ணிக்கை கூடிக்கொண்டே வருகிறது. காதலுக்குக் கட்டுப்பாடு கடினம் என்பதால்தான் பெற்றோரின் கட்டுப்பாடு அவசியம்.



மாறிகொண்டிருக்கும் நம் கலாச்சாரத்தில் காதல் மணங்களை பெற்றோர் இன்னும் ஒத்துக்கொள்ளாதிருக்கும்போது ஒரு பெண் தான் புரிந்து கொண்டதாக நினைக்கும் ஒரு வாலிபனோடு செல்வதால் தன் பெற்றோரை இழக்கிறாள். வாழ்க்கையில் ஓர் இடி விழுந்தால் பெற்றோரிடம் திரும்ப இயலாமல் நடுவீதியில் நிற்கிறாள். இருவரும் திருமண வைபவம் நடத்த தீர்மானித்தாலும் ஏதோ மூலையில் நடக்கிறது. தேங்காய், பழம், பொட்டலம் இரண்டு போதும். பதிவாளருக்கும், சாட்சியாளுக்கும்தானே ! சமுதாயக் கட்டுப்பாடு இல்லாததால் அவன் விட்டுப் போனாலும் கேட்க ஆள் கிடையாது.

காதல் மணங்களில் பெண்கள் தங்கள் பெற்றோரின் முதிர்ந்த ஆலோசனையை அசட்டை செய்து பொதுவாக தம் சிநேகிதியரின் ஆலோசனையையே ஏற்கின்றனர். நகரங்களிலும், இருபாலர் பள்ளி, கல்லூரிகளிலும் பெண்கள் வாலிபரிடம் பேச சற்று வாய்ப்பு உண்டு. ஆனாலும் பொதுவாக நம் சமுதாயம் வாலிபரிடம் பேசும் பெண்களை சந்தேகக் கண்ணோடேயே பார்க்கிறது. பெற்றோர் பெண்ணை உள்ளே போ என்று துரத்துகின்றனர். ஆகவே அவள் ஒரு பையனை பார்த்தவுடனே படபடக்கிறாள். நீயின்றி நானில்லை என்பானானால் மயங்கிவிடுகிறாள். மேசைக்கடியில் கடிதம் வாங்குகிறாள், கொடுக்கிறாள். ஒருநாள் மூட்டைமுடிச்சோடு அவனோடு ஓடிப்போகவும் ஆயத்தமாகிறாள். மடமை ! ஊட்டி வளர்த்த பெற்றோரை விட்டு நேற்று வந்தவனை நம்பி ஓடுவதா ?

பெண் பிள்ளைகள் பலரோடு பழக வாய்ப்பு இல்லாதபடியால் அநேகர் தம் உறவினரையோ, பக்கத்து வீட்டுப் பையன்களையோ காதலிக்கின்றனர். அநேகருக்குப் பள்ளியிலே காதல். இவ்வயதில் நிலை, பின்னணி, கலாச்சாரம், படிப்பு, வேலை, இவை எவ்வாறு மணவாழ்வைப் பாதிக்கும் என்று புரியுமா ? வாலிபர் திருமணம் என்றால் தேன் நிலவைத்தான் நினைக்கிறார்கள். பெற்றோருக்குத்தான் அதற்குப்பின் வருவது தெரியும்.

ஒருத்தி பள்ளியிலேயே ஒருவனுக்குக் கையடித்துக் கொடுத்துவிட்டு, முதுநிலைப் பட்டம் பெற்றபின் வாக்கை மீறக்கூடாதே என்று அவனையே மணக்கிறாள். அவனோ ஹோட்டலில் பெஞ்சு துடைத்துக்கொண்டிருப்பான். சிலவேளை இருவரும் காதலினால் பள்ளியிலேயே பதின்மூன்றாம் வருடமோ பதினான்காம் வருடமோ படித்துக்கொண்டிருப்பர். பெற்றோர் தம் இரத்தத்தைப் பணமாக்கிப் படிக்க வைக்கவேண்டியது; இங்கே இவர்கள் கூத்தடிக்கவேண்டியது. காதலுக்கு கண்ணில்லை. திருமணம் திறக்கும் கண்களை ! பெற்றோர் இதையெல்லாம் யோசித்து தம் மகளுக்கு ஏற்றவனைத் தெரிந்தெடுக்கிறார்கள். அத்திருமணம் உற்றார், உறவினர், ஊழியர் சூழ எத்தனை சிறப்பு !

கடைசியாக வாலிபப் பிள்ளைகளே, காதலிப்பது பாவம் எனப்படும் இடத்தில் இருப்பீர்களானால் வேதத்தை விளக்கிப் பயனில்லை. நீங்கள் தலைதூக்கி நடக்கவேண்டுமானால், ஊழியம் செய்ய வேண்டுமானால், சுற்றத்தைக் கவனித்துத்தான் வாழவேண்டும். இல்லையேல் சாட்சி போய் விடும். கவலைப்படாதீர்கள். கர்த்தர் உங்கள் பெற்றோர் மூலமாகவே உங்கள் கதாநாயகனைக் கொண்டுவருவார். உங்களுக்கொரு வாலிப மகள் இருக்கும்போது நீங்களும் இன்று உங்கள் அம்மாவைப்போல் குதிக்கத்தான் செய்வீர்கள். என்னை வாலிபரோடு பழகவிடவில்லை என்று என் பெற்றோரைக் குறை கூறினேன். இன்று கர்த்தருக்கு அடுத்து என் பெற்றோருக்கு நன்றியுள்ளவளாக இருக்கிறேன். எனது தீர்மானங்களில் உறுதியாக நின்றேன். கர்த்தர் சரியான நபரைப் பெற்றோர் மூலமே கொண்டுவந்தார்.

பெற்றோர் தெரிந்தெடுத்தால் உங்களுக்குப் பொறுப்பில்லை என்பது கருத்தல்ல. முடிவான பொறுப்பு உங்களுடையதே. சரி அல்லது வேண்டாம் என்கிற இறுதி வார்த்தை உங்களுடையதே. பையனிடத்தில் நீங்களும் பேசி உங்களுக்குரியவன் அவன்தான் என்று உங்களைத் திருப்திப்படுத்திக் கொள்ளவேண்டும். அவன்மீது அன்போ விருப்பமோ துளிர்க்காத பட்சத்தில் வேண்டாம் என்று சொல்லத் தயங்கக்கூடாது. மணமுடித்தபின் உங்கள் பெற்றோரைக் குற்றஞ்சாட்டக்கூடாது. மனக்குழப்பம் இருப்பின் இக்காரியத்தை ஜெபத்துடன் தீர்மானிக்கச் சற்று அவகாசமும் கேட்கலாம். நிச்சயதார்த்தத்திற்குப் பின் உங்களால் ஒத்துக்கொள்ளமுடியாத சீரற்ற காரியங்கள் ஏதேனும் தெரியவந்தால் ஒப்பந்தத்தை முறிக்க மனவுரம் வேண்டும். அதுதானே நிச்சயத்திற்கும் திருமணத்திற்குமுள்ள வேறுபாடு! மற்றபடி வாழ்நாளெல்லாம் அல்லலுறவேண்டுமே.

வேதம் எப்பக்கமும் சாயவில்லை. இரண்டுவித திருமணங்களையும் ஒத்துக்கொள்கிறது. இரு எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம். ரெபெக்கா ளுக்கும் ஈசாக்குக்கும் பெற்றோர் ஒழுங்கு செய்தனர். ஆனால் இறுதித் தீர்மானம் பெண்ணிடம் விடப்பட்டது. ஈசாக்கை ஏற்கவோ ஏற்காதிருக்கவோ ரெபெக்காளுக்கு முழுச் சுதந்திரம் அளிக்கப்பட்டது (ஆதி 24:57,58).

அடுத்து, யாக்கோபும் ராகேலும் காதலித்து மணந்தனர். இங்கே யாக்கோபின் பெற்றோர் அவனே தன் மணமகளைத் தெரிந்தெடுக்கச் சுதந்திரமளித்து, கானானியப் பெண் மட்டும் வேண்டாம் என்றனர் (ஆதி 27:46; 28:2). இது திருட்டுக் காதலல்ல. பையன் தேவ பக்தியுள்ளவன் என்பதால் பெற்றோர் ராகேலைத் தடை செய்யவில்லை. புதிய ஏற்பாட்டு மொழியில் ''தனக்கு'' இஷ்டமானவனாயும் கர்த்தருக்குட்பட்டவனாயு மிருக்கிற எவனையாகிலும் விவாகம் பண்ணிக்கொள்ள விடுதலை!



(1 கொரி 7:39). பழைய ஏற்பாட்டு ஒழுங்கும் அதுவாகத்தானிருந்தது. அவர்கள் ''தங்களுக்கு'' இஷ்டமானவர்களை விவாகம் செய்யலாம்; ஆனாலும் தங்கள் பிதாவின் கோத்திர வம்சத்தாரில் மாத்திரம் விவாகம் செய்யவேண்டும் (எண் 36:6). வட்டத்திற்குள் விடுதலை!

அதாவது, பெற்றோர் பிள்ளைகள் இருவருமே ஈடுபடவேண்டிய காரியமிது. கர்த்தர் இப்படியோ அப்படியோ எப்படியும் செய்யலாம். இருவரும் ஒருவருக்கொருவர் திறந்த மனதுடனிருக்கவேண்டும். பெற்றோர் வளைந்து கொடுக்க ஆயத்தமாயிருக்கவேண்டும். ஒரு மகள் தன் துணையைத் தெரிந்தெடுக்கலாம். அடுத்தவளுக்கு நீங்கள் தேடவேண்டி வரலாம். மேராபுக்கு பெற்றோர் ஒழுங்கு செய்தனர்; மீகாள் காதலித்து மணந்தாள் (1 சாமு 18:19,20). பெற்றோர் நாங்கள் பார்ப்பதுதான் என்று பிடிவாதம் பண்ணவும் கூடாது. மகள் நான் ஓடிவிடுவேன் என்று ஒற்றைக்காலில் நிற்கவும் கூடாது.

பெற்றோர் பார்ப்பதெல்லாம் கரையேறிவிடுகிறதென்றும் காதல் மணங் களெல்லாம் கவிழ்ந்துவிடுகிறதென்றும் சொல்லமுடியாது. பெற்றோர் பிரமாத மாகப் பார்த்திருக்கின்றனர். குமாரத்திகளும் மங்களமாகப் பார்த்திருக் கின்றனர். ஆகவே ஒருவரையொருவர் பார்த்துப் பல்லைக் கடிப்பதை நிறுத்தி, சற்று கைகுலுக்குங்களேன். கிணற்றுத் தவளையாக உலகம் போகும் போக்கை அறியாமல் மகளைப் பயமுறுத்தும் பெற்றோர் ஞானி களல்ல. சினிமா காதல் கதைகளை உண்மையாகப் பாவிக்கும் கன்னியர் விவேகிகளல்ல. சிறு வயதிலிருந்தே பெற்றோரும் மகள்களும் ஒத்து ழைப்பதே உசிதம். பெற்றோர் பிள்ளைகளுக்கு நேரம் செலவழித்து, அன்பு காட்டி, அவர்களைப் புரிந்துகொள்பவர்களானால், பெண் பிள்ளைகள் இரகசியமாகக் காதலிப்பதைச் சிந்தியார்கள். சொல்லப்போனால், கொடூரமான பெற்றோர் தம் பெண் பிள்ளைகளை அன்பும் அரவணைப்பும் தரும் அந்நிய கரங்களுக்குத் துரத்துகின்றனர்—அறியாப் பருவத்திலேயே.

பெற்றோர் தம் முன்னிலையில் தம் பெண் பிள்ளைகள் வாலிபருடன் கலந்துறவாட அனுமதிப்பாரானால் (ஒட்டுக் கேட்காமல், ஓரக்கண்ணால் மேற்பார்க்காமல்), அல்லது பாதுகாவலான இடங்களில் பழக அனுமதிப் பாரானால், பெண்கள் வாலிபரைக் கண்டால் பறக்கமாட்டார்கள். வாலிபப் பிள்ளைகளை விட்டுவிடவும் முடியாது; கூடைக்குள் கவுத்திப்போடவும் முடியாது. இரண்டிற்கும் இடையில் இரும்புப் பிடியைத் தளர்த்தி விட்டுக் கொடுப்பதே கெட்டிக்காரத்தனம். பாலுறவு என்றாலே பாவம் என்ற பாங்கு சரியல்ல. பொறுத்திருந்து ஏற்ற காலத்தில் அனுபவிக்க வேண்டிய புனிதமான இன்பம் அது என்று பிள்ளைகளுக்குப் புரியச் செய்யவேண்டும்.

பெற்றோர் வெட்கப்படாமல் காதல், திருமணம், பாலுறவு போன்றவற்றை வெளிப்படையாகக் கலந்துறவாடுவாரானால், மகள் யாரையும் விரும்பினால் அவனையும் பார்க்கலாமென்று உறுதியளிப்பாரானால், பெண்கள் ஓடிப் போவதைக் குறித்து நினைக்கவே மாட்டார்கள்.

பிள்ளைகளோடு அவர்களது எதிர்காலத்தைக் குறித்த வழிநடத்து தலுக்காக ஜெபியுங்கள். நாம் ஒழுங்கு செய்தால் கவுரவம், காதல் திருமணமென்றால் அவமானம் என்ற எண்ணத்தை பெற்றோர் விட்டொழிக்கவேண்டும். மகள் தவறாக தெரிந்தெடுத்தால் எச்சரித்து அதின் விளைவுகளை விளக்கத் தயங்காதீர்கள். அதையும் மிஞ்சி அவள் தன் வழியே சென்றால் அது அவள் பொறுப்பு. கெட்ட குமாரனைக் கட்டிப்போட்டு வைக்கவில்லையே தந்தை! பிள்ளைகளை நம் விருப்பம்போல் பிடித்துத் தள்ளுவதை நிறுத்தி நன்மையானதைத் தெரிந்தெடுக்க இத்தனை ஆண்டுகளாய் நாம் கற்றுக்கொடுத்தவற்றை அவர்கள் அப்பியாசிக்க அவர்களை நம்பி விட்டுவிடக் காலமாயிற்று. இதிலும் நன்மையுண்டு. விட்டுவிட்டால் பொறுப்பை உணர்ந்து நம்மிடம் ஆலோசனைக்கு வருவர்.

திருமணம் ஒரு குடும்ப விவகாரம். பிள்ளைகள் தனியாகச் செய்யக் கூடாது. பெற்றோரது ஆலோசனையை வரவேற்று அவர்களையும் ஈடுபடுத்தவேண்டும். அவர்கள் போட்டக் கோட்டில் நடக்கவேண்டுமென்பதல்ல. ஜெபியுங்கள். ஜெபித்துகொண்டேயிருங்கள். எப்படிப்பட்டவரை மணக்க விரும்புகிறீர்களென்று பெற்றோரிடம் சொல்லுங்கள். சரியானவரை தேவன் பெற்றோர் மூலமோ உங்களிடமோ காண்பிக்கலாம். அதை நிச்சயமாக அறியவும் ஜெபியுங்கள். குழப்பமிருந்தால் பொறுத்திருங்கள். புத்தியைப் பயன்படுத்துங்கள். உங்கள் ஆன்மீகத் தலைவரது ஆலோசனையை நாடுங்கள். பெற்றோர் அகமகிழ்ந்தால் ஆனந்தம். இல்லையேல் அவர்களுக்கு விளக்குங்கள். அவர்களது விவாதத்தையும் கவனமாகக் கேளுங்கள். அதன் பின்பு உங்களுக்குத் திருமண வயதானால் (அரசு குறிப்பிட்டிருக்கும் 21க்கும் குறைப்பது சரியல்லவே!) தீர்மானியுங்கள்.

பருவழகிகளின் படபடப்பையும் நெடுநாள் துன்பமும் இன்பமும் கலந்தளித்த அனுபவ முதிர்ச்சியையும் இணைப்பது இயலாததல்ல. பெற்றோருக்குப் பெண்மக்களின் பாசம் தேவை. பெண்மக்களுக்குக் குடும்ப வாழ்வில் பெற்றோரின் ஒத்தாசை தேவை. ஒருவரையொருவர் இழந்துவிடாதீர்கள். மகள் தனியே தீர்மானிப்பது ஆபத்து. தாயும் தகப்பனும் மட்டுமே பார்ப்பது போதாது. மணமகனைக் கட்டியிழுக்க ஏக், தோ, தீன் அவசியம். முப்புரிநூல் சீக்கிரம் அறாதல்லவா? எப்படியோ திருமணம் நறுமணமானால் சரி!



# 8. கொஞ்சம் பொறுத்திருங்களேன்!

உலகமே பிருந்தாவனமாயிருந்தது அவர்களுக்கு — ஒருநாள் தங்களையும் அறியாமல் மதிமயங்கி ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துவிட்ட விநாடிவரை! அதுவே அவர்களது காதல் இரதத்தின் கடைசிப் பயணம். தான் கருத்தரித்திருக்கிறாள், அவன் பொறுப்பேற்க மறுக்கிறான் என்பதறிந்த அவளுக்கு வானமே இடிந்து விழுந்தது போலிருந்தது. கருச்சிதைவு செய்வதொன்றே வழி என்றான் அவன். குற்றஞ்சாட்டுதல், கசப்பு, மனமுறிவு, இவை இறுதியில் இருவரையும் பிரித்துவிட்டன. என்ன வந்தாலும் சரி குழந்தையைப் பெற்றெடுக்கத் தீர்மானித்துவிட்டாள் அவள்; அவனோ சுதந்திரப் பறவையாக அவளது வாழ்வைவிட்டே பறந்து போய்விட்டான். கவலையீனமான அந்த சில விநாடிகளினால் மணமாகாத தாய் எனும் பட்டத்தை இனி அவள் வாழ்வெல்லாம் சுமந்து திரியவேண்டும். ஆனால் அவனும் மணமாகாத தகப்பனல்லவோ? அவர்கள் இன்னும் கொஞ்சம் காத்திருந்திருப்பார்களேயானால்...!

### சிந்தியுங்கள்!

வாலிபர் சற்று நிமிர்ந்து உட்கார்ந்து திருமணத்திற்கு முன் பாலுறவு கொள்வதைக் குறித்துச் சிந்திக்கக் காலமாயிற்று. இந்த கதையைக் கவனித்துப் பாருங்கள். சிலர் அவனைக் கோழை எனலாம். வேறு சிலர் அவளை முட்டாள் எனலாம். ஆனால் காரியம் அதுவல்ல. பாலுறவு மணமானவருக்கு மட்டுமே உரிய சிலாக்கியம் எனும் அடிப்படை நெறியை மீறிவிட்டனர் அவர்கள்.

சமீப காலம்வரை மணமாகுமுன் பாலுறவுகொள்ளுதல் பாவமென ஓங்கிக் கண்டிக்கப்பட்டதால் இளைஞருக்குப் பயமிருந்தது. இரகசியமாக ஈடுபட்டாலும் குற்றவுணர்வடைந்தனர். ஆனால் காலம் மாறிவிட்டது. பையன்களும் பிள்ளைகளும் ஒன்றாகப் படிக்கின்றனர், விளையாடு

கின்றனர், தங்கவும் செய்கின்றனர். இப்பாவம் விளையாட்டாகிவிட்டது. பயமும், வெட்கமும் மறைந்துகொண்டே வருகின்றன. சீக்கிரம் குற்றவு ணர்வும் போய்விடும். வரும் நாட்களில் வாலிபர் பாலுறவு எங்களுக்கு மட்டும் ஏன் விலக்கப்பட்ட கனி என வாதாடத் துவங்கிவிடுவர்.

## பாலுறவு இறைவனது யோசனை

இறைவனே பாலுறவை உண்டாக்கினவர். மனிதரை ஆணும் பெண்ணு மாக உருவாக்கி இன்பத்திற்காகவும் இன விருத்திக்காகவும் அவர்கள் ஒருவரையொருவர் கவரும்படிப் படைத்தார். இறைவனால் படைக்கப்பட்டது தீதாயிருக்க முடியாது. ஆனால் இறவைனது ஈவைத் துர்ப்பிரயோகம் செய்யலாம். உண்பது பாவமல்ல. பெருந்திண்டியோ பாவம். அப்படியே பாலுறவிலும் பொறுப்புகள் உண்டு.

## விஞ்ஞானமும் பாலுறவும்

மணமாகாதோர் கருத்தரிப்பின் பயமின்றி உடலுறவுகொள்ள அறிவியல் வழிவகுத்துவிட்டது. ஆண்டாண்டு காலமாக அடக்கி வைக்கப்பட்டிருந்த உடலுணர்வுகளெல்லாம் இக்கடைசி நாட்களில் சோடா புட்டியைத் திறந்தது போல சீறிக்கொண்டு வெளியாகின்றன. கருத்தடைச் சாதனங்களைப் பிரயோகித்து இனவிருத்தியின்றி இன்பம் அனுபவிக்கலாமே என இளைஞர் எண்ணுகின்றனர். தம்பி தங்கையரே, கருத்தரிப்பைத் தடுத்து விடுவதினால் மணத்திற்குமுன் பாலுறவு சுத்தமான செயலாகிவிடாது.

கருத்தடைச் சாதனங்கள் என்றுமே உங்களைக் கைவிடலாம். அவை நூற்றுக்கு நூறு பாதுகாப்பல்ல. அவற்றையும் மீறி கருத்தரிப்பு உண்டாகிறது. கருச்சிதைவும் வழியல்ல; அதில் பல ஆபத்துகள் உண்டு. அது உங்கள் உயிரையே வாங்கிவிடலாம். மட்டுமல்ல, கருச்சிதைவு ஒரு கொலைதானே ?

## பாலுறவு நோய்கள்

கருத்தரித்தலைத் தடை செய்யும் சாதனங்கள் பாலுறவு நோய்களைத் தடை செய்யுமென்பது உறுதியல்ல. இவை உடலுறவின் மூலமாக ஒருவரிடத் திலிருந்து மற்றொருவருக்குப் பரவும். வெள்ளைபடுதல், இனவிருத்தி அவய வங்களில் புண், சிறுநீரில் இரத்தம், நீர்க்கடுப்பு, தொடைச் சந்தில் நெறிக் கட்டுதல், காய்ச்சல், உடம்புவலி போன்ற அறிகுறிகளாக வெளிப்படும்.



சிபிலிஸ் போன்ற வியாதிகள் இருதயம், மூளை மற்றும் எல்லா அவயவங் களையும் பாதிக்கக்கூடியவை. சில, அறிகுறியின்றி இரத்தத்திலேயே சிலகாலம் உறங்கி, பிந்திப் பாதிக்கும். எயிட்ஸ் நோயின் ஆபத்தைப் பார்த்திருப்பீர்கள், வாசித்திருப்பீர்கள். விருப்பப்படி பாலுறவில் ஈடுபடும் வாலிபர் இவ்வறிகுறிகள் தோன்றினால் திருடனுக்குத் தேள் கொட்டியது போல் தவிக்கவேண்டி வரும். யாரிடமும் சொல்லவும் தயங்குவர். ஆபத்து என்னவெனில் சில வியாதிகள் வைத்தியமின்றி வெளிப்படையாக குண மானது போலாகி உள்ளே பரவுவதால் சரியாகிவிட்டதென்று நம்பச்செய்யும். இந்நபர்கள் ஆரோக்கியமாகத் தெரிந்தாலும் பிறருக்கு தம் வியாதியைக் கடத்துவர். இவற்றில் சில நோய்களுக்கு மருந்தே கிடையாது.

## ஏமாற்றாதே, ஏமாறாதே !

இப்படி ஏதேனும் வியாதி இருந்தால் உடனே வைத்தியம் செய்துகொள் ளுங்கள். உங்களையும் பிறரையும் ஏமாற்றாதீர்கள். வாலிபப் பருவத்தின் களங்கமின்மையில் ஒருவர் சற்று ஆசை காட்டினால் அப்படியே மயங்கி விடுகிறீர்கள். அதுவும் வீட்டில் அன்பு கிடைக்காவிடில் ஆறுதலாய்ப் பேசி அரவணைக்கும் கரங்களை நம்பி அடைக்கலம் புகுந்துவிடுகிறீர்கள். சீக்கிரம், “என்னை நேசிப்பாயானால் என்னோடு படுக்க வா” என்ற அழைப்புக்குப் பதில் கொடுக்கும் நிலை. மறுத்தால் விட்டுப் போய் விடுவானோ என்ற பயம். நீயே அவனது ராணி என நம்பவைத்துவிடுகிறான். ஏமாறாதே. களங்கமற்ற கன்னியரை ஏமாற்றிக் கெடுப்பதே சில வாலிபருக்குப் பொழுதுபோக்கு. கன்னியின் உள்ளம் மட்டுமல்ல, வாழ்க் கையே உடைந்துபோகிறது. அவன் எத்தனை பேரைக் கெடுத்தவனோ, எச்சரிக்கை. இழந்த கன்னிமையைத் திரும்பப் பெறமுடியாதே.

ஆண்களை மட்டும் குற்றம் சொல்லுவதற்கில்லை. வாலிபருக்கு வலை விரிக்கும் கன்னியரும் உண்டு. இப்படிப்பட்ட சிலுப்பட்டைகளுக்கு வாலிபர் விலகி இருக்கவேண்டும். வாழ்நாளெல்லாம் துக்கிக்காதபடி எப்பொழுதும் விழிப்பாயிருங்கள்.

## பன்டோராவின் பெட்டி

பன்டோராவின் பெற்றோர் ஒரு பெட்டியை வீட்டில் வைத்து அதைத் திறக்காதபடி எச்சரித்து வெளியேறினர். குறுகுறுப்பான அவள் திறந்து பார்த்தாள். தேனீக்களால் கொட்டப்பட்டு முகம் வீங்கியது. ஆம், பெற்றோர்

எச்சரிக்கின்றனர். ஆனால் பொறுத்திருக்கக் கூடாதவர்களுக்கு வியாதி, துக்கம், குற்றவுணர்வு, கர்ப்பம், அவமானம், பயம் என்னும் தேனீக்கள் கொட்டும். மணநாள் வரை பொறுத்திருந்தால் தேன் கிடைக்குமே.

## பேடி நண்பர்

உங்களைத் தள்ளிவிட்டு வேடிக்கை பார்க்கும் கூட்டம் ஒன்றுண்டு. காதலிக்காவிடில், பாலுறவு கொள்ளாவிடில், பேடி எனப் பகடி செய்வர். யார் பேடி? இலகுவானதைச் செய்பவனா? சோதனையைத் தாங்கி உறுதியாய் நிற்பவனா? இந்தப் பேடி நண்பர்களை விட்டொழியுங்கள்.

## இடை நபரைக் குறித்து எச்சரிக்கை!

இளம் பெண்களை வாலிபருக்கு அறிமுகப்படுத்திவிடும் பெண்களுண்டு. சிலர் கடிதங்களை அங்குமிங்கும் சுமந்து செல்லும் அன்னப் பறவைகள் எனத் தங்களைக் கருதுகின்றனர். ‘வேலை’ தருவதாக வாக்களித்து கன்னியரைக் கடத்திச் செல்லும் பலரும் உண்டு. கன்னியரே கவனம்!

## கடவுள் சொல்வதென்ன?

ஒருவர் அல்லது இருவருமே மணமாகாதவரானால் அப்பாவம் வேசித்தனம் என்னப்படும். “வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனிதன் செய்கிற எந்தப் பாவமும் உடலுக்கு புறம்பாயிருக்கும்; வேசித்தனம் செய்கிறவனோ தன் சுய உடலுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறான்” என்று வேதம் வெளிப்படையாகச் சொல்லுகிறது (1 கொரி 6:18). “விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாக மஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்” (எபி 13:4). “வேசி மார்க்கத்தார்... தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை” (1 கொரி 6:9,10).

## ஆண்மையான ஆண்கள்

பாலுறவை அனுபவிக்க திருமணம் வரை காத்திருப்பது கூடாத காரியம் என்பது பல வாலிபரின் கருத்து. அது பிசாசின் பொய். யாக்கோபு ராகேலைக் காதலித்தான். நெருங்கிக் குடியிருந்தனர். இருவரும் இடையர். பாலுறவு கொள்ள வாய்ப்புகள் இல்லாமலில்லை. இருப்பினும் அன்பின் உச்சக்



கட்டத்தை அடைய ஏழாண்டுகள் காத்திருந்தனர் (ஆதி 29:20,21). யோசேப்பின் எஜமாட்டி அவனைச் சுற்றிச் சுற்றி வந்தாள். யோசேப்போ அவளோடிருக்கவும் சம்மதிக்கவில்லை. ஒருநாள் அவள் அவனைப் பிடித்திழுத்தபோது அவன் வெளியே ஓடிவிட்டான் (ஆதி 39:1-12). இறைவன் அவனை உயர்த்தினார். ரூபனோ வேசித்தனம் செய்து சாபத்தைக் கட்டிக்கொண்டான் (ஆதி 35:22; 49:4). இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகிய யோசேப்பு மரியாளோடே இருந்தும் இயேசுவானவரின் பிறப்பு வரை அவளை அறியவில்லை (மத் 1:18-25). இவர்களெல்லாம் பேடிகளா? இவர்களே ஆண்மையுள்ள ஆண்கள்! உறுதியாக நிற்கத் திராணியற்றவன் பேடி. ஆண்மகன் தன் குறிக்கோளுக்காகக் காலூன்றி நிற்கிறான். சேற்றில் மலர்ந்த செந்தாமரைகளைப் போன்ற பல வாலிபர், தம்பதியரின் மாதிரி வாழ்வு, இன்றும் பரிசுத்த வாழ்வு சாத்தியம் என நிரூபிக்கிறது. இறைவன் முடியாத கட்டளைகளைக் கொடுப்பவரல்ல. கட்டளைகளோடு அவைகளைக் கைக்கொள்ள கிருபையும் அளிக்கிறார். நாம் நமக்கு உதவினால் அவர் நமக்கு உதவுவார்.

## ஓடித் தப்பித்துக்கொள்வோம்!

பாலுறவுகொள்ள எல்லா வாலிபருக்கும் சோதனை உண்டு. ஆனால் நமது சக்திக்கு மிஞ்சி சோதிப்பவரல்ல கடவுள். எந்த சோதனைக்கும் “உள்ளே,” “வெளியே” என இரு கதவுகள் உண்டு (1 கொரி 10:13). நுழையாமலிருப்பது நல்லது. தப்பித் தவறி உள்ளே நுழைந்துவிட்டால் உடனே அவசர வாயிலைக் கண்டுபிடித்து வெளியேறுங்கள்!

மணமாகுமுன் பாலுறவு கொள்வதைத் தவிர்க்க பவுலடியார் எளியதோர் ஆலோசனை கூறுகிறார். திருமணம் செய்துகொள்ளுங்கள்! உங்களுக்குத் திருமண வயதானால், மனைவி பிள்ளைகளைப் பராமரிக்கக் கூடுமானால், நபரைத் தெரிந்தெடுத்துவிட்டீர்களானால், பாவம் செய்துவிடுவோமோ எனப் பயப்படுவீர்களானால், மணம் முடியுங்கள் (1 கொரி 7:2). இது முடியாவிட்டால்தான் சிக்கல்.

ஒழுங்காக ஜெபிப்பதினாலும் வேதம் வாசிப்பதினாலும் உங்கள் மனம் இப்பாவத்தை வெறுத்து ஒதுக்கத் துவங்குகிறது. இறைவனோடு ஒத்துழைக்கப் பழகுகிறீர்கள். இறைவனது கிருபையைப் பற்றிக்கொண்டு அந்த நாளில் பாவம் செய்யாதிருக்கப் பாருங்கள். அடுத்த நாளைக் குறித்து இன்று கவலை வேண்டாம்.

வாழ்க்கையில் ஒரு நோக்கமிருக்கவேண்டும். சீரிய நோக்கொன்றைத் தெரிந்துகொண்டு உங்கள் சிந்தனைகளையும் சக்தியையும் அதில் செலவிடுங்கள். அதினால் கனவுலகில் வாழ்வதிலிருந்து மீளலாம். கற்பனையிலேயே லயித்திருப்பவர் எளிதாகப் பாவம் செய்வர். இந்நாட்களில் அருவருப்பான சினிமாக்கள், சினிமா பாடல்கள், வீடியோ கேசட்டுகள், நாவல்களுக்குப் பஞ்சமில்லை. வீட்டு வாசலுக்கே வருகின்றன. அவற்றை எட்டி உதையுங்கள். அருவருப்பைப் பேசவும் பார்க்கவும் விரும்பும் நண்பர்களை விட்டு விலகுங்கள். அவர்கள் உங்களில் உறங்கும் காம உணர்வுகளைத் தூண்டிவிடுவர். அவை அத்து மீறலாம்.

திருமணத்திற்கு முன் பாலுறவுகொள்ளும் சோதனைக்கு "முடியாது" என மறுப்புக்கூற இன்றே தீர்மானித்துவிடுங்கள். சீக்கிரம் இச்சோதனையைச் சந்திக்கத்தான் போகிறீர்கள். அந்நேரத்தில் சிந்தித்துச் செயல்பட உங்கள் உணர்வுகள் ஒத்துழையா. எனவே இப்பொழுதே விடையோடு ஆயத்தமாயிருங்கள்.

மறுபாலரோடு நெருக்க உறவுவேண்டாம். ஒருவரோடு தனித்திருக்கவே வேண்டாம். ஆணும் பெண்ணும் தீயும் தோட்டாவும் போலதான். நெருங்கினால் ஏற்படும் விபத்து உங்கள் வாழ்வையே சின்னாபின்னமாக்கிவிடும். தொட்டுப் பழகுவதைத் தவிர்ப்பது நல்லது. அது வாழைப்பழத்தைக் குரங்கு வைத்திருந்த கதைதான். எவ்வளவோ எச்சரித்தும் வாலிபர் தவறுவதின் காரணம் அவர் தம் கட்டுப்பாட்டை நம்புவதுதான். இக் காரியத்தில் மட்டும் உங்கள் கட்டுப்பாட்டை நம்பி நெருங்காதீர்கள்.

காதலன் கைவிட்டுவிடுவானோ என்ற பயத்தில் பாலுறவுகொள்ள ஒத்துப்போகக்கூடாது. அக்காரணத்திற்காக அவன் உங்களை விட்டால் நீங்கள் அதிர்ஷ்டசாலிதான். வாழ்க்கை முழுவதும் உங்கள் துணைவனாயிருக்க அவனுக்குத் தகுதியில்லை. அவன் இன்னொருத்தியோடு உடலுறவு கொள்ளவில்லை என்பது என்ன நிச்சயம்?

மணமானவரிடமும் சற்று எட்டி நின்றே பழகுங்கள். அவர்களும் சோதனைக்கு விலக்கல்ல. வாலிபர் பிறரது மனைவியரையும் கன்னியர் பிறரது கணவரையும் காதலித்ததுண்டு. மணமான ஒருவரை நீங்கள் சட்டபூர்வமாக மணக்க முடியாது. உங்கள் பெயர் கெட்டுப்போகும். உங்கள் பிள்ளைகள் வேசிப்பிள்ளைகள் எனப்படுவர். இருவரும் ஒன்றாக வெளியே போகமுடியாது. அன்னாரின் துணைவரது ஆவேசம் உங்கள்மேல் பற்றியெரியும்.



## உரம் வேண்டும்!

பாலுறவை மறுப்பதற்கு உங்களுக்கு உரிமையுண்டென்பதை நீங்கள் அறியவேண்டும். யாரும் உங்களைப் பயமுறுத்தி உடலுறவுகொள்ள இணங்காதீர்கள். யாரும் பயமுறுத்தினால் தைரியமாகப் பெற்றோரிடமோ நம்பிக்கையான ஒருவரிடமோ சொல்லுங்கள்.

பால்முகம் மாறாத கன்னியர் சிலர் தம் சொந்தக்காரர், நண்பரினாலோ ஒருமுறையோ பலமுறையோ கற்பழிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களது பரிதாப வேண்டுதல்களைப் பெற்றோர் புரிந்துகொள்ளத் தவறியிருக்கின்றனர். ஒருவரோ ஒருத்தியோ உங்களுக்குத் தொல்லையாக இருப்பாரானால் பெற்றோரிடம், அவர்கள் புரிந்துகொள்ளும் அளவில் தெளிவாகச் சொல்லுங்கள். அதில் வெட்கம் ஒன்றுமில்லை.

பெற்றோரிடம் நெருக்கமின்மையால் வாலிபர் தூரத்திலிருக்கும் ஒருவருக்கு உதவி கேட்டுக் கதறி எழுதுகின்றனர். இந்நாட்களில் வாலிபப் பிள்ளைகளை வீட்டில் தனியே விட்டுப் பெற்றோர் இருவரும் வேலைக்குச் செல்வதால் பல விபரீதங்கள் நடக்கின்றன. தனிமையாயிருந்தால் எச்சரிக்கையாயிருங்கள்; அல்லது பாதுகாவலான இடத்தில் விட்டுச் செல்லும்படிக் கூறுங்கள்.

கன்னியர் கற்பழிப்புக்குத் தங்களை பாதுகாத்துக்கொள்ளவேண்டும். தப்பியிருக்கக்கூடிய பலர் பயத்தில் விலவிலத்துப்போய் வாளாவிருந்துவிட்டனர். அண்மையில் உதவியிருந்தால் உதவிக்காகக் கத்தவேண்டும். கூக்குரலிடவேண்டும்.

கற்பழிக்கப்பட்டவர் குற்றவுணர்வு அடையத் தேவையில்லை. நீங்கள் என்ன செய்திருக்க முடியும்? உதவியற்ற நிலையில் மாட்டிக் கொண்டீர்கள் (உபா 22:25-27). வாழ்க்கையே பாழாய்ப் போயிற்று என நினைக்காதீர்கள். எழுந்து, வாழத் துவங்குங்கள்.

உங்களுக்குத் தைரியமிருக்குமானால், பெற்றோர், நண்பரது உதவி இருக்குமானால், கூடிய சீக்கிரம் துப்புகளோடு நீதிக்காக மனுச் செய்யுங்கள். கற்பழிப்போர், சிறுவரைக் கெடுப்போர் பலர் பாடங்கற்பிக்கப்படாததினால் மற்றும் பலரையும் புண்படுத்தித் தெருக்களில் மிருகங்களாகத் திரிகின்றனர்.

அப்படியே, அறியாப் பருவத்தில் யாரும் எதுவும் செய்திருந்தால் அதையே நினைத்து நினைத்து நொந்துபோகாதீர்கள். அது உங்கள் குற்றமல்ல. கடவுள் அதற்காக உங்களை தண்டிக்கப்போவதில்லை.

பிள்ளைகளை விபசாரம் செய்யத் தூண்டும் பொல்லாத தாய்மாருமுண்டு (லேவி 19:29). இப்படிப்பட்ட பிள்ளைகள் தங்களுக்கு அக்கறை காட்டும் ஒருவரிடம் உள்ளம் திறக்கவேண்டும்.

**பஞ்சைப்போல் வெண்மை**

இறுதியாக, அருமைப் பிள்ளைகளே, நீங்கள் ஏற்கனவே பாவம் செய்து விட்டிருந்தாலும் இப்பொழுது இப்பாவத்தில் வாழ்ந்துகொண்டிருந்தாலும் உங்கள் வாழ்க்கை ஓட்டத்தைத் திருப்பப் பிந்திப்போய்விடவில்லை என்று ஆணித்தரமாய் அடித்துக் கூறலாம். தலைக்குமேல் ஜாண் போனாலென்ன முழம் போனாலென்ன என்று நினைத்துவிடாதீர்கள். நம்பிக்கையுண்டு, நிறையவுண்டு. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் ''சகல'' பாவங்களையும் நீக்கி உங்களைச் சுத்திகரிக்கும். நீங்கள் மனம் வருந்தி மன்னிப்புக் கோரி னால் உடனே நிச்சயமாக மன்னிப்பார். ''உங்கள் பாவங்கள் சிவேரென்றி ருந்தாலும் உறைந்த மழையைப் போல வெண்மையாகும்; அவைகள் இரத் தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் போலாகும்'' என்கிறார் கடவுள் (ஏசா 1:18). இனித் திருமணம் வரை உடலுறவு கொள்வதில்லை எனத் தீர்மானித்து இறைவனை நம்பியிருங்கள். உங்களால் முடியாதுதான்; ஆனால் இறை ஒத்தாசையோடு எதையும் செய்யலாம். உங்கள் தீர்மானத்தை நீங்கள் பாவம் செய்பவருடன் கலந்தாலோசிக்காதீர்கள். நிச்சயம் நீங்கள் செய்வது தவறேயில்லையென்று உங்களை நம்பச் செய்வர். அன்னாரைச் சந்தியாதிருங்கள்.

உலகில் நீங்கள் அனுபவிக்கக்கூடியவைகள் பலவுண்டு. கவனத்தை அப்பக்கமாகத் திருப்புங்கள். விளையாட்டு அரங்கங்களில் நேரம் செல வழிக்கலாம். நல்ல ஆகாரம் புசியுங்கள். விறுவிறுப்பான நல்ல கதைகள் வாசிக்கலாம். நல்ல நண்பருடன் உல்லாசமாக பிக்னிக் போய் வாருங்கள். விலக்கப்பட்டது என்றுமே விலக்கப்பட்டதல்ல. பொறுத்திருந்து அனு பவியுங்கள்.



# 9. கேலி, கிண்டல், கலாட்டா!

திருமதி ரெபேக்கா தாமஸ்

கிறிஸ்தவ ஓட்டத்தில் வாலிபர் அநேகத் தடைகளைத் தாண்டி ஓட வேண்டியிருக்கிறது. அனேகரைத் தடுக்கி விழச்செய்து மற்றவரது வேகத்தைக் குறைப்பதில் பரியாசம் என்னும் தடையே மிகப் பெரிது எனலாம். பழைய நண்பரால் எள்ளி நகையாடப்படும் வெட்கத்தைக் காட்டிலும் இளைஞரை இவ்வுலகில் சிதைக்கும் சக்தி வேறெதுவுமில்லை. இதை எப்படிச் சமாளிப்பது ?

உலகத்தின் போக்கில் நீங்கள் போகாதபடியால் உலகம் உங்களைப் பகைக்கும்தான். இயேசு கிறிஸ்து உட்பட வேதநாயகர் யாரும் கேலி என்னும் கொடிய பட்டயத்திற்குத் தப்ப முடியவில்லையே. அவர்களது சரித்திரங்களை வாசிப்பீர்களானால் பரியாசப் புதரைத் தாண்டிச் செல்ல படிப்பினைகளைக் கற்றறியலாம்.

கிறிஸ்தவனுக்கு தேவன் மீதுள்ள விருப்பும், தீமை மீதுள்ள வெறுப்பும் இணைபிரியா நண்பராம். கண்டதையும் பேசுவது, கீழ்த்தரமான ஹாஸ்யங்கள், ஆபாசமான பாடல்கள் போன்றவற்றால் பழைய நண்பருடன் சகவாசம் கொள்ளமுடியாமல் போகிறது. அவர்கள் உங்களைத் தம் வசமாய் இழுக்கப் பார்க்கிறார்கள். அதில் தோல்வியுற்றால் ''கிண்டல்'' என்னும் தோட்டாவைப் போட்டு உங்கள் முகத்திலேயே சுடுகிறார்கள். நண்பரை இழப்பதும் அவர்களால் ஒதுக்கப்படுவதுமே அவமானமும் வேதனையுமான அனுபவம். அதுவும் போதாதென்று கலாட்டா!

பதினேழு வயது யோசேப்பு தன் சகோதரரோடு கால்நடைகளை மேய்த்துக்'கொண்டிருந்தபோது அவர்களது தீய காரியங்களைத் தன் தகப்பனுக்கு அறிவித்தான். அவர்களது சகவாசத்தை அவன் விரும்ப வில்லைதான். ஆனால் அவர்களது விரோதத்தையும் பெரிதுபடுத்தாமல்

அவர்களைத் தேடிச் சென்றான். அவனது சகோதரர் அவனைக் கண்டபோது ஒருவரை ஒருவர் நோக்கி, ''இதோ, சொப்பனக்காரன் வருகிறான்'' என்றனர். அவனது பெயரைச் சொல்லி அழைக்க விரும்பாமல் ஒரு பட்டப்பெயரைக் கொண்டே அவனை அழைத்தனர். இதுதானே உங்கள் கதியும்? உங்கள் சக மாணவரும், அயலகத்தாரும் உங்களைச் சாமியார், சந்நியாசி, சாது என்றெல்லாம் பட்டப் பெயரிட்டு அழைக்கிறார்கள்!

நீங்கள் கோபக்காரரானால் உங்கள் மீசை துடிக்கிறது. கண் சிவக்கிறது. சாதுவான சுபாவமுடையவர்களானால் அவர்களைத் தவிர்க்கத் துவங்கு கிறீர்கள். ஆனால் இப்படிப்பட்ட பிரதிபலிப்புகளினால் பயனேதுமில்லை. யோசேப்பு கோபப்படவுமில்லை, தன் சகோதரரைத் தவிர்க்கவுமில்லை. ஒன்றுமே நடவாதது போல நடந்துகொண்டான். அவனைச் ''சொப்பனக் காரன்'' என்றனர். தான் சொப்பனக்காரனென்றும் தன் சொப்பனங்கள் ஒருநாள் நிறைவேறும் என்று யோசேப்பு அறிந்திருந்தான். கர்த்தரை நம்பி பொறுமையாகக் காத்திருப்பதையன்றி வேறு வகையறியாதிருந்தான். அப்படியே இயேசுவும் மக்களது பரியாசங்களை அமைதியாக ஏற்றுக் கொண்டார் (மத் 27:29). அவருக்கு முன்பாக முழங்கால்களை முடக்கி, ''இராஜாவே வாழ்க!'' என வாழ்த்தினர். அவர்களது பரியாசம் நூற்றுக்கு நூறு உண்மை; ஏனெனில் இயேசுவின் நாமத்தில் முழங்கால் யாவும் முடங்குமே! (பிலி 2:10). அவர் இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தரல்லவோ! (வெளி 19:16). அவர்களது ஏளனம் வருகைக்கடுத்த தீர்க்கதரிசனமே என்றறிந்த இயேசு அதை எவ்விதத்திலும் எதிர்க்கவில்லை.

உங்களுக்கு முன்னோடிகள் இருக்கும்போது கேலி கிண்டலைக் குறித்து ஏன் கவலைப்படுகிறீர்கள்? வேதத்தின்படி நீங்கள் உலகத்தை வெறுத்தவர் கள்தான், பரிசுத்தவான்கள்தான், சாதுதான், கிறிஸ்துவிற்காகப் பயித்தியம் தான், அதில் சந்தேகமென்ன? ஏன் நீங்கள் குழம்பித் தவிக்கவேண்டும்? ஓர் அன்பின் புன்னகையை வீசி அவர்களுக்கு அதிர்ச்சியூட்டுங்கள்.

உபத்திரவங்களைக் கிறிஸ்தவ வாழ்வை விட்டுப் பிரிக்கமுடியாது (அப் 14:22). யோபுவின் வாழ்க்கையில் நடந்ததுபோல், ''நீ தேவ தண்டனைக்கு ஆளானாய்'' என்று நண்பர் உங்கள் துன்பங்களுக்கு விளக்கம் கொடுத்து ஏளனம் செய்யலாம் (யோபு 12:4). நீங்கள் கிறிஸ்தவரல்லாதவராயிருந்து மனமாறியிருப்பீர்களானால், ''நீ விட்டு வந்த பழைய தெய்வங்களின் கோபாக்கினையினாலே உனக்கு இத்துன்பங்கள்'' என பயமுறுத்தலாம். ஆனால் பிரியமானவரே, தேவனுடைய வார்த்தையே உங்களுக்குப் பலமளிக்கும், ஊக்கமளிக்கும் ஊற்றாயிருக்கட்டும். நீ தனி மரமல்ல,



கிறிஸ்துவை விசுவாசிக்கும் ஒவ்வொரு விசுவாசிக்கும் இப்போராட்டம் உண்டென்பதை அது அறிவிக்கும் (எபி 11:36). பவுலின் சரிதையை வாசித்து உற்சாகமடையுங்கள் (ரோ 8:35-39).

பல்கலைக்கழகத்தைச் சேருமுன் தன் தாயை இழந்த மாணவியொருத்தி விடுதியில் ஆறுதலின்றி அங்கலாய்த்துக் கொண்டிருந்தாள். முதலாண்டு மரண திவசத்தன்று யாராலும் ஆறுதல் படுத்தமுடியாமல் ஏங்கி ஏங்கிக் கதறினாள். சில நாட்களுக்குப் பின்பு நமது மாணவ ஜெபக்கூடுகைகள் மூலமாக ஆண்டவரை ஏற்றுக்கொண்டு மிகவும் உற்சாகமுள்ளவளானாள். அவளது சிநேகிதிகளின் கேலி வார்த்தைகள் அவளை அம்பாய்த் தைத்தன. அவள் எப்போதும் துள்ளிக் குதித்து ஆனந்தமாயிருந்ததினால் அவள் ஒரு கிறிஸ்தவ வாலிபனைக் காதலிக்கிறாளாக்கும் எனவும் பகடி பண்ணினர். அவளது விளக்கவுரைகள் சிநேகிதிகளின் காதுகளில் ஏறவேயில்லை. இறுதியில் ஜெபத்துடன் பொறுமையாயிருக்கத் தீர்மானித்து விட்டாள். தாயாரது இரண்டாவது திவசநாள் வந்தது. எல்லாருடைய எதிர்பார்ப்பிற்குக் மாறாக அவள் வானம்பாடிபோல் காட்சியளித்தாள். அவளுடைய சிநேகிதிகள் அவளது மகிழ்ச்சியின் இரகசியத்தை வினவியபோது அவள், ''என் இயேசு என் தாயைக் காட்டிலும் அதிகமாக என்னை நேசிக்கிறார்'' என்றாள். இது அவர்களை உலுக்கும் ஓர் சாட்சியாயிருந்தபடியால் வரவர அமைதியாயினர். ஒருவரது வாழ்க்கையில் இயேசு செய்யக்கூடிய மாறுதலைக் கண்டு வாயடைத்துப் போயினர்.

தாதியர் பயிற்சி விடுதியிலிருந்த மற்றொரு மாணவி பூஜை அறையை விசேஷ தினங்களில் கலைத்திறனோடு ஜோடிப்பாள். இரண்டாண்டு கட்குமுன் அவள் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தபோது அவற்றை நிறுத்திவிட்டாள். இதனால் சீற்றமுற்ற சிநேகிதியருக்கு அவள் அமைதியாக ''ஜீவனுள்ள தேவனை சேவிக்கும் நான், முன் செய்து வந்த காரியங்களை இனியும் செய்யக்கூடாது'' எனத் திட்டவட்டமாகக் கூறிவிட்டாள். ''உலக மதத்தலைவர்களெல்லாம் எம்மதமும் சம்மதம் என ஒத்துக்கொள்ளும்போது நீ என்ன உச்சாணிக் கொம்போ?'' என விவாதித்தனர். அவளோ சாந்தமாக வேதத்திலிருந்து யாத்திராகமம் 20:3-5ஐ எடுத்துக் கூறி மறுத்துவிட்டாள். இதனால் அவர்கள் கோபத்தை அவளுக்கு இயேசுவை அறிமுகப்படுத்தின சிநேகிதியின் மேல் திருப்பினர். வாய்ப்புக் கிட்டும்போதெல்லாம் இருவ ரையும் கிண்டலடித்தனர். ''நமது கல்லூரிகளில் சில பக்திமான்கள் இருக் கிறார்களே! அப்பப்பா, அவர்களெல்லாம் நம்மைப்போல அற்பமான காரியங்களிலெல்லாம் ஈடுபடமாட்டார்கள்!'' என்பாள் ஒருத்தி. மற்றவர்கள் கொல்லெனச் சிரிப்பர். மாதங்கள் உருண்டோடின. இவ்விரு மாணவியரும்

தம் பக்தியை விடுவதாயில்லை. இறுதித்தேர்வு முடிவுகள் கல்லூரியை அதிரடியில் ஆழ்த்தின. இவ்விரு மாணவியரும் கல்லூரியின் முதல் மாணவியராக டிஸ்டிங்ஷனோடு தேறியிருந்தனர். பகடி செய்த வாயெல்லாம் மூடிப்போயிற்று (தானி 3:30).

அரசியலில், ஆளும் கட்சியை எதிர்க்கட்சி குற்றம்சாட்டிக்கொண்டே இருப்பது ஆளும் கட்சிக்கு கட்டுப்பாடு போன்றது. அப்படியே எதிராளிகளின் கேலி உங்கள் வாழ்வுக்கு வேலி. நீங்கள் பிரசங்கிப்பதை நீங்களே கடைபிடிக்க இது ஓர் இன்றியமையாத் தேவை. இயேசு தம்மைக் குறித்து, "அவரைப் பரியாசம் பண்ணவும், வாரினால் அடிக்கவும், சிலுவையில் அறையவும்... ஒப்புக்கொடுப்பார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார்" என்றார். கிறிஸ்தவன், கிறிஸ்தவரல்லாதவர் மூலமாக இருவிதக் கொடுமைகளைச் சந்திக்கிறான். ஒன்று மனச் சித்ரவதை; அதுதான் கேலி. உடல் சித்ரவதை பலவித வேதனைகளை அனுபவிப்பது. ஆனால் முடிவை நோக்கிப் பாருங்கள்—"மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார்!" (மத் 20:19). எத்தனை உவகையூட்டும் செய்தி இது. நம்பிக்கையூட்டும் மூன்றாம் நாள் நமக்கும் மலரத் தவறுவதில்லை! இறுதியில் கேலிக்கும் மேலாக எழும்பி பிசாசை வெட்கத்தில் ஆழ்த்துவோம்.

கேலி நமது வாழ்வை ஆக்கும் அல்லது அழிக்கும்; உடைக்கும் அல்லது உருவாக்கும். நாம் அதை எப்படிக் கையாளுகிறோமோ அதைப் பொறுத்தே விளைவு!

*(இவ்வத்தியாயத்தை எழுதிய திருமதி ரெபெக்கா தாமஸ் ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் ஒரு மிஷனரி. அவர்களது கணவர் திரு. ஜான் தாமஸ் இவ்வியக்கத்தின் ஒரிசா மாநில ஒருங்கிணைப்பாளர். இந்துக் குடும்பத்திலிருந்து வரும் இச்சகோதரி கிறிஸ்தவரல்லாதோரை, குறிப்பாக கல்லூரி மாணவியரை, உள்ளந்தொடும் செய்தியோடு சந்தித்து வருகிறார்கள். இவர்களது மகன் சுவர்னு, அவனும் ஓர் ஆத்தும ஆதாயகன்).*



# 10. மகத்தான சிறு மந்தை

**A. லயணல்**

தேவனுக்காய் பெரிய காரியங்களைச் சாதிக்க நம் எல்லாருக்குமே கொள்ளை ஆசைதான். ஆனால் மிளிரும் வரங்களை நம்மில் காணாவிடில் சோர்ந்துபோகிறோம். நம்மைச் சப்பாணிகளாக்க இதுவும் சாத்தானின் தந்திரமே. "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு இராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" என்ற இயேசுவின் வாக்கை மட்டும் விசுவாசிப்பீர்களானால்! (லூக் 12:32). பெரிய காரியங்களைச் சாதிக்க தேவன் சிறு குழுக்களைப் பயன்படுத்தியுள்ளார் எனச் சரித்திரம் அறிவிக்கிறது. சிறு குழு பார்வைக்குப் பலவீனமாகக் காணப்பட்டாலும் அது தேவ ஒத்தாசையினால் சாகசங்களைச் செய்யக்கூடும்.

சிறு குழு என்பதென்ன ? "இரண்டு அல்லது மூன்று பேர்" இயேசுவின் நாமத்தில் ஒன்று கூடுவது! (மத் 18:19). ஐந்து கூட அல்ல; இரண்டே அல்லது மூன்றே பேர்தான்!

நாம் பெருங்கூட்டங்களைக் காணவே ஏங்குகிறோம். ஜெபத்திற்கு ஒருவரோ இருவரோ தலைகாட்டினால் ஏமாற்றமடைகிறோம். வாராவாரம் புதியவர்கள் சேர்ந்து நமது ஜெபக்குழு விரிவடைய வாஞ்சிக்கிறோம். அது நல்லதுதான். ஆனால் அது நடக்காத பட்சத்தில் நாம் சோர்புற்றால் "இருவர், மூவர்" சாதனையின் தரிசனத்திற்குக் குருடாகிறோம். வேதம் குறிப்பிடும் இவ்வித நான்கு சிறு குழுக்களுக்கு நமது சிந்தனையைத் திருப்புவோம்.

## 1. தானியேலும் அவனது நண்பர்களும்

இச்சிறிய ஆனால் வலுவான குழு பாபிலோன் நகரில் இயங்கியது. அவர்கள் பட்டணத்தையே அசைத்தபடியால் ஜனத்தொகை மிகுந்த அப்பட்டணத்திலும் அவர்கள் மறைந்து இயங்க முடியவில்லை. நால்வ

ரேயானாலும் ஆழ்ந்த அர்ப்பணிப்புள்ளவர்கள். புறவினத்தாரின் நிலைக்கு இறங்காமல் தங்கள் பரிசுத்தத்தைக் காத்துக்கொண்டார்கள். தீட்டுப் படுத்தக்கூடிய எதையும் தொடவும் மறுத்தனர். எருசலேமிலிருந்து கைதி களாக வந்த இவர்கள் ராஜபோஜன பதார்த்தங்களை ஒதுக்கித் தள்ளினர் (1:8). அவர்களோடு வந்த மற்றெல்லா வாலிபரும் வறுவல்களையும் பொறியல்களையும் வாரித் தின்னுகையில் இந்த நால்வரும் நழுவி சாம்பாரும் காய்கறிகளும் போதுமென்றனர். மன்னன் நேபுகாத்நேச்சார் பிரமாண்டமான பொற்சிலை ஒன்றை வடித்து, யாவரும் அதை வணங்கக் கட்டளையிட்ட போதும் இந்நன்நெறி நால்வர் மறுத்துவிட்டனர். அவர்களது அஞ்சாநெஞ்சப் பதில்: "நேபுகாத்நேச்சாரே, இந்தக் காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை. நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்... விடுவிக்காமற் போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது" என்பது (3:16-18).

சிறு மந்தைதான். ஆனால் தேவனுக்காக வைராக்கியம் கொண்டவர்கள், ஜெப வீரர். ராஜா ஒரு சொப்பனம் கண்டு கலங்கி, சொப்பனத்தை விளக்கக் கூடாத ஞானிகள் யாவரும் துண்டிக்கப்படவேண்டுமென்று கட்டளை பிறப்பித்தபோது இக்குழுவினர் குழம்பினரா? தானியேல் இச்செய்தியைத் தன் நண்பருக்கு அறிவித்தபோது அவர்கள் தேவனை நோக்கிக் கூப்பிட்டனர்.

ஜெபமென்பது என்ன? அது தேவனைக் கேட்பதாகும். சொப்பனத் தையோ அதன் விளக்கத்தையோ மனித ஞானம் வெளிப்படுத்த முடியாது. இந்நால்வரோ கரங்கோர்த்து தேவனை நோக்கிக் கதறினர். பதில் கிடைத்த போது அரசன் தானியேலை நோக்கி, "உங்கள் தேவனே தேவர்களுக்குத் தேவனும், இராஜாக்களுக்கு ஆண்டவரும், மறைபொருளை வெளிப் படுத்துகிறவருமாயிருக்கிறார்" என்றான் (2:47).

புறவினத்து மன்னன் ஒருவன் அப்படிச் சொல்லக்கூடுமானால் அச்சிறு மந்தை அத்தேசத்தை எந்த அளவிற்குப் பாதித்தது என்று நீங்களே கற்பனை செய்து பாருங்கள். மன்னன் அறிவித்ததாவது, "சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு விரோதமாகத் தூஷண வார்த் தையைச் சொல்லுகிற எந்த ஜனத்தானும், எந்த ஜாதியானும், எந்தப் பாஷைக்காரனும் துண்டித்துப் போடப்படுவான்... இவ்விதமாக இரட்சிக் கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லை" (3:29). ஆம், சிறு குழுவானது தன் பெரும் வல்லமையினாலே மகத்தான காரியத்தைச் சாதித்தது.



## 2. எஸ்தரும் அவளது தாதியரும்

இங்கும் சிறைபிடிப்பின் சூழலே. அடிமைப் பெண் புறவின இராஜ்யத்து இராணியாகிறாள். ஆனாலும், தன் விசுவாசத்தை விட்டுவிடவில்லை. தேவ மக்கள் இருக்கும் இடத்தில் சத்துரு இல்லாமலிருப்பதில்லை. தேவ மக்களை அழித்துப்போட சத்துரு இல்லாமலிருப்பதில்லை. தேவமக்களை அழித்துப்போட சத்துரு சதித்திட்டம் தீட்டி தேதி குறிக்கிறான். நிலைமை நம்பிக்கையற்றதாகிவிடுகிறது. கொலை செய்யப் பத்திரங்கள் அனுப்பப் பட்டாயிற்று. இனி அதைத் திரும்ப வாங்க முடியுமா, மாற்ற முடியுமா, அழிக்க முடியுமா? முடியும். பின்னிப் பிணைந்த ஒரு சிறு கூட்டம் மக்களால் முடியும்.

ராணியாயிருந்தும் எஸ்தர் தன் தாதிமாரோடு முழங்காலிட வெட்க வில்லை. ராஜாத்தியும் தாதியரும் உபவாசித்து ஜெபித்த மூன்று நாட்களும் ராஜரீக விருந்துமேசைப் பதார்த்தங்கள் உண்ண ஆளின்றி காய்ந்து கிடந்தன. இச்சிறு குழு ஜெபித்ததின் விளைவென்ன? சங்கிலித் தொட ராக நடந்த காரியங்கள் அரச கட்டளையை மாற்றிப்போட்டன. முதலாவது அரசனது தூக்கங்கெட்டது. அதனால் அவன் தனது சரித்திரத்தை நள்ளி ரவில் வாசிக்கலானான். சிறு மந்தையின் ஜெபம் அவனை மொர்தெகாயைக் குறித்து எழுதப்பட்டப் பக்கத்திற்குத் துரத்திச் சென்றது. மொர்தெகாய் கனம் பண்ணப்பட்டான். பின்பு ஆமான் தூக்கிலிடப்பட்டான். யூதர்களை கொலை செய்ய ராஜா அனுப்பின நிருபம் ரத்து செய்யப்பட்டது. அதோடு நின்றதா? எதிரிகளைச் சூறையாட யூதருக்கு அவகாசமளிக்கப்பட்டது. "யூதருக்குப் பயப்படுகிற பயம் தேசத்து ஜனங்களைப் பிடித்ததினால், அவர்களில் அநேகர் யூத மார்க்கத்தில் அமைந்தார்கள்" (8:17). சரித்திரத்தின் ஓட்டத்தைத் தடுத்து நிறுத்தி திசை திருப்பிவிடக்கூடிய சிறு குழுவின் பெரும் வல்லமை இதுவே.

## 3. மரியாளும் உடன் விசுவாசிகளும்

இங்கு ஒரு வீட்டிற்குள் ஒடுங்கி ஜெபித்துக்கொண்டிருந்த ஒரு சிறு குழுவைக் காண்கிறோம் (அப் 12:12). ஏரோது யாக்கோபைப் பட்டயத்தால் கொன்று போட்டான். அது யூதரைப் பிரியப்படுத்தியதைக் கண்டு, பேதுரு வையும் பிடித்துச் சிறையிலடைத்தான். "சபையார் அவனுக்காகத் தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்கள்" (வச 5). சபை தூங்க வில்லை; வன்முறைப் போராட்டத்தில் முனையவில்லை; நீண்ட மனு எழுதி ஏரோதிடம் சமர்ப்பிக்கவில்லை. ஒரு வீட்டில் கூடி ஜெபித்தனர்; ஜெபிக்க மட்டுமே செய்தனர்.

அவர்கள் ஜெபித்தபோது நடந்தது என்ன ? ராஜாவின் அதிகாரத்தை எதிர்த்து சாதாரண சபையார் செய்யக்கூடாததைச் செய்யும்படியாக பரலோகத்தில் ஒரு தூதன் பணித்து அனுப்பப்பட்டான். தேவதூதன் பேதுருவை அழைத்துக்கொண்டு முதலாங்காவலைக் கடந்து சென்றான்; பின்பு இரண்டாங்காவலையும் கடந்து சென்றான். இருப்புக் கதவண்டை வந்தபோது அது இன்றையத் தானியங்கிக் கதவுகளைப் போல தானாகத் திறந்தது. சிறைச்சாலைக்கு வெளியே தெருவில் நிற்கிறான் பேதுரு! நம்ப முடிகிறதா ? எல்லாமே ஒரு சிறு வீட்டு ஜெபக் குழுவினால்தான்.

இருவராய் மூவராய் வீடுகளில் கூடி ஜெபிக்கச் சபையினரை ஊக்குவிக்கத் தவறிவிட்டது இன்றைய சபை. ஞாயிறு ஆராதனைகளுக்கு ஆலயங்கள் நிரம்பி வழிகின்றனர். அவர்கள் விண்ணப்பக் கலையைக் கற்றுள்ளனரா ? நமது சபைகள் கண்ணீர் கலையை இன்னும் கற்கவில்லை; ஆகவே கற்பிக்கவுமில்லை. ஆதிச்சபையினர் எங்கெங்கே முடியுமோ அங்கெல்லாம் கூடி ஜெபித்தனர். மாபெரும் அற்புதங்களைக் காண வேண்டுமா ? நமது சபைகள் சிறு குழுக்களை உருவாக்கும் சவாலைச் சந்திக்கட்டும். இவ்விதச் சிறு குழுக்களே பெரும் எழுப்புதல்கள் வெடித்துக் கிளம்பக் காரணமாக இருந்திருக்கின்றன.

## 4. லீதியாளும் அவளது சகாக்களும்

பிலிப்பி பட்டணத்தில் சில பெண்கள் ஆற்றங்கரையில் வழக்கமாகக் கூடி ஜெபித்து வந்தனர். பவுலுக்கும் அவனது நண்பருக்கும் அவ்விடம் தெரிந்திருந்தபடியால் அங்கு சென்று உபதேசித்தனர். அதைக் கேட்ட லீதியாள் என்ற பெண் உணர்வடைந்து தன் வீட்டாரோடு திருமுழுக்குப் பெற்றாள் (அப் 16:13-15). அவள் பவுலையும் அவனது நண்பரையும் தன் வீட்டிற்கு அழைத்துச்சென்று உபசரித்தாள். அவளது வீடு ஒரு சபையாயிற்று; ஏனெனில் அந்நாட்களில் சபையினருக்கு ஆலயக் கட்டிடங்களில்லை (ரோ 16:5).

மக்கள் உன்னத ஆன்மீக அனுபவங்களைப் பெற சிறு குழுக்கள் இடமாகலாம். யார் எப்பொழுது எப்படித் தொடப்படுவார்களென சொல்ல இயலாது. லீதியாளே முதலில் மனந்திரும்பிய ஐரோப்பியப் பெண்மணி. அவள் மூலமாகவே நற்செய்தி கண்டம் தாண்டிச் சென்றது. எதற்காக ஜெபித்துக்கொண்டிருந்தனரோ யாருக்குத் தெரியும். அவர்கள் தேவனை வாஞ்சித்துத் தேடினபடியால் அந்த ஜுவாலையைக் கொழுந்துவிட்டெறியச் செய்ய தவறாமல் கூடி ஜெபித்து வந்தனர். தேவன் அவர்களது விசுவாசத்தைக் கனம்பண்ணி அவர்களை ஆசீர்வதித்ததோடல்லாமல்



அவர்கள் மூலமாகப் பிறரையும் ஆசீர்வதித்தார். ஒரு சிறு குழுவின் வெடிசக்தியை விளக்க, நற்செய்தியானது தேசங்களைத் தாவிச் செல்லக் காரணமாயிருந்த இச்சிறு மந்தையிலும் மேலான எடுத்துக்காட்டு இல்லை.

## சிறு குழுக்களின் மேன்மை

பெருங்கூடுகைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் சிறு குழுக்களே பலவிதத்தில் மேலானவை. முதலாவதாக, ஒருவர் பிறரோடு ஆழ்ந்த ஐக்கியக்கொள்ளலாம். இரண்டாவதாக, சிறு குழுக்களில் ஒருமனப்பாடு இலகுவாகிறது. மூன்றாவதாக, தனிநபர் கவனிக்கப்பட்டு பயிற்சிபெற வாய்ப்புண்டாகிறது. தனி நபரது குறைகளும் வரங்களும் பெருங்கூடுகைகளில் கவனிக்கப்படாமல் விடப்படுகின்றன. ஒருவரது கேள்விகளுக்கும் விடை கிடையா.

## துவங்குவது எப்படி ?

நீங்கள் எங்கிருந்தாலும், உங்களோடு சேர்ந்து குறுகிய வேளை வேதத்தைத் தியானித்து ஜெபிக்கக்கூடிய அருகாமையிலுள்ள ஓரிரு கிறிஸ்தவரோடு தொடர்புகொள்ளுங்கள். நீங்கள் மாணவராயிருந்தால் விடுதி அறையொன்றில் கூடலாம். ஓர் அலுவலகத்தில் பணிபுரிந்தால் மதிய இடைவெளியைப் பயன்படுத்தலாம். எங்கள் அலுவலகத்தில் அதைத்தான் செய்கிறோம்.

சிறு குழுவானது சபைக்குப் பதிலானதல்ல என்பதை மறந்துவிட வேண்டாம். ஒரு சிறு குழுவின் நோக்கம் தான் வளர்ந்து சபையாகிப் பிற சபையினரை ஈர்க்க வேண்டுமென்பதாயிருக்கக்கூடாது. எண்ணிக்கை கூடினால் இரண்டாகப் பிரிந்து இரண்டு இடத்தில் கூடவேண்டும். ஆனால் சிறு குழுக்களில் பல சபை அங்கத்தினர் பங்குபெறலாம்.

ஒரு பாடல் பாடி ஆராதித்து ஒரு வேதப் பகுதியைச் சுருக்கமாக 10-15 நிமிடம் தியானியுங்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவர் பகிரலாம். ஜெபத்திற்கு அதிக நேரம் ஒதுக்குங்கள். ஒருநாள் நாட்டிற்காகவும், ஒரு நாள் மிஷனரிப் பணிக்காகவும் அல்லது மாணவ ஊழியம், ஆவிக்குரிய தலைவர்கள், எழுப்புதல், உலகம் நற்செய்திமயமாதல், இப்படி ஒவ்வொன்றிற்காக ஜெபிக்கலாம். தனிப்பட்டவரது ஜெபக்குறிப்புகளையும் சேர்த்துக் கொள்ளலாம்.

நாம் தியானித்த இந்த நான்கு சிறு குழுக்களின் விளைவும் நற்செய்தி அறிவித்தலிலேயே முடிகிறது என்பதைக் கவனிக்க. வாரமொரு

முறையாவது நீங்கள் குழுவாக நற்செய்தி அறிவிக்கப் புறப்பட்டுச் செல்லவேண்டும். யாரும் வெற்றிலைபாக்கு வைத்து அழைக்கக் காத்திராமல் வீடு வீடாகச் சென்று பேசுங்கள். ஊழியஞ் செய்வதினால் ஏதோ நாம் தேவனுக்கு தயவு பாராட்டுவதாக எண்ணிவிட வேண்டாம். மாறாக, அவருக்கு நாம் ஊழியஞ் செய்ய அவர் நம்மை அனுமதிப்பதினால் அவரே நமக்குத் தயவு பாராட்டுகிறார்.

## சிறு மந்தையும் பெரும் வெற்றியும்

இஸ்ரவேலர் சீரியரோடு போர் கலக்கச் சென்றனர். அக்காட்சியை வேதம் பின்வருமாறு வர்ணிக்கிறது: "இஸ்ரவேல் புத்திரர் இரண்டு சிறிய வெள்ளாட்டுக் கிடைகளைப் போலப் பாளயமிறங்கினார்கள். தேசம் சீரிய ரால் நிறைந்திருந்தது" (1 இரா 20:27). இருந்தும் இஸ்ரவேலர் சீரியரை மேற்கொண்டனர். அந்தகாரத்தின் சக்திகளால் அடைக்கப்பட்ட ஆயிரக் கணக்கானோரை உங்களைச் சுற்றிக் காணும்போது உங்கள் பார்வைக்கு நீங்கள் தூசியாகக் காணப்படலாம். ஆனால் இராஜ்யத்தை சிறு மந்தைக்குக் கொடுக்கவே பிதா பிரியமாயிருக்கிறார் என்பதை மறந்துவிடாதீர்கள். சிறு மந்தையே பயப்படாதே! புறப்பட்டுச் செல். தேவன் உன் மூலமாகப் பெரிய காரியங்களைச் செய்வார்!

*(இவ்வத்தியாயத்தை எழுதிய திரு. A. லயனல், B.E. அவர்கள் தமிழக அரசில் மின் பொறியியலராய் பணிபுரிகிறார். 1968இலிருந்து சகோதரன் ஸ்டான்லியின் பிரசங்க ஊழியத்தில் முதல் துணை ஊழியராக இருந்து வருகிறார். தற்போது ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் கௌரவத் தலைவராய் இருக்கிறார். அவரது மனைவி திருமதி கஸ்தூரி ஒரு மருத்துவர். இருவரும் தங்கள் பிள்ளைகள் ஷர்லி, எட்வினுடன் சென்னையில் வசிக்கின்றனர்).*



## ஆசிரியரது பிற நூல்கள்—

- ❒ *அவள் தீர்மானங்கள்*
- ❒ *இயேசுவின் பின்னே ...*
- ❒ *கண்ணீர் துடைப்போர் யார்?*
- ❒ *உலகில் உத்தமி*
- ❒ *குடும்பமே குடும்பம்!*
- ❒ *குதூகலக் கிறிஸ்தவம்*
- ❒ *சாத்தானுக்கு டாடா*
- ❒ *தெபொராளே, விழித்தெழு!*
- ❒ *தேவனே, நான் உமதண்டையில்...*
- ❒ *பசங்க பொண்ணுங்க ...*
- ❒ *பகலில் வந்த கனா!*
- ❒ *பயனுள்ள பாத்திரம்*
- ❒ *பறக்கும் பாவையர்*
- ❒ *12 பொன் மாதங்கள்*
- ❒ *மண்ணிலே வெண்ணிலா*
- ❒ *முன்னேறும் கிறிஸ்தவன்*
- ❒ *வயது பதினாறிருக்கும்*

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.

இப்புத்தகங்கள் ஆங்கிலத்திலும் பல இந்திய மொழிகளிலும் உண்டு.

**Blessing Literature Centre**
**21/11 West Coovam Road**
**Chintadripet**
**Chennai 600 002, India**
***Tel: 044-28450411***
**<bymliterature@vsnl.net>**

***கிறிஸ்தவ வாழ்வில் மறுமலர்ச்சி பெற***
***இன்றே வாசியுங்கள்...***

ஆசீர்வாதம்

எழுப்புதலுக்கும் நற்செய்திப் பணிக்கும்
அர்ப்பணிக்கப்பட்ட பத்திரிகை!

உங்களை ஆசீர்வதித்து,
உங்களை உங்கள் குடும்பத்திற்கும், சபைக்கும்,
நண்பருக்கும் ஆசீர்வாதமாக்கும் பத்திரிகை!

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி,
தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம்
ஆகிய மொழிகளில் வெளிவருகிறது.

கீழ்க்கண்ட முகவரிக்கு ரூ. 1000/– செலுத்தி *ஆசீர்வாதம்* பத்திரிகைக்கு ஆயுள் சந்தாதாரரானால், பணம் பெற்றுக்கொண்ட நாள் முதல் நாங்கள் வெளியிடும் பத்திரிகையையும், புத்தகங்கள் யாவற்றையும் பதினைந்து ஆண்டுகட்கு அனுப்பிவைப்போம்.

ஆண்டு சந்தா ரூ. 100/–

*சந்தா அனுப்பவேண்டிய முகவரி:*

Blessing Youth Mission
Church Colony
Vellore 632 006



# ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

***எழுப்புதலுக்கும் நற்செய்தி அறிவிப்பிற்கும் அர்ப்பணிக்கப்பட்டு***
***1971 முதல் இயங்கிவரும், சபைப்பிரிவு பாகுபாடில்லாத,***
***ஒரு திருப்பணி***

❒

எழுப்புதல் முகாம்கள், திருமறைப் பாடங்கள்,
பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்.

❒

பள்ளிகள், கல்லூரிகளில் மாணவ மாணவியருக்கு
ஜெபக்குழுக்கள் உருவாக்குதல்.

❒

முழுநேர ஊழியரல்லாத சகோதர சகோதரிகளின்
குழுக்கள் மூலம் கிராமங்கள், குடிசைப் பகுதிகள்,
மருத்துவமனைகள் முதலியவற்றைச் சந்தித்தல்.

❒

300க்கும் மேற்பட்ட முழுநேர மிஷனரிகள் மூலம் அசாம்,
ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், ஒரிசா, கர்நாடகம்,
குஜராத், கேரளம், சத்தீஸ்கார், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம்,
மேற்கு வங்கம், டில்லி, தமிழகம் மற்றும் ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களிலுள்ள
கவனிப்பாரற்ற கிராமங்களிலும் ஆதிவாசிப் பகுதிகளிலும்
சபைகள் நிறுவுதல்.

❒

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம்,
குஜராத்தி, தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம்
ஆகிய மொழிகளில் *''ஆசீர்வாதம்''* எனும் பத்திரிகை, புத்தகங்கள்
மற்றும் ஒலி-ஒளித்தட்டுகள் வெளியிடுதல்.

❒

மருத்துவப்பணி, நிவாரணப்பணி மற்றும் எழுத்தறிவு கற்பித்தல்
மூலம் எளியோர், ஒதுக்கப்பட்டோருக்கு உதவுதல்.

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்! ஆதரியுங்கள்!*

**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**
**சர்ச் காலனி, வேலூர் 632 006**
**தொலைபேசி: 0416-2242943, 2248943**
<hq@bym-india.org>
www.bym-india.org

# ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

***எழுப்புதலுக்கும் நற்செய்தி அறிவிப்பிற்கும் அர்ப்பணிக்கப்பட்டு***
***1971 முதல் இயங்கிவரும், சபைப்பிரிவு பாகுபாடில்லாத,***
***ஒரு திருப்பணி***

❐

எழுப்புதல் முகாம்கள், திருமறைப் பாடங்கள்,
பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்.

❐

பள்ளிகள், கல்லூரிகளில் மாணவ மாணவியருக்கு
ஜெபக்குழுக்கள் உருவாக்குதல்.

❐

முழுநேர ஊழியரல்லாத சகோதர சகோதரிகளின்
குழுக்கள் மூலம் கிராமங்கள், குடிசைப் பகுதிகள்,
மருத்துவமனைகள் முதலியவற்றைச் சந்தித்தல்.

❐

300க்கும் மேற்பட்ட முழுநேர மிஷனரிகள் மூலம் அசாம்,
ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், ஒரிசா, கர்நாடகம்,
குஜராத், கேரளம், சத்தீஸ்கார், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம்,
மேற்கு வங்கம், டில்லி, தமிழகம் மற்றும் ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களிலுள்ள
கவனிப்பாரற்ற கிராமங்களிலும் ஆதிவாசிப் பகுதிகளிலும்
சபைகள் நிறுவுதல்.

❐

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம்,
குஜராத்தி, தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம்
ஆகிய மொழிகளில் *''ஆசீர்வாதம்''* எனும் பத்திரிகை, புத்தகங்கள்
மற்றும் ஒலி-ஒளித்தட்டுகள் வெளியிடுதல்.

❐

மருத்துவப்பணி, நிவாரணப்பணி மற்றும் எழுத்தறிவு கற்பித்தல்
மூலம் எளியோர், ஒதுக்கப்பட்டோருக்கு உதவுதல்.

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்! ஆதரியுங்கள்!*

**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**
**சர்ச் காலனி, வேலூர் 632 006**
**தொலைபேசி: 0416-2242943, 2248943**
<bym@sancharnet.in>
www.BlessingYouthMission.org



**Blank æge with æge number**

*உள்ளே...*

வாலிப உலகம்
கைகொடுக்கும் காரிய சமர்த்தம்
பயில்வோம் பண்பு!
வசந்த காலம்
பெத்த மனம்...
குதூகலம் நிறைந்த நன்னாள்!
மணமகனைத் தெரிந்தெடுப்பது
மணமகளா, பெற்றோரா?
சற்றுப் பொறுத்திருங்களேன்!
கேலி, கிண்டல், கலாட்டா!
மகத்தான சிறுமந்தை